116.

ॐ तत् सत्

# ॥ अथ श्रीदेवीगीता ॥

25 MAY 193 ... TANJORE

# ஸ்ரீ தேவிகீதை

இது

பஞ்சவடி

ஸ்ரீமது ஸ்ரீ நாராயணஜோஸியர் அவர்கள்

வேண்டுகோளின் பேரில்,

தஞ்சை

ஸ்ரீ பிரஹ்மநிஷ்ட பண்டித

குப்புஸ்வாமி மஹாராஜாவர்கள்

இயற்றிய உரையுடன்

ஷடி ஜோஸியர் அவர்கள் முயற்சியால்

தஞ்சை

ஸ்ரீ வித்தியா விநோதினி முத்திராசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

116

112

14562

Copy Right-Registered.

1918. [அணா ௧௦.



வெ. குப்புஸ்வாமி ராஜு.

ॐ

श्रीदेव्यै नमः

# முகவுரை.

ஸ்ரீ வியாஸபகவான் ஜீவர்கள் பவசாகரத்தினின்றுய்தற்பொருட்டுச் சர்வ சுருதி யாகம புராணாதிகளின் சாரபூதமாக ஸ்ரீ தேவியினால் தேவர்களோடு இமகிரிராஜனை முன்னிலையாக்கித் திருவாய்மலர்ந்தருளிய தேவிகீதையினை தேவிபாகவதத்தின் ஏழாவது ஸ்கந்தத்தில் ௩௧-வது அத்தியாயமுதல் ௪௰ அத்தியாயமாக வமைத்திருக்கின்றனர். உலகத்தில் எக்காரியமும் ஜகஜ்ஜனனியான அம்பிகையின் கிருபையின்றி நடைபெறாதென்பது "சக்தியில்லையாயின் ஈசுவராதியரும் செயலற்றவராவர்" "சக்திசம்பந்தமில்லாதபோது பஞ்சகிருத்திய கர்த்தாக்களும் பிரேதவடிவமாவர்" என்றல்முதலிய சூதசங்கிதாதி வசனங்களாலும் "செயலற்ற ஒருவனை உலகத்தார் சக்தியற்றவன் இவனென்று சொல்லுவதைவிட்டு சிவனில்லாதவன், விஷ்ணுவில்லாதவன், ஈசுவரனில்லாதவனென்று சொல்லாமையாகிய சர்வஜனப்பிரயோகத்தினாலும் ஞானசக்தியினாலன்றிக் கேவல அசேதன வஸ்துக்களால் எவ்வாற்றானும் எதுவும்

நடைபெருமையாகிய பிரசித்தமான லோகாநுபவத்தினாலும் தெள்ளிதிற்றெளியக் கூடியதேயாம். மோக்ஷகாமிகளும் உலகத்தில் பாலர்கள் மாதாவினால் பிதாவினை அறிவதுபோல ஜகன்மாதாவான அகண்டாகாரவிருத்தியாகிய அருட்சத்தியென்னும் அம்பிகையினாலேயே பரமபதியாகிய பிதாவினை அறியவேண்டுமென்பது; சர்வசாஸ்திரங்களாலும் "மாயநட்போரையும் மாயாமலமெனுமாதரையும் வீயவிட்டோட்டிவெளியே புறப்பட்டு மெய்யருளாந் தாயுடன்சென்று பின்தாதையைக்கூடிப் பின்றாயைமறந் தேயுமிந்த நிட்டையென்றொழிற் கச்சியேகம்பனே" என்னும் முதியோர் திருவாக்கு முதலியவற்றாலும் நிச்சயிக்கப்பட்டதேயாம். ஆதலால் அம்பிகையின் பிரசாதத்தினைப்பெற விரும்பும் புக்திகாமிகளும் முக்திகாமிகளுமான ஒவ்வொருவராலும் தினந்தோறும் பாராயணம்செய்தற்குரியதாம். இச்கீதையினைப் பொருள்தெரியாது பாராயணஞ்செய்யும் பயனைவிட பொருடெரிந்து பாராயணஞ் செய்வதனாலாகும் பயன் எத்தனையோமடங்கு அதிகமாம். இதனை அர்த்தவிசாரத்தோடு பாராயணஞ்செய்யவும் மூலசுலோகத்தினை படிக்குமாற்றலில்லாதவர் தமிழ்[illegible]

கத்தினை மாத்திரம் பாராயணஞ்செய்யவும் யோக்கியமாக இதற்கு மூலார்த்தமாத்திர மமைந்த சங்கிரகமான ஓர் உரை எளிய தமிழ் நடையில் எழுதித்தரவேண்டுமென்று தேவீ பக்தர் சிலர் கேட்டுக்கொண்டபடி தஞ்சை ஸ்ரீ பிரஹ்மநிஷ்டபண்டித - வி. குப்புஸ்வாமி மகாராஜர் அவர்களால் ஓர் சங்கிரக உரை எழுதப்பட்டது. இக்கீதையின் அரியபெரிய விஷயங்களை அட்டவணையிற் காண்க.

இதனை எல்லோருக்கு முபகாரமாகுமாறு பஞ்சவடி கார்த்திகேயஸ்வாமி மடாலய எஜண்டு பிரஹ்மஸ்ரீ நாராணஜோசியர் அவர்கள் அச்சிட்டு வெளிப்படுத்திய உபகாரம் உலகத்தினரால் என்றும் மறக்கத்தக்கதன்று. இத்தன்மைய உபகாரிகள் நீடுவாழ்க.

ராம. வீ.

## தற்சிறப்பு.

அக்ஷயவாண்டிற் றோன்றி யம்மையினருளா லென்று
மக்ஷயபதத் திருப்போ னருங்குணக் குப்புசாமி
பக்ஷமிலுரை செய்திட்டான் யாமரு ளளிட்டாரு
மக்ஷயவம்மை கீதை யன் பொலபடிக்கு மாதே.

ௐ

# உரைமங்கலம்.

## துண்டிவிநாயகர்.

அண்டர் கோன்முத லாயவத் தேவர்கள்
கொண்ட துயரங் குலைந்து சுகித்திட
பண்டு கயமுகற் பதைக்கக் காய்ந்தவோர்
துண்டி விநாயகன் றுால்கழல் போற்றுவாம்.

## ஸ்ரீ விசுவேசுரர்.

வந்து தம்பதி மரித்திடு முயிர்களைச்
சந்த தாரகந் தந்துமே காத்தலால்
வெந்த நீறணி விச்சுவ நாதனை
மிந்து சேகர னிணையடி யேத்துவாம்.

## விசாலாக்ஷியம்மை.

சதியெனுந் தேவி தேகஞ் சார்ந்தவப் பதிக டம்மில்
மதிமுக நாசி வீழ்ந்த மகிமையால் சிறப்புற் றெல்லாப்
பதிகளின் மேலாங் காசிப் பதியினில் வைகியார்க்கும்
கதிதரு விசாலக்கண்ணி கழலிணை முடிமேற் கொள்
[வாம்

## அந்நபூரணியம்மை.

மன்னியே பிரளயத்தும் வதிந்திடு மதனாலென்றுந்
தன்னிக ரில்லாக்காசித் தலத்தினில் வைகுமாக்கள்
துன்னிய பசிநோய்மிக்குத் துயருறா தன்னமீயு
மந்நபூ ரணியாமந்த வம்பிகை பதங்கள் போற்றி.

## காலபைரவர்.

காசியின் மரிக்கு மாக்கள் கதிபெறக் கருணை மிக்கே
ஆசுறு மவர்கள் பாவ மனைத்துமே நொடியு ளேக
கூசிடா தவரை வாட்டிக் கொடுந்துய ருறுத்து மேன்
[மைக்
காசிவாழ் வயிரவர் *முன் கழன்றிடும் வினைக லெல்
[லாம்.

## ஆசாபூரகர்.

ஆ சாபாசத் தழுந்தியஜீவர்க
ளீசா வென்றினி தேத்தியின்புற
வாசாபூரக வைங்கர னயமர்
தேசார்தேசிகன் றிருவடிவாழ்கவே.

---

* முன் = நினை அல்லது சந்நிதியில்.

# உரைமங்கலம்.

## ஸ்ரீ சற்குரு.

தேசினால் யாவு மாகித் திகழ்ந்திடு பிரம மேயாய்
வாசனை யெல்லா நீங்கி மன்னுக மெய்ப் பதத்தென்
றாசிலா துபதேசித்த வருட்குரு பாதம் போற்றி
ஏசிலா தேவீகீதைக் கியற்றுவ னுரையை யானே.

# ஸ்ரீ தேவிகீதையின்

## விஷயானுக்கிரமணிகை.


| நம்பர். | விஷயங்கள். | பக்கம். |
| --- | --- | --- |
| க. | பார்வதி ஹிமாலயனினின்று பிறத்தல் .... .... .... | எ |
| உ. | ஆத்மதத்துவ நிரூபணம் .... | நஎ |
| ந. | விசுவரூப தரிசனம் .... .... | ருஅ |
| ச. | வைராக்கிய நிரூபணமும் ஞானத்தின் மோக்ஷார்த்த தத்துவமும். | எசூ |
| ரு. | மந்திரசித்தியின் சாதனம் .... | க00 |
| சூ. | பிரஹ்மதத்துவ நிரூபணம் .... | கஉரு |
| எ. | பக்தி மகிமை .... .... | கச0 |
| அ. | தேவியின் ஸ்தானங்களும் மகோற்சவங்களும் விரதங்களும் .... | கருஅ |
| சு. | பகவதியின் பூஜனம் .... | களஎ |
| க0. | பாஹிய பூஜா விதானம் .... | கசுரு |



॥ श्रीआधारशक्त्यै नमः ॥

सत्त्वादिस्थै रगणितगुणै र्हन्तविश्वं प्रसूय
व्याधत्ते प्रहसनकरीं या कुमारीति संज्ञाम् ॥
मोहध्वान्त प्रसरविरति र्विश्वमूर्तिः समन्ता
दाद्या शक्तिः स्फुरतु मम सा दीपवद्देहगेहे ॥१॥

சத்துவாதி யளவில்லாச் சார்குணங்க
டம்மாலே யெல்லா மீன்றும்

மெத்தவுமீ தாச்சரிய நகைக்கிடமா
மேவுகின்றாள் குமரிப் பேரை

மித்தையாகு மோகவிருள் விரியாது
வெருட்டுமொரு விசுவ மூர்த்தி

அத்தகைய வாதிசத்தி விளக்கிணையொத்
தவிருக வென் றேக வீட்டில்.

எவள் சத்துவாதியிலுள்ள கணக்கில்லாத குணங்களாய் எல்லாவற்றையும் பிரசவித்தும் ஆச்சரியம் நகைப்பைத் தருவதான குமாரி யென்னும் பெயரைத் தரிக்கின்றனளோ, மோக விருளின் விரிவைக்கெடுப்பவளோ; விசுவமூர்த்தியா யிருக்கின்றனளோ: அந்த ஆதிசக்தி எனது தேகமாகிய வீட்டில் தீபம்போல எப்புறத்துமாகிப் பிரகாசிக்குக.

ॐ

श्रीगणेशाय नमः

श्रीजगदम्बायै नमः

# ஸ்ரீ தேவிகீதை.

## முதல் அத்தியாயம்.

जनमेजय उवाच ॥

धराधराधीशमौलावाविरासीत्परंमहः ॥
यदुक्तंभवतापूर्वं विस्तरात्तद्वदस्वमे ॥ १ ॥

ஜனமேஜயர் சொல்லலாயினார்:—முனீந்திரரே!
'ஹிமாலயத்தின் முடியில் பரம்(மேலான) ஜோ
தி வெளிப்பட்டது' என்று முன் தம்மாற் கூறி
யது எதுவோ அதனை இப்போது எனக்கு விஸ்
தாரமாய்ச் சொல்லியருள்வீராக. (க)

कोविरज्येतमतिमान्पिबञ्छक्तिकथामृतम् ॥
सुधांतुपिबतांमृत्युः सनैतच्छृण्वतोभवेत् ॥ २ ॥

எந்தப்புத்திமான் சக்தியின் கதாமிருதத்தி
னைப் பருகிப் போதுமென்று உபரதியடைவான்
அமுதத்தைப் பருகியவ(தேவ)ர்கட்கு ஒருகால்

மரணமுண்டாம். அது (மரணம்) இதனைக் கேட்பவர்கட்கு உண்டாகாது. (உ)

व्यास उवाच ।

धन्योऽसि कृतकृत्योऽसि शिक्षितोऽसि महात्मभिः ।
भाग्यवानसि यद्देव्यां निर्व्याजाभक्तिरस्तिते ॥ ३ ॥

வியாஸர் சொல்லலாயினார் :— அரசனே! உனக்கு எதனால் தேவியினிடத்தில் நிமித்தமின்றிய(ஏகாந்த)பக்தியிருக்கின்றதோ, அதனால் நீ தன்னியன்; கிருதகிருத்தியன்; மகாத்மாக்களால் சிக்ஷிக்கப்பட்டவன்; பாக்கியவான்.

शृणुराजन्पुरावृत्तं सती देहाग्निभर्जिते ॥
भ्रांतः शिवस्तु बभ्राम क्वचिद्देशे स्थिरोऽभवत् ४

அரசனே! முன் நிகழ்ந்ததனைக் கேட்பாயாக. சிவபெருமான் பிராட்டியின் தேகம் அக்கினியில் தகிக்கப்பட்டபோது பிராந்தராய்ச் சுற்றித்திரிந்து, ஓரிடத்தில் நிலைத்தவரானார். ()

प्रपंचभानरहितः समाधिगतमानसः ॥
ध्यायन्देवीस्वरूपंतु कालंनिन्येसआत्मवान् ॥ ५ ॥

அங்கு அவர் இந்திரியஜயமுள்ளவராய், பிரபஞ்சத்தோற்றமின்றியவராய், சமாதியடைந்த மனத்தினராய், தேவியின் சொரூபத்தினைத் தியானித்துக்கொண்டே காலத்தினைக் கழித்தார். (௫)

सौभाग्यरहितं जातं त्रैलोक्यं सचराचरम् ॥
शक्तिहीनं जगत्सर्वं साब्धिद्वीपं सपर्वतम् ॥ ६ ॥

அப்போது சராசரத்தோடுகூடிய மூன்றுலகும் சௌபாக்கியமின்றியதாயிற்று. பர்வதத்தோடுகூடியதும் சமுத்திரதீபங்களோடுகூடியதுமான ஜகத்துமுழுவதும் சக்தியின்றியதாயிற்று. (௬)

आनंदः शुष्कतांयातः सर्वेषांहृदयांतरे ॥
उदासीनाः सर्वलोकाश्चिंताजर्जरचेतसः ॥ ७ ॥

எல்லோர் இதயத்துள்ளும் ஆநந்தம் உலர்ச்சியினை அடைந்தது. எல்லா ஜனங்களும் சிந்தையாற்றளர்ந்த சித்தத்தினராய் உதாசின(தீனத்தன்மையோடிருப்பவ)ராணார்கள். (௭)

सदादुःखोदधौमग्ना रोगग्रस्तास्तदाऽभवन् ॥
ग्रहाणांदेवतानाञ्च वैपरीत्येनवर्तनम् ॥ ८ ॥

அப்போது எல்லோரும் எப்போதும் துக்க சாகரத்தில் மூழ்கியவர்களாய் ரோகக்கிரஸ்த (நோயால் பிடிக்கப்பட்டவ)ராஞர்கள். கிரகங்கட்கும் தேவதைகட்கும் விபரீதத்தன்மையான இருப்பு நேர்ந்தது. (அ)

अधिभूताधिदैवानां सत्यभावानृपाऽभवन् ॥

अथाऽस्मिन्नेवकालेतु तारकाख्योमहासुरः ॥ ९ ॥

அதிபூதாதி தைவங்களின் இருப்பும் விபரீதமாயிற்று. அரசர் மனைவியில்லாதவராஞர்கள். பின் அதேகாலத்தில் தாரகனென்னும் மகாசுரன். (கூ)

ब्रह्मदत्तवरोदैत्योऽभवत्रैलोक्यनायकः ॥

शिवौरसस्तुयः पुत्रः सतेहंताभविष्यति ॥ १० ॥

பிரஹ்மாவினுல் கொடுக்கப்பட்ட வரமுடைய தைத்தியனுய் மூன்றுலோகங்கட்கும் நாயகனுனன். சிவபெருமான் வயிற்றிற் பிறக்கும் புத்திரன் எவனே அவன் உன்னைச் சங்கரிப்பவனுவான். (கo)

इतिकल्पितमृत्युः सदेवदेवैर्महासुरः ॥
शिवौरससुताभावा ज्जगर्जचननंदच ॥ ११ ॥

என்று இப்படித் தேவ்தேவர்களால் (பிரஹ்மாவினால்) கற்பிக்கப்பட்ட மரணமுடையவனாகிய அந்த மகாசுரன், சிவன் வயிற்றுப் பிள்ளையின்மையால் கர்ஜித்தான்; களித்தான்.

तेनचोपद्रुताःसर्वे स्वस्थानात्प्रच्युताःसुराः ॥
शिवौरससुताभावा च्चिंतामापुर्दुरत्ययाम् ॥ १२ ॥

அவனால் உபத்திரவப்படுத்தப்பட்டவர்களாய்த் தேவர்களெல்லோரும் தமது ஸ்தானங்களினின்று நழுவினவர்களாய்ச் சிவன் வயிற்றுப்பிள்ளையில்லாமையால் கடத்தற்கரிய சிந்தையினை யடைந்தார்கள். (கஉ)

नांगनाशंकरस्यास्ति कथंतत्सुतसंभवः ॥
अस्माकंभाग्यहीनानां कथंकार्यंभविष्यति ॥ १३ ॥

சங்கரருக்கு (சக்திதேவி பிராணத்தியாகம் செய்தமையால் இப்போது) பத்தினியில்லை. அவருக்குப் புத்திரோற்பத்தி எவ்வாறு?

பாக்கியஹீனர்களாகிய நமதுகாரியம் எவ்வாறு நிறைவேறும்? (கந)

इतिचिंतातुराःसर्वे जग्मुर्वैकुण्ठमंडले ॥
शशंसुर्हरिमेकांते सचोपायंजगादह ॥ १४ ॥

என்றிவ்வாறு சிந்தாதுரர்களாய் எல்லோரும் வைகுண்டமண்டலத்தில் சென்று ஏகாந்தத்தில் விஷ்ணுபகவானிடத்தில் யாவும் நிவேதித்தனர். அவரும் உபாயத்தினைச் சொல்லியருளினர். (கச)

कुतश्चिंतातुराःसर्वे कामकल्पद्रुमाशिवा ॥
जागर्तिभुवनेशानी मणिद्वीपाधिवासिनी ॥ १५ ॥

தேவர்களே! மணித்வீபத்தில் வசிப்பவளும், விரும்பியதையளிக்கும் கல்பவிருக்ஷமும், சிவையும் (கல்யாணத்தினைத் தருபவளும்), புவனேசுவரியுமான அம்பிகை நம்பொருட்டு எப்போதும் விழித்திருக்க ஏன் சிந்தாதுரராகின்றீர்கள். (கரு)

अस्माकमनयादेव तदुपेक्षास्तिनान्यथा ॥
शिक्षवेयंजगन्मात्रा कृतास्मच्छिक्षणायच ॥ १६ ॥

நமது இவ்வபராதத்தினாலேயே அவளது உபேக்ஷையாம்; வேறு விதத்தினாலில்லை. ஜகன் மாதாவினால் செய்யப்பட்ட இந்தச்சிக்ஷை நம்மை அநுக்கிரஹிக்தற் பொருட்டேயாம். (விநாசத்தின் பொருட்டன்று.) (கசு)

लालनेताडनेमातु र्नाकारुण्यं यथार्भके ॥
तद्वदेवजगन्मातु र्नियंत्र्यागुणदोषयोः ॥१७॥

எப்படித் தாய்க்குத் தனது குழந்தையின் கொஞ்சுதலிலும், அடித்தலிலும் காருண்யமி ன்மையில்லையோ அதுபோலவே உலகத்தினை நடத்துபவளான ஜகன்மாதாவுக்கும் உங்களது குணதோஷங்களில் தயையின்மையில்லையாம்.

अपराधोभवत्येव तनयस्यपदेपदे ॥
कोपरः सहतेलोके केवलंमातरंविना ॥ १८ ॥

புத்திரனது அபராதம் பதங்கடோறும் (அடிக்கடி) உண்டாகவே செய்யும். அதனை உலகத்தில் தாயையன்றி வேறு யார் சகிப்பார்?

तस्माद्यूयं परांबां तां शरणंयातमाचिरम् ॥
निर्व्याजया चित्तवृत्त्या सावःकार्यंविधास्यति ॥ १९

ஆதலால் நீங்கள் பராம்பிகையாகிய அவளை ஏகாந்தபக்தியோடு சரணடையுங்கள். தாமதிக்கவேண்டாம், அவள் உங்கள் காரியத்தினைச் செய்வாள். (கக)

इत्यादिश्यसुरान्सर्वा न्महाविष्णुः स्वजायया ॥
संयुतोनिर्जगामाऽऽशु देवैःसहसुराधिपः ॥ २० ॥

இவ்வாறு தேவர்களெல்லோருக்கும் கட்டளையிட்டுச் சுராதிபரான மகாவிஷ்ணு தமது பத்தினியாகிய இலக்ஷ்மியோடு கூடியவராய் (தேவியின்ராதனத்தின் பொருட்டு)த் தேவர்களோடு விரைவில் புறப்பட்டார். (உ௦)

आजगाममहाशैलं हिमवन्तंनगाधिपम् ॥
अभवंश्चसुराःसर्वे पुरश्चरणकर्मिणः ॥ २१ ॥

பர்வதராஜனும் மகாசைலமுமான இமாலயத்திற்கு வந்தனர். தேவர்களெல்லோரும் புரச்சரணகர்மமுடையவரானார்கள். (உக)

अंबायज्ञविधानज्ञा अंबायज्ञंचचक्रिरे ॥
तृतीयादिव्रतान्याशु चक्रुः सर्वेसुरानृप ॥ २२ ॥

நிருபனே! அம்பாள் யஞ்ஞவிதான முணர்ந்தவர்கள் அம்பாள் யஞ்ஞத்தினைச் செய்தனர். எல்லாத்தேவர்களும் இருதீயாமுதலியவிரதங்களை விரைவிற் செய்தனர். (உஉ)

केचित्समाधिनिष्णाताः केचिन्नामपरायणाः ॥
केचित्सूक्तपराःकेचि न्नामपारायणोत्सुकाः ॥ २३ ॥

சிலர் (தேவியின்) சமாதியில் நிலைத்தவர்களும், சிலர் நாமபராயணர் (நிரந்தரம் அவள் நாமத்தை ஜபிப்பவர்)களும், சிலர் சூக்தபரர் (தேவிசூக்தத்தினை ஜபிப்பவர்)களும், சிலர் * நாமபாராயணத்தில் கிளர்ச்சியுள்ளவர்களும், (உங)

मंत्रपारायणपराःकेचि त्कृच्छ्रादिकारिणः ॥
अन्तर्यागपराःकेचि त्केचिन्न्यासपरायणाः ॥ २४ ॥

---

* தந்திரராஜாமுதலிய தந்திரங்களில் சொல்லப்பட்டநித்தியகாலபாராயணத்தில்.

சிலர் * மந்திரபாராயணபரர்களும், சிலர் கிருச்சிர சாந்திராயணாதிவிரத மநுஷ்டிப்பவர்களும்; சிலர் அந்தர்யாக (மானஸபூஜா) பரர்களும், சிலர் நியாஸபராயணர்களுமானார்கள். (௨௪)

ह्लेखयापराशक्तेः पूजांचक्रुरतंद्रिताः ॥
इत्येवंबहुवर्षाणि कालोऽगाज्जनमेजय ॥ २५ ॥

சிலர் சோம்பலின்றியவர்களாய் மாயாபீஜமந்திரத்தினால் பராசக்தி யாகிய புவனேசுவரியின் பூஜையினைச்செய்தனர். ஜநமேஜயனே! இவ்வாறு வெகு வருஷகாலங்கழிந்தது. (௨௫)

अकस्माच्चैत्रमासीय नवम्यांचभृगोर्दिने ॥
प्रादुर्बभूवपुरस्तन्महः श्रुतिबोधितम् ॥ २६ ॥

(பின்னொருநாள்) சைத்திரமாஸத்தின் நவமியில் வெள்ளிக்கிழமையில் சுருதியில் போதிக்

---

* மந்திரம் " மாயா குண்டலினீ கிரியா மதுமதீ சுத்தா காலீ கலா மாதங்கீ விஜயா பகவதீ தேவீ சிவா சாம்பவீ ,, என்னும் சுலோகரீதியாகப் புவனேசுவரீ பாரிஜாதத்தில் சொல்லப்பட்டது எதுவோ அதன் பாராயணதற்பரர்.

கப்பட்டுள்ள அந்த (சக்திசம்பந்தமான பரம்) ஜோதியானது அவர்கள் முன் அகஸ்மாத்தாக வெளிப்பட்டது. (உசு)

चतुर्दिक्षुचतुर्वेदै र्मूर्तिमद्भिरभिष्टुतम् ॥
कोटिसूर्यप्रतीकाशं चंद्रकोटिसुशीतलम् ॥ २७ ॥

நான்கு திக்குகளிலும் மூர்த்திகரமான நான்கு வேதங்களாலும் துதிக்கப்பட்டதும், கோடிசூரியனைப் போன்ற ஒளியுடையதும், கோடிசந்திர சமானமான நற்சீதலமுடையதும். (உஎ)

विद्युत्कोटिसमानाभ मरुणंतत्परंमहः ॥
नैवचोर्ध्वंनातिर्यक्च नमध्येपरिजग्रभत् ॥ २८ ॥

கோடி மின்னலுக்குச் சமானமான அருண (செந்) நிறமுடையதுமான அந்தப் பரஞ்சோதி மேலிலும் குறுக்கிலும் மத்தியிலும் சென்று பரிச்சின்னப்படவில்லை (எங்கும் வியாபித்திருந்தது). (உஅ)

आद्यंतरहितं तत्तु नहस्ताद्यंगसंयुतम् ॥
नचस्त्रीरूपमथवा नपुंरूपमथोभयम् ॥ २९ ॥

அது (பரஞ்சோதி) ஆதியந்த மின்றியதாம். கை கால்முதலிய அங்கங்களோடு கூடியதன்று; ஸ்திரீவடிவமுமன்று; புருஷவடிவமுமன்று; அல்லது இரு(அலி)வடிவமுமன்று. (உ௯)

दीप्त्यापिधानं नेत्राणां तेषामासीन्महीपते ॥
पुनश्च धैर्यमालंब्य यावत्ते ददृशुः सुराः ॥ ३० ॥

அரசனே! அச்சோதியின் ஒளியால் அத்தேவர்களது கண்கள் மூடப்பட்டன. மறுபடியும் அத்தேவர்கள் தைரியத்தினைப் பற்றி எப்போது கண்டிறந்து பார்த்தார்களோ, (௩௰)

तावत्तदेवस्त्रीरूपेणाऽभाद्दिव्यमनोहरम् ॥
अतीवरमणीयांगीं कुमारीं नवयौवनाम् ॥ ३१ ॥

அப்போதே அப்பரஞ்சோதியானது மனோஹரமான திவ்விய ஸ்திரீரூபமாகப் பிரகாசித்தது. மிகஇரமணீயாங்கமுடையவளும், குமாரியும், புதுயௌவனமுடையவளும், (௩௧)

उद्यत्पीनकुचद्वंद्व निंदितांभोजकुड्मलाम् ॥
रणत्किंकिणिकाजाल सिंजन्मंजीरमेखलाम् ॥ ३२ ॥

தாமரைமொட்டுகளை நிந்திக்கும் இரண்டு உயர்ந்த பருத்தஸ்தனங்களை யுடையவளும், ஒலிக்கின்ற கிண்கிணிக் கூட்டத்தினையும் சப்திக்கின்ற நூபுரமேகலையினையுமுடையவளும்,

कनकांगदकेयूर ग्रैवेयकविभूषिताम् ॥
अनर्घ्यमणिसंभिन्न गलबंध विराजिताम् ॥ ३३ ॥

பொன்னாலாகிய புயவணி தோளணி கழுத்தணிகளால் அலங்கரிக்கப்பட்டவளும், விலைமதிக்கப்படாத இரத்தினங்களிழைத்த அட்டிகை பதக்கமுதலியவற்றால் சோபிக்கப்பட்டவளும், (௩௩)

तनुकेतकसंराज न्नीलभ्रमरकुंतलाम् ॥
नितंबबिंबसुभगां रोमराजिविराजिताम् ॥ ३४ ॥

இளமையான தாழமடலில்விளங்குகின்ற நீலவண்டு போன்ற கூந்தலுடையவளும், நிதம்பபிம்பங்களால் சோபையுடையவளும், நாபியின் ரோமராசிகளால் அழகுபொருந்தியவளும், ()

कर्पूरशकलोन्मिश्र तांबूलपूरिताननाम् ॥
कनत्कनकताटंक विटंकवदनांबुजाम् ॥ ३५ ॥

கர்ப்பூரத்துண்டங்களோடு கலந்த தாம்பூலம் நிறைந்த வாயினளும், ஒளிவீசும் பொன்னோலை விளங்கும் அழகிய முகத்தாமரையினளும், ()

अष्टमीचंद्रबिंबाभ ललाटामायतभ्रुवम् ॥
रक्तारविंदनयना सुनसांमधुराधराम् ॥ ३६ ॥

அஷ்டமி சந்திரபிம்பம் போன்ற நெற்றியினளும், விரிந்தபுருவத்தினளும், செந்தாமரை யொத்த நேத்திரமுடையவளும், உயர்ந்த நாசியினளும், மதுரமான அதரமுடையவளும், ()

कुंदकुड्मलदंताग्रां मुक्ताहारविराजिताम् ॥
रत्नसंभिन्नमुकुटां चंद्ररेखावतंसिनीम् ॥ ३७ ॥

முல்லையரும்பொத்த பல் நுனிகளுடையவளும், முத்துமாலைகளால் பிரகாசிப்பவளும், இரத்தினமிழைத்த கிரீடத்தினளும், சந்திர ரேகையினைத் தரித்தவளும், (௩௭)

मल्लिकामालतीमाला केशपाशविराजिताम् ॥
काश्मीरबिंदुनिटिलां नेत्रत्रयविलासिनीम् ॥ ३८ ॥

மல்லிகை மாலதிபுஷ்பமாலைகள் பொருந்திய கேசபாசங்களால் சோபிக்கின்றவளும், காஸ்மீரபிந்து (கஸ்தூரி திலகம்) அணிந்த நெற்றியினளும், நேத்திரமூன்றினால் பிரகாசிப்பவளும்,

पाशांकुशवराभीति चतुर्बाहुंत्रिलोचनाम् ॥
रक्तवस्त्रपरीधानां दाडिमीकुसुमप्रभाम् ॥ ३९ ॥

பாசம் அங்குசம் வரம் அபயம் என்பவற்றைப் பொருந்திய நாற்கரத்தினளும், * முக்கண்ணியும், சிவப்புவஸ்திர முடுத்தவளும் மாதுளம்பூ நிறத்தினளும், (௩௯)

सर्वशृंगारवेषाढ्यां सर्वदेवनमस्कृताम् ॥
सर्वाशापूरिकां सर्वमातरंसर्वमोहिनीम् ॥ ४० ॥

சகல சிங்காரவேஷம் பொருந்தியவளும், சர்வதேவர்களாலும் நமஸ்கரிக்கப்படுபவளும், சர்வ ஆசைகளையும் நிரப்புகிறவளும், சர்வமாதாவும், சர்வமோகினியும், (௪0)

---

* திரிலோசனும் என்று மீண்டும் கூறியது கண்களின் அதிசௌந்தரியத்தினை அறிவித்தற்பொருட்டாம்.

ளும், விசேஷமாய்ப் பிரகாசிப்பவளும், கர்ம பலங்களில் சேவிக்கப்படுபவளும், † தூர்க் கையு (அடைதற்கரியவளு)மான அத்தேவி யினை யான் சரணமடைகின்றேன். கடக்கயோக் கியமான சம்சாரத்தினைக் கடக்கச்செய்பவட்கு நமஸ்காரம். (சரு)

देवींवाचमजनयंतदेवास्तां विश्वरूपाःपशवोवदंति
सानोमंद्रेषमूर्जंदुहानाधेनुर्वागस्मानुपसुष्टुतैतु ४६

* எந்த தேவியான (பிரகாசிக்கின்ற) வைகரிவடிவவாக்கினை தேவர்கள் (பிராணன் கள்) பயந்தனவோ அதனைப்பசுக்கள் (யாம் முதலியோர்) விசுவ(வெகு)ரூபங்கள் கூறுகின் றனர். (சர்வவியவகார சித்தியின்பொருட்டு)

---

வைரோசனீ என்பதற்கு விரோசனன் சூரியனது பீஜம் ஹகாரமாதலால் அந்த ஹகாரத்தோடு கூடியவள் என்றும் பொருளாம். ஆகவேமாயா பீஜரூபியான துர்க்கையினைச் சரணமடைகின்றேன் என்று கொள் ளப்படும்.

† துர்க்கை அஷ்டாங்கயோகாதி துக்கரூப ஆயாசத் தினால் (ஞானத்தால்) அடையப்படுபவள்.

* இதுவும் இருக்கு மந்திரமாம்.

அந்தக்காமதேனுவும் மந்திரையும் (பிரதிஷ்டைமான தான முதலியவற்றால் மதத்தையுண்டு பண்ணுகிறவளும்). அந்தபலத்தை தருபவளுமான வாக்ரூபபகவதி நலமுடையவளாய்ப் பிராப்தமாகுக. (சகூ)

कालरात्रींब्रह्मस्तुतां वैष्णवींस्कंदमातरम् ॥
सरस्वतीमदितिंदक्ष दुहितरंनमामःपावनांशिवाम् ॥

* காளராத்திரியும் (காலனைக்கொலைப்பவளும்) பிரஹ்மாவினால் துதிக்கப்பட்டவளும், விஷ்ணுசக்தியான லக்ஷ்மியும், ஸ்கந்தருடைய மாதாவும் (சிவசக்தியான பார்வதியும்) சரஸ்வதி (பிரஹ்மசக்தி)யும், அதிதியும் (தேவமாதாவும்,) தக்ஷன்மகளும், பவித்திரமானவளும், சிவை(புவனேசுவரி)யுமான உன்னை நமஸ்கரிக்கின்றோம். (சஎ)

महालक्ष्म्यैचविद्महे सर्वशक्त्यैचधीमहि ॥
तन्नोदेवीप्रचोदयात् ॥ ४८ ॥

---

* இது தேவி அதர்வசிரசில் உள்ளமந்திரம்.

* மகாலக்ஷ்மியினை அறிகின்றோம் சர்வ சக்தியினைத் தியானிக்கின்றோம். தேவி! எங்களை அதில் (அனாது சொரூபாநு சந்தானத்தில்) பிரேரிப்பிப்பாளாக. (சஅ)

नमो विराट्स्वरूपिण्यै नमः सूत्रात्ममूर्तये ॥
नमोऽव्याकृतरूपिण्यै नमः श्रीब्रह्ममूर्तये ॥ ४९ ॥

விராட்ஸ்வரூபியான உனக்கு நமஸ்காரம். சூத்திராத்ம மூர்த்தியான உனக்கு நமஸ்காரம். மகதாதிவியாகிருத வடிவினளாகிய உனக்கு நமஸ்காரம். ஸ்ரீ பிரஹ்மவடிவினளாகிய உனக்கு நமஸ்காரம். (சகூ)

यदज्ञानाज्जगद्भाति रज्जुसर्पस्रगादिवत् ॥
यज्ज्ञानाल्लयमाप्नोति नुमस्तां भुवनेश्वरीम् ॥ ५० ॥

எவளை அறியாததினால் உலகம் பழுதையிற் பாம்பு மாலை முதலியவற்றைப் போல விளங்குகின்றதோ, எவளை அறிதலால் இலயமடைகின்றதோ, அத்தன்மைய புவனேசுவரியினை நமஸ்கரிக்கின்றோம். (௫0)

---

* இது தேவி அதர்வசிரசிலுள்ள காயத்திரி.

नुमस्तत्पद लक्ष्यार्थां चिदेकरसरूपिणीम् ॥
अखंडानन्दरूपां तां वेदतात्पर्य भूमिकाम् ५१

தத்துவமஸிமகா வாக்கியத்துள்ள தத் என்னும் பதத்தின் இலக்ஷியார்த்தமானவளும், சிதேக (ஞானைக) ரஸவடிவினளும், அகண்டாநந்தவடிவினளும், சகல வேதங்களின் தாற்பரிய பூமியானவளுமான அவளை வணங்குகின்றோம், (ருக)

पंचकोशातिरिक्तांता मवस्थात्रयसाक्षिणीम् ॥
पुनस्त्वंपदलक्ष्यार्थां प्रत्यगात्मस्वरूपिणीम् ॥५२ ॥

பஞ்சகோசங்கட்கப்பாற்பட்டவளும், அவஸ்தை மூன்றற்கும் சாக்ஷியானவளும, (தத்துவமஸிமகா வாக்கியத்துள்ள) துவம் என்னும் பதத்தின் இலக்ஷியார்த்தமானவளும், பிரத்தியகாத்மஸ்வரூபமானவளுமான தேவியை நமஸ்கரிக்கின்றோம். (ருஉ

नमःप्रणवरूपायै नमोह्रींकारमूर्तये ॥
नानामंत्रात्मिकायैते करुणायैनमोनमः ॥ ५३ ॥

பிரணவவடிவினளுக்கு நமஸ்காரம். ஹ்ரீங் காரவடிவினளுக்கு நமஸ்காரம். நாநாமந்திர வடிவினளும் கருணாஸ்வரூபியுமாகிய உனக்கு நமஸ்காரம் நமஸ்காரம். (ருங)

इतिस्तुतातदादेवैर्मणिद्वीपाधिवासिनी ॥
प्राहवाचामधुरयामत्तकोकिलानिस्वना ॥ ५४ ॥

இவ்வாறு தேவர்களால் துதிக்கப்பட்டவளாய் மணித்வீபவாசினியான அம்பிகை அப்போது மதர்த்தகுயிலின் குரலுடையவளாய் மதுரமான வாக்கினால் சொல்லலாயினாள். (ருச)

श्रीदेव्युवाच ॥
वदंतुविबुधाःकार्यं यदर्थमिहसंगताः ॥
वरदाहंसदाभक्त कामकल्पद्रुमाऽस्मिच ॥ ५५ ॥

ஸ்ரீ தேவி கூறலாயினாள் :— தேவர்களே! எதன் பொருட்டு இங்குக்கூடியிருக்கிறீர்களோ அக்காரியத்தினைச் சொல்லுங்கள், எப்போதும் பக்தர்களது காமத்திற்குக் கல்பவிருக்ஷமாயும் வரத்தைத் தருபவளுமாயிருக்கின்றேன். (ருரு)

तिष्ठंत्यांमयिकाचिंता युष्मांकंभक्तिशालिनाम् ॥
समुद्धरामिमद्भक्तान्दुःखसंसारसागरात् ॥ ५६ ॥

யானுளபோது பக்திசாலிகளான உங்கட்கு என்ன சிந்தையுளது? என் பக்தர்களைத் துக்க சம்சார சாகரத்தினின்று கரையேற்றுகின்றேன். (ருகா)

इति प्रतिज्ञां मेसत्यां जानीथ विबुधोत्तमाः ॥
इति प्रेमाकुलांवाणीं श्रुत्वा संतुष्ट मानसाः ॥५७॥

தேவசிரேஷ்டர்களே! இத்தன்மையவெனது பிரதிஞ்ஞையினைச் சத்தியமாக அறியுங்கள் என்னும் இத்தன்மைய அன்புமிக்க வார்த்தையினைக் கேட்டுச் சந்துஷ்ட சித்தரானார்கள். ()

निर्भयानिर्जराराजन्नूचुर्दुःखं स्वकीयकम् ॥
देवाऊचुः ॥
नाऽज्ञातंकिंचिदप्यत्र भवत्याऽस्तिजगत्त्रये ५८
सर्वज्ञयासर्वसाक्षि रूपिण्यापरमेश्वरी ॥
तारकेणाऽसुरेंद्रेण पीडिताःस्मोदिवानिशम् ॥ ५९

அரசனே! பயமின்றிய தேவர்கள் தமது துக்கத்தினைச் சொன்னார்கள். தேவர் கூறலாயினார் :—ஏ! பரமேசுவரி! எல்லாமறிபவளும் எல்லாச் சாக்ஷிவடிவினளுமாகிய உன்னால் அறியப்படாதது எதுவும் மூன்றுலகத்திலுமில்லை. தாரகனாகிய அசுரேந்திரனால் பகலுமிரவும் பீடிக்கப்பட்டவர்களாயிருக்கின்றோம். (ருஅ) (ருகூ)

शिवांगजाद्वधस्तस्य निर्मितोब्रह्मणाशिवे ॥
शिवांगनातुनैवास्ति जानासित्वंमहेश्वरि ॥ ६० ॥

சிவையே! சிவன் வயிற்றுப் பிள்ளையால் அவனது வதம் பிரம்மாவினால் நிர்மிக்கப்பட்டுள்ளது. இப்போது சிவனுக்குப் பத்தினி இல்லை என்பதனை மகேசுவரீ! நீ அறிவாய். ()

सर्वज्ञपुरतःकिंवा वक्तव्यंपामरैर्जनैः ॥
एतदुद्देशतःप्रोक्त मपरंतर्कयांबिके ॥ ६१ ॥

எல்லாமுணர்ந்தவர் முன்னாகப் பாமர ஜனங்களால் சொல்லத்தக்கது யாதுளது? இது உத்தேசமாகச் சொல்லப்பட்டது. மற்றதனை அம்பிகையே! நீயே ஊகித்தறிக. (சுக)

सर्वदाचरणांभोजे भक्तिःस्याच्चवनिश्चला ॥
प्रार्थनीयमिदंमुख्य मपरंदेहहेतवे ॥ ६२ ॥

எப்போதும் உனது சரணாரவிந்தத்தில் நிச்சலமான பக்தியிருக்க வேண்டுமென்னுமிது முக்கியமான பிரார்த்தனையாம். மற்றையது தேகாபிமான நிமித்தமானதாம். (௬௨)

इतितेषांवचःश्रुत्वा प्रोवाचपरमेश्वरी ॥
ममशक्तिस्तुयागौरी भविष्यतिहिमालये ॥ ६३ ॥

இத்தன்மைய அவர்களது வார்த்தையினைக் கேட்டுப் பரமேசுவரி சொல்லலாயினள்:— எந்த எனது சக்தி கௌரி ரூபயாக இமாலயத்தில் உண்டாவளோ. (௬௩)

शिवायसाप्रदेयास्यात्सावःकार्यंविधास्यति ॥
भक्तिर्मच्चरणांभोजे भूयाद्युष्माकमादरात् ॥ ६४ ॥

அவள் சிவனுக்குக்கொடுக்கத் தக்கவளாவள் அவள் (புத்திரப்பேற்றின் வாயிலாக) உங்கள் காரியதாரகா சுரவதத்தினைச் செய்வாள். அவளுடைய சரணாம் புஜத்தில் உங்களுக்கு ஆதரவோடு பக்தியுண்டாகுக. (௬௪)

हिमालयोहिमनम्ना मामुपास्तेऽतिभक्तितः ॥
ततस्तस्यगृहेजन्म ममप्रियकरंमतम् ॥ ६५ ॥

ஹிமாலயனும் என்னை மிகுந்த பக்தியாக மனதோடு உபாசிக்கின்றான். ஆதலால் அவனது வீட்டில் எனது ஜன்மம் பிரியகரமாகக் கருதப் பட்டதாம். (சுரு)

व्यासउवाच ॥
हिमालयोऽपितच्छ्रुत्वा ऽत्यनुग्रह करंवचः ॥
बाष्पैः संरुद्धकंठाक्षो महाराज्ञीं वचोऽब्रवीत् ॥६६॥

வியாஸர் சொல்லலாயினார் :— ஹிமாலயனும் மிக்க அநுக்கிரகத்தினைச்செய்வதான அவ்வாக்கியத்தினைக்கேட்டுப் பாஷ்பங்களால் தகைப்பட்ட கண்டமும் கண்களுமுடையவனாய் மகாராஜ்ஞி(சர்வேசுவரி)யான அம்பிகையைப் பார்த்து வார்த்தை சொல்லலாயினான். (சுசு)

महत्तरंतंकुरुषे यस्यानुग्रहमिच्छसि ॥
नोचेत्क्वाहंजडस्थाणुः क्वत्वंसच्चित्स्वरूपिणी ६७

தேவி! நீ எவனை அநுக்கிரக்க விரும்பு கிறயோ அவனை மிகமேலானவனுகச் செய்கின்றய். இல்லையாயின், ஜடத்தறியான யான் எங்கே? சச்சித்ஸ்வரூபியான நீ எங்கே? (௬௭)

असंभाव्यंजन्मशतैस्त्वत्पितृत्वंममाऽनघे ॥
अश्वमेधादिपुण्यैर्वा पुण्यैर्वातत्समाधिजैः ॥ ६८ ॥

பாபமின்றியவளே! உனக்குப் பிதாவாகுந் தன்மை எனக்குப் பிறப்புகள் நூறுகளாலும் அசுவமேதாதி புண்ணியங்களாலாவது அச்சமாதிகளாலாகிய புண்ணியங்களாலாவது சம்பவிக்கத்தக்கதன்று. (௬௮)

अद्यप्रपञ्चेकीर्तिःस्याज्जगन्माता सुताऽभवत् ॥
अहोहिमालयस्यास्य धन्योसौभाग्यवानिति ६९

இன்று முதல் பிரபஞ்சத்தில் கீர்த்தியானது "ஜகன்மாதாவானவள் இந்த ஹிமாலயனுக்குப் பெண்ணுகப்பிறந்தாள் தன்னியன் சௌபாக்கியவான்" என்று உண்டாகும். (௬௯)

यस्यास्तुजठरेसंति ब्रह्मांडानांचकोटयः ॥
सैवयस्यसुताजाता कोवास्याच्चत्समोभुवि ॥ ७० ॥

எவளுடைய வயிற்றில் பிரஹ்மாண்டங்களின் கோடிகள் இருக்கின்றனவோ, அவளே எவனுக்குப் பெண்ணாய்ப் பிறந்தாளோ அவனுக்குச் சமானமானவன் உலகத்தில் எவனுவன்? ஒருவனுமாகானென்றபடி. (எ௦)

नजानेस्मत्पितृणांकिंस्थानंस्यान्निर्मितंपरम् ॥
एतादृशानांवासाय येषांवंशेऽस्तिमादृशः ॥ ७१ ॥

எவர்களது வம்சத்தில் என்னைப்போன்றவனிருக்கின்றேனே, அத்தன்மைய என் பிதிரர்களின் வாசத்தின் பொருட்டு எந்த (பிரஹ்மலோகத்தின்) மேலானஸ்தானம் நிர்மிக்கப்பட்டுளதோ? அறியேன். (எக)

इदंयथाच दत्तंमे कृपयाप्रेमपूर्णया ॥
सर्ववेदांतसिद्धञ्च त्वद्रूपं ब्रूहिमेतथा ॥ ७२ ॥

இஃது (உனக்குப்பிதாவாதல்) எப்படிப் பிரேமை நிறைந்த கிருபையால் எனக்குக் கொடுக்கப்பட்டதோ, அதுபோல் சர்வவேதாந்த சித்தமான உனது ஸ்வரூபத்தினையும் எனக்கருள்வாயாக. (எ௨)

योगञ्च भक्तिसहितं ज्ञानञ्च श्रुतिसंमतम् ॥
वदस्वपरमेशानि त्वमेवाहं यतोभवेः ॥ ७३ ॥

பரமேசானி! பக்தியோடுகூடிய யோகமும் சுருதிசம்மதமான ஞானமும் அருளுக. ஏனெனின், அதனால் நீயே யானுகுவேன். (எ௩)

व्यासउवाच ॥
इतितस्यवचः श्रुत्वा प्रसन्नमुखपङ्कजा ॥
वक्तुमारभताम्बासा रहस्यं श्रुतिगूहितम् ॥ ७४

வியாஸர் சொல்லலாயினர் :— இத்தன்மைய அவ்விமாலயனது வார்த்தையினைக் கேட்டு

மலர்ந்த முகத்தாமரையினளாய் அம்பாள் கருணையிலுள்ள இரகசியமான விஷயத்தினைச் சொல்லத்தொடங்கினாள். (எச)

इति श्रीदेवीभागवते महापुराणे सप्तमस्कंधे

देविगीतायां प्रथमोऽध्यायः ॥

ஸ்ரீ தேவி கீதை

முதலத்தியாயம்

முடிந்தது.

ॐ

# ஸ்ரீ தேவிகீதை.

## இரண்டாம் அத்தியாயம்.

### ஆத்மதத்துவநிரூபணம்.

श्रीदेव्युवाच ॥

शृण्वन्तु निर्जराःसर्वे व्याहरंत्या वचोमम ॥

यस्य श्रवणमात्रेण मद्रूपत्वं प्रपद्यते ॥ १ ॥

ஸ்ரீ தேவி அருளலாயினாள் :— தேவர்களே! நீங்கள் எல்லோரும் சொல்லுகின்றவளாகிய எனது வார்த்தையினைக் கேளுங்கள். ஏனெனின், அதனைக்கேட்டல் மாத்திரத்தினால் கேட்பவன் எனது ஸ்வரூபத்தன்மையினை அடைவானோ, அதனைச் சொல்லுகிறேன். (க)

अहमेवाऽऽसपूर्वंतु नान्यत्किंचिन्नगाधिप ॥
तदात्मरूपं चित्संवित् परब्रह्मैक नामकम् ॥ २ ॥

பர்வதராஜனே! (சிருஷ்டிக்கு) முன் (சத்ரூப ஆத்மாவான) யானே இருந்தேன் (ஸஜாதீயாதி பேதமுள்ள) வெறெதுவு மிருந்ததில்லை. அந்த எனது ஸ்வரூபம் சித்துஸம்வித்து பரப்பிரஹ்மம் என்னும் முக்கியப்பெயருடையதாம். (௨)

अप्रतर्क्य मनिर्देश्य मनौपम्य मनामयम् ॥
तस्यकाचित्स्वतःसिद्धा शक्तिमायेति विश्रुता ३

தர்க்கிக்க(அநுமிக்க)ப்படாததாம்; (சுருதியினாலும் ஜாதிகுணக் கிரியையாதிகளால்) குறிக்கப்படாததாம். உவமிக்கப்படாததாம். அநாமயமாம் (ஷட்பாவவிகாரமில்லாததாம்) ஆத்மாவாகிய அதனது ஸ்வத: ஸித்தமான (இயல்பாய்ப் பெறப்பட்ட) ஓர் சக்தி மாயையென்று வேதங்களில் கேட்கப்பட்டதாம். (௩)

नसतीसानाऽसतीसानोभयात्माविरोधतः ॥
एतद्विलक्षणाकाचिद्वस्तुभूताऽस्ति सर्वदा ॥ ४ ॥

(பிரஹ்மஞானத்தாற் கெடுதலால் அது) சத்தன்று(வியவகரிக்கப்படுதலால்)அசத்து மன்று. (ஒன்றோடொன்று விரோதப்படுதலால்) சதசத்து மன்று. இவற்றின் விலக்ஷணமான வஸ்து ரூபமாகிய ஒன்று எப்போதும் (மோக்ஷபரியந்தமிருப்பதாய்) உளது. (௪)

पावकस्योष्णतेवेय मुष्णांशोरिवदीधितिः ॥
चन्द्रस्य चन्द्रिकेवेयं ममेयं सहजाध्रुवा ॥ ५ ॥

அக்கினியின் உஷ்ணத்தன்மையைப் போலும் சூரியனது கிரணத்தினைப்போலும் சந்திரனது சந்திரிகையினை (நிலவினை)ப்போலும் என்னுடைய இச்சக்தி ஸஹஜமான (அநாதி) நித்தியமாம். (௫)

तस्यां कर्माणि जीवानां जीवाः कालाश्च सञ्चरे ॥
अभेदेन विलीनाःस्युः सुषुप्तौ व्यवहारवत् ॥ ६ ॥

அம்மாயையில் ஜீவர்களது கர்மங்களும் ஜீவர்களும் காலங்களும் (அநாதியாக) சஞ்சரி (இரு)க்கின்றன. அவை சுழுத்தியில் வியவகாரம் ஒடுங்கியிருப்பது போல அதில் அபேதமாக ஒடுங்கினவைகளா யிருக்கின்றன. (௬)

स्वशक्तेश्च समायोगा दहंबीजात्मतांगता ॥
स्वाधारावरणात्तस्या दोषत्वञ्च समागतम् ॥ ७ ॥

(நிர்குணமாகியயான்) தனது சக்தியின் சேர்க்கையால் பீஜவடிவ (ஜகத்காரண)த் தன்மை யடைந்திருக்கிறேன். தனது ஆதாரமான என்னை மறைத்தலால்* அதற்கு (தனதாதாரத்தினை மறைத்தற்றன்மையாகிய) தோஷமுடைமை வந்திருக்கிறது. (எ)

चैतन्यस्य समायोगा न्निमित्तत्वञ्च कथ्यते ॥
प्रपञ्चपरिणामाच्च समवायित्वमुच्यते ॥ ८ ॥

† சைதன்யத்தின் சேர்க்கையால் அதாவது

---

* மாயை அவித்தை யென்னும் எனது இரண்டு வடிவங்களில் மாயைக்கு இத் தோஷமில்லை வித்தியாரூபமாய் மோக்ஷ ஹேதுவாதலின். அவித்தைக்கே இத் தோஷமுண்டு; ஜீவர்களது சம்ஸாரகாரணமாதலால்.

† சிதாபாஸன் நிமித்தகாரணமும் மாயை உபாதானகாரணமுமாம். அதிஷ்டான வடிவ சத்தபிம்பபூதமான சைதன்யமோ விவர்த்தோபாதானமா மென்பது அர்த்தத்தால் சித்தித்தது.

மாயையில் பிரதிபிம்பித்தலால் அப்பிரதிபிம்ப சைதன்னியமாகிய சிதாபாஸனுக்கு ஜகத்தின் நிமித்தகாரணத்துவம் சொல்லப்படுகின்றது. அம்மாயை பிரபஞ்சவடிவாகப் பரிணமித்தலால் அதற்குச்சமவாயி (உபாதான) காரணத்துவம் சொல்லப்படுகின்றது. (அ)

केचित्तांतप इत्याहुः तमःकेचिज्जडंपरे ॥
ज्ञानं मायांप्रधानञ्च प्रकृतिं शक्तिमप्यजाम् ॥ ९ ॥

சிலர் அதனைத் * தபசு என்றும், சிலர் தமசு என்றும், சிலர் ஜடமென்றும், ஞானமென்றும், மாயை யென்றும், பிரதான மென்றும், பிரகிருதியென்றும், சக்தி யென்றும், அஜை (பிறப்பில்லாதவள்) என்றும் கூறுவர். (கூ)

विमर्शइतितांप्राहुः शैवशास्त्रविशारदाः ॥
अविद्यामितरेप्राहु र्वेदतत्त्वार्थ चिंतकाः ॥ १० ॥

* இப்பெயர்களை முண்டகம் தாபனீயம் சுவேதாசுவதரமுதலிய சுருதிகளில் காண்க. இதனால் இம் மாயை சர்வவேத சம்மதமான தென்பது கூறப்பட்டதாகின்றது

சைவசாஸ்திரத்தில் தேர்ந்தவர்கள் அதனை * விமர்சமென்று கூறுவர். வேததத்துவார்த்தத்தினைச் சிந்திப்பவர்களாகிய பிறர் அவித்தையென்று கூறுவர். (க0)

एवं नानाविधानिस्यु र्नामानि निगमादिषु ॥
तस्याजडत्वं दृश्यत्वा ज्ञाननाशात्ततोसती ११

இவ்வாறு வேதமுதலியவற்றில் நாநாவிதமான பெயர்கள் உண்டு. அதற்கு (மாயைக்கு) ஜடத்துவமாம்; திருசியத்(காணப்படுந்)தன்மையால். அதன்பின் ஞானத்தினால் நாசமாதலால் அசத்தாம். (கக)

चैतन्यस्य नदृश्यत्वं दृश्यत्वे जडमेवतत् ॥
स्वप्रकाशञ्चचैतन्यं नपरेणप्रकाशितम् ॥ १२ ॥

சைதன்யத்திற்குத் திருசியத்துவமில்லை. திருசியத்துவமுளதேல் அது ஜடமேயாகும். ஸ்வப்பிரகாசமான சைதன்யம் பிறிதொன்றால் பிரகாசிக்கப்படுவதாகாது. (கஉ)

---

* வாசனை.

अनवस्थादोषसत्त्वा न्नस्वेनाऽपिप्रकाशितम् ॥
कर्मकर्त्री विरोधःस्या त्तस्मात्तद्दीपवत्स्वयम् १३

* அநவஸ்தா தோஷமுண்மையால் தன்னுலும் பிரகாசிக்கப்படுவதாகாது. ஏனெனின், ஒன்றே கர்மமும் கர்த்தாவுமாம் என்பது விரோதமாம். ஆதலால் அது தீபம்போல் ஸ்வயம்பிரகாசமாம். (கங)

प्रकाशमानमन्येषां भासकं विद्धिपर्वत ॥
अतएवच नित्यत्वं सिद्धंसंवित्तनोर्मम ॥ १४ ॥

பர்வதனே! தானே பிரகாசிப்பதாய்ப் பிறவற்றை விளக்குவதாமென்றறி. இதனாலே என்னுடைய சம்வித்து வடிவசரீரத்திற்கு நித்தியத்துவம் சித்தித்தது. (கச)

जाग्रत्स्वप्नसुषुप्त्यादौ दृश्यस्यव्यभिचारतः ॥
संविदोऽव्यभिचारश्च नानुभूतोऽस्तिकर्हिचित् १५

---

* பிறிதொன்றால் பிரகாசிக்கப்படுவதாயின் அதனைப் பிரகாசிப்பது வேறொன்று அதனைப் பிரகாசிப்பது வேறொன்றென அநவஸ்தை (வரம்பின்மை) யுளதாம்.

திருசியத்திற்கு ஜாக்கிர சொப்பன சுழுத்தியாதிகளில் * வியபிசாரம் (பிறழ்ச்சி) இருத்தலால் சம்வித்தாகிய எனது வியபிசாரம் ஒருபோதும் அநுபவிக்கப் பட்டதாகவில்லை. (ஜாக்கிரத்தை யநுபவித்தனானே சொப்பனத்தினையும் சுழுத்தியினையும் மறுபடியும் ஜாக்கிரத்தையும் அநுபவித்தலால்). (கரு)

यदि तस्याऽप्यनुभव स्तर्ह्ययं येनसाक्षिणा ॥
अनुभूतः सएवाऽत्र शिष्टःसंविद्वपुः पुरा ॥ १६ ॥

அதன் (சம்வித்தின்) வியபிசார (இன்மை) அநுபவமுமுளதாயின், இது (சுபாவம்) எந்தச் சாக்ஷியினால் அநுபவிக்கப்பட்டதாமோ அந்தச் சம்வித்சரீரமே இங்கு முன் மிஞ்சியதாம்.()

अतएवचनित्यत्वं प्रोक्तं सच्छास्त्रकोविदैः ॥
आनन्दरूपताचाऽस्याः परप्रेमास्पदत्वतः १७

இதனாற்றான் சத்சாஸ்திர முணர்ந்தபண்டிதர்களால் நித்தியத்துவம் சொல்லப்பட்டது.

---

* இதனை ஸ்ரீ விசாரசந்திரோதயத்தில் விரிவாய்க் காணலாம்.

பரமப்பிரேமைக்கு விஷயமாதலால் இதற்கு ஆநந்த ரூபத்துவமுமாம். (கஎ)

मानभूवंहि भूयास मितिप्रेमात्मनिस्थितम् ॥
सर्वस्याऽन्यस्य मिथ्यात्वा दसंगत्वं ममस्फुटम् ॥

"யான் இல்லாதிருக்கலாகாது எப்போது மிருக்கவேண்டும்" என்று பிரேமை (எல்லோருக்கும்) ஆத்மாவாகிய என்னிடத்தில் நிலைத்ததேயாம். என்னின் வேறான எல்லாவற்றிற்கும் மித்தியாத்துவ மிருத்தலின் எனது அசங்கத்துவம் வெளிப் படையேயாம். (கஅ)

अपरिच्छिन्नताप्येव मतएवमतामम ॥
तच्चज्ञानं नात्मधर्मो धर्मत्वे जडतात्मनः ॥ १९ ॥

இதனாலேயே (யாவும் மித்தையாதலினாலேயே எனது அபரிச்சின்னத்துவமும் (தேசகால வஸ்து பரிச்சேதமின்மையும்) இவ்வாறே மதிக்கத்தக்கதாம். அந்த ஞானமும் (சம்வித்தும்) ஆத்மாவின் தர்ம மன்று; சொரூபமேயாம். தர்மமாயின் ஆத்மாவுக்கு ஜடத்துவமுண்டாம்.

ज्ञानस्यजडशेषत्वं नदृष्टं नचसंभवि ॥
चिद्धर्मत्वं तथानास्ति चितश्चिन्नाहिभिद्यते ॥ २० ॥

ஞானத்திற்கு ஜடசாதனமாந்தன்மை கண்டதுமில்லை? சம்பவிக்கவும் மாட்டாது. அவ்வாறே ஞானதர்மத்துவமுமில்லை; ஞானமும் சித்து ஆத்மாவும் சித்தாதலால் சித்தினின்று சித்து வேறுபடாது. (உ0)

तस्मादात्माज्ञानरूपः सुखरूपश्च सर्वदा ॥
सत्यः पूर्णोऽप्यसङ्गश्च द्वैतजालविवर्जितः ॥ २१ ॥

ஆதலால் ஆத்மா எப்போதும் ஞானரூபமும் சுகரூபமும் சத்தியஸ்வரூபமும் பூர்ணமும் அசங்கமும் துவைதக்கூட்டமின்றியதுமாம். ()

सपुनः कामकर्मादि युक्तयास्वीयमायया ॥
पूर्वानुभूतसंस्कारात्कालकर्मविपाकतः ॥ २२ ॥

அவ்வாத்மா மறுபடியும் காமகர் * மாதிகளோடு கூடியதான தனதுமாயையினால் முன்னநுபவிக்கப்பட்ட சம்ஸ்காரத்தினாலும் காலகர்மபரிபாகத்தினாலும். (உஉ)

---

* ஆதி என்பதனால் ஜீவர்கள் கொள்ளப்படுவர்.

अविवेकाच्च तत्त्वस्य सिसृक्षावान्प्रजायते ॥
अबुद्धिपूर्वः सर्गोऽयं कथितस्तेनगाधिप ॥ २३ ॥

(இருபத்துநான்குவடிவ) தத்துவத்தின் அவிவேகத்தினாலும் சிருஷ்டிக்கும் இச்சையுடையதாகின்றது. பர்வதராஜனே! (பூர்வ சம்ஸ்காரத்தால் உறக்கத்தினின்று விழிப்புண்டாவதுபோல) உனக்குச்சொல்லப்பட்ட இந்தச் சிருஷ்டி அபுத்திபூர்வமாம். (உங)

एतद्धियन्मयाप्रोक्तं ममरूपमलौकिकम् ॥
अव्याकृतं तदव्यक्तं मायाशबलमित्यपि ॥ २४ ॥

என்னாற் சொல்லப்பட்டது எதுவோ. இதுவே எனது அலௌகிக(லோகாதீத)மான ரூபமாம். இது அவ்யாகிருதம் (விசேஷாகாரமாகாதது), அவ்யக்தம் (வெளிப்படாதது) மாயாசபலம் (மாயையோடுகூடியது) என்றுமாம். (உச)

प्रोच्यते सर्वशास्त्रेषु सर्वकारण कारणम् ॥
तत्त्वानामादिभूतञ्च सच्चिदानन्दविग्रहम् ॥ २५ ॥

சர்வசாஸ்திரங்களிலும் சர்வகாரணங்கட்குப் காரணமென்றும், தத்துவங்கட்கு ஆதிவடிவின தென்றும், சச்சிதாநந்த விக்கிரகமென்றும் சொல்லப்படுகின்றது. (உரு)

सर्वकर्मघनीभूतमिच्छाज्ञानक्रियाश्रयम् ॥
ह्रींकारमंत्रवाच्यंतदादितत्त्वं तदुच्यते ॥ २६ ॥

அது சர்வகர்ம நெருக்கவடிவினதாம் (சர்வ கர்மசாக்ஷியாம்) இச்சாஞானக் கிரியா சிரய மாம். ஹ்ரீங்காரமந்திரவாச்சியமாம். அது ஆதிதத்துவமென்று சொல்லப்படுகின்றது. ()

तस्मादाकाश उत्पन्नः शब्दतन्मात्ररूपकः ॥
भवेत्स्पर्शात्मकोवायुस्तेजोरूपात्मकंपुनः ॥ २७ ॥

அவ்வாதிதத்துவமான ஆத்மாவினின்று சப்ததன்மாத்திரவடிவினதாகிய ஆகாசமுண் டாயிற்று. பின்ஸ்பரிசதன்மாத்திரகமானவா யுவும், ரூபவடிவினதாகிய தேயுவும் உண்டா யின. (உஎ)

जलंरसात्मकंपश्चात्ततोगंधात्मिकाधरा ॥
शब्दैकगुण आकाशो वायुः स्पर्शरवान्वितः २८

பின் இரஸவடிவினதாகிய ஜலமும், அதனின்று கந்தவடிவினதாகிய பூமியு முண்டாயின. சப்தமான ஒரு குணமுடையது ஆகாசம். ஸ்பரிசமும் சப்தமும் கூடியதுவாயு. ()

शब्दस्पर्शरूपगुणंतेजइत्युच्यतेबुधैः ॥
शब्दस्पर्शरूपरसैरापोवेदगुणाः स्मृताः ॥ २९ ॥

சப்தஸ்பரிசரூபகுணமுடையது தேயு என்று அறிஞர்களாற் சொல்லப்படுகின்றது. சப்தஸ்பரிச ரூபரஸகுணங்களால் நான்கு குணங்களுடையது அப்பு என்று கருதப்படுகின்றது. (உக)

शब्दस्पर्शरूपरसगंधैः पञ्चगुणाधरा ॥
तेभ्योऽभवन्महत्सूत्रं यल्लिंगंपरिचक्षते ॥ ३० ॥

சப்த ஸ்பரிச ரூப ரஸ கந்தங்களால் ஐந்து குணங்களுடையதாம் பூமி, அவற்றினின்று (சூக்ஷ்மபூதங்களினின்று) வியாபகமான சூத்திரமுண்டாயிற்று. அது லிங்கதேக மெனப்படுகின்றது. (௩0)

सर्वात्मकं तत्संप्रोक्तं सूक्ष्मदेहोऽयमात्मनः ॥
अव्यक्तं कारणोदेहः सचोक्तः पूर्वमेवहि ॥ ३१ ॥

அச்சூத்திரம் சர்வாத்மகம் (எல்லாப்பிராண வடிவினது) என்று சொல்லப்படுகின்றது. இது ஆத்மாவின் சூக்ஷ்மதேகமாம். அவ்வியக்தம் காரணதேகமாம். அது முன்னமே சொல்லப் பட்டது. (௩க)

यस्मिञ्जगद्बीजरूपं स्थितंलिंगोद्भवोयतः ॥
ततः स्थूलानि भूतानि पञ्चीकरण मार्गतः ३२

எதன் கண் ஜகத்து பீஜரூபமாக நிலைத் திருக்கின்றதோ அதனின்று லிங்கதேக முண் டாயிற்று. அதன் பின் (லிங்கமாகிய அபஞ்சீ கிருத பூதோற்பத்தியின் பின்) பஞ்சீகரண வழியாக ஸ்தூலமாகிய பூதங்கள். (௩உ)

पञ्चसंख्यानिजायन्ते तत्प्रकारस्त्वथोच्यते ॥
पूर्वोक्तानिचभूतानि प्रत्येकंविभजेद्द्विधा ॥ ३३ ॥

ஐந்து சங்கையுள்ளனவாய்ப் பிறக்கின்றன. அதன் றன்மை இனி சொல்லப்படுகின்றது.

மூன் கூறப்பட்ட பூதங்கள் ஒவ்வொன்றும் இருவகையாகப் பிரிந்தன. (௩௩)

एकैकंभागमेकस्य चतुर्धाविभजेद्गिरे ॥
स्वस्वेतर द्वितीयांशे योजनात्पञ्चपञ्चते ॥ ३४ ॥

பர்வதராஜனே! ஒவ்வொரு பாகமும் ஒன்று நான்காகப்பிரிந்தது, அவற்றை தத்தம்மின் வேறான இரண்டாவது பாகத்தில் சேர்த்தலால் அவை ஐந்தைந்தாயின. (௩௪)

तत्कार्यंच विराड्देहः स्थूलदेहोऽयमात्मनः ॥
पञ्चभूतस्थ सत्वांशैः श्रोत्रादीनां समुद्भवः ३५

அந்தப் பஞ்சீகிருத பூதங்களின் காரியம் விராட்தேகமாம. இது ஆத்மாவாகிய எனது ஸ்தூலதேகமாம். பஞ்சபூதங்களி லுள்ள தனித்தனி சத்துவாம்சங்களால் சுரோத் திராதிகளின் உற்பத்தியாம். (௩௫)

ज्ञानेन्द्रियाणां राजेन्द्र प्रत्येकं मिलितैस्तुतैः ॥
अंतःकरण मेकंस्याद् वृतिभेदाच्चतुर्विधम् ३६

एतत्सूक्ष्मशरीरंस्यान्ममलिंगंयदुच्यते ॥
तत्रयाप्रकृतिः प्रोक्ता साराजान्द्विविधास्मृता ४२

ஆகிய இது சூக்ஷ்மசரீரமாம். இது எனது லிங்கசரீரமெனப் படுகின்றது. அதில் பிரகிருதி யென்று சொல்லப்பட்டது எதுவோ அது ராஜனே! இருவகையாகக் கருதப்படுகின்றது. (சஉ)

सत्त्वात्मिकातु मायास्यादविद्यागुणमिश्रिता ॥
स्वाश्रयंयातुसंरक्षेत्सामायेतिनिगद्यते ॥ ४३ ॥

அவற்றுள், சுத்த சத்துவவடிவினது மாயையாம். குணமிசிரிதம் (மலின சத்துவப்பிரதானம்) அவித்தையாம். தனது ஆசிரயத்தினை எது (மறைக்காமல்) சம்ரக்ஷிக்கின்றதோ அது மாயையென்று சொல்லப்படுகின்றது. (சங)

तस्यां यत्प्रतिबिंबंस्याद्बिंबभूतस्यचेशितुः ॥
सईश्वरः समाख्यातः स्वाश्रयज्ञानवान्परः ॥ ४४ ॥

அம்மாயையில் பிம்பபூதனை ஈசனது பிரதிபிம்பம் எது உண்டாகின்றதோ அது சுவாசிரய

(வியாபகபிரஹ்மத்தின்) ஞானமுடையபராணுன் ஈச்வரன் எனப்படுகின்றது. (சச)

सर्वज्ञः सर्वकर्ता च सर्वानुग्रहकारकः ॥
अविद्यायांतु यत्किंचित्प्रातिबिंबं नगाधिप ॥ ४५ ॥

அது சர்வஞ்ஞனும் சர்வகர்த்தாவும் எல்லோரையும் அநுக்கிரகஞ் செய்வதுமாம். பர்வதராஜனே! அவித்தையில் யாதொருபிரதிபிம்பமுளதோ, (சரு)

तदेव जीवसंज्ञंस्यात्सर्वदुःखाश्रयं पुनः ॥
द्वयोरपीह संप्रोक्तं देहत्रयमविद्यया ॥ ४६ ॥

அதுவே மறுபடியும் (ஸ்வரூபாநந்தம் அவித்தையால் மறைபட்டமையின்) சர்வதுக்காசிரயமானஜீவனென்னும் பெயருடையதாகின்றது. இரண்டற்கும் இங்கு மாயை அவித்தைகளால் தேகமூன்றும் சொல்லப்பட்டன. (ஈசனுக்கு ஆவரணமில்லாவிடினும் விக்ஷேபமிருத்தலால்). (சசு)

देहत्रयाभिमानाच्चाप्यभूत्नामत्रयंपुनः ॥
प्राज्ञस्तु कारणात्मास्यात्सूक्ष्मदेहीतु तैजसः ४७

ॐ

# ஸ்ரீ தேவிகீதை.

॥ अथ तृतीयोऽध्यायः ॥

## மூன்றும் அத்தியாயம்.

### பிரபஞ்சாபவாத நிரூபணம்.

देव्युवाच ॥

मन्मायाशक्ति संक्लृप्तं जगत्सर्वं चराचरम् ॥

सापिमत्तः पृथङ्माया नास्त्येव परमार्थतः ॥ १ ॥

தேவி கூறலாயினள் :— எனது மாயாசக்தியினற் கற்பிக்கப்பட்டதாம் சராசரமான சகல ஜகத்தும், அந்தமாயையும் (என்னிடத்திற் கற்பிக்கப்பட்டதாகலின்) உண்மையில் என்னின் வேறாக இல்லவே இல்லை. (௧)

व्यवहारदृशासेयं विद्यामायेतिविश्रुता ॥
तत्त्वदृष्ट्यातु नास्त्येव तत्त्वमेवास्तिकेवलम् ॥ २ ॥

(அநாதியவித்தையினால் மயங்கியவர்களின்) வியவகார திருஷ்டியினால் அவ்வித்து மாயை வித்தை யென்று சொல்லப்படுகின்றது * தத்துவ (பிரஹ்ம) திருஷ்டியினாலோ இல்லவே இல்லை. கேவலம் தத்துவமே உளது. (உ)

साऽहंसर्वं जगत्सृष्ट्वा तदन्तः प्रविशाम्यहम् ॥
मायाकर्मादिसहिता गिरेप्राणपुरःसरा ॥ ३ ॥

அத்தன்மையயான் சகல ஜகத்தினையும் சிருஷ்டித்து பர்வதனே! மாயாகர்மாதிகளோடு கூடியவளும் பிராணவாயுவை முன்னிட்டவளுமாய் அதனுள் (கடத்தில் ஆகாயம்போலும் கண்ணாடியில் பிரதிபிம்பம் போலும் சிதாபாஸரூபமாகப்) பிரவேசிக்கின்றேன். (௩)

---

* இதனைக் கைவல்ய தாபனீயாதி சுருதிகளிற் காண்க.

लोकांतरगतिर्नोचेत्कथंस्यादितिहेतुना ॥
यथायथा भवन्त्येव मायाभेदास्तथातथा ॥ ४ ॥

அவ்வாறில்லையாயின், லோகாந்தரங்கட்குச் செல்லுதல் எவ்வாறுண்டாகுமென்னும் ஹேதுவால் பிராணனை முன்னிட்டுப் பிறவேசிக்கின்றேன். மாயாபேதங்கள் எவ்வாறெவ்வாறுண்டாகின்றனவோ அவ்வாறவ்வாறு. (௪)

उपाधिभेदाद्भिन्नाऽहं घटाकाशादयोयथा ॥
उच्चनीचादिवस्तूनि भासयन्भास्करःसदा ॥ ५ ॥
नदुष्यति तथैवाऽहं दोषैर्लिप्ताकदापिन ॥
मयिबुद्ध्यादि कर्तृत्वमध्यस्यैवाऽपरेजनाः ॥ ६ ॥
वदन्तिचाऽऽत्माकर्तेतिविमूढा न सुबुद्धयः ॥
अज्ञानभेदतस्तद्वन्मायायाभेदतस्तथा ॥ ७ ॥

ஒரே ஆகாசம் உபாதிபேதத்தால், கடாகாசாதிகளாவதுபோல யான் (மாயாதி) உபாதிபேதத்தால் வேறுவேறாகின்றேன். உயர்வு தாழ்வு முதலியவஸ்துக்களைப் பிரகாசித்தும்

யெப்படிச் சூரியன் எப்போதும் தூஷிக்கப்படுகிறதில்லையோ, அதுபோலவே யானும் ஒருபோதும் தோஷங்களால் பற்றப்படுகிறதில்லை. புத்தியாதிகளின் கர்த்திருத்துவத்தினை (அவிவேகத்தால்) என்னிடத்தில் ஆரோபித்தே ஆத்மாகர்த்தாவென்று மிக மூடமான ஜனங்கள் கூறுகின்றனர். நல்லபுத்திமான்கள் கூறுவதில்லை. அஞ்ஞானபேதத்தினாலும் அப்படியே மாயையின் பேதத்தினாலும், (ரு-சு-எ)

जीवेश्वरविभागश्च कल्पितो माययैवतु ॥
घटाकाश महाकाश विभागः कल्पितोयथा ॥ ८ ॥

ஜீவேசுவரவிபாகமும் (பிரிவும்) மாயையினாலேயே கற்பிக்கப்பட்டதாம். எப்படிக் கடாகாசமகாகாசவிபாகம் கற்பிதமோ. (அ)

तथैव कल्पितोभेदो जीवात्मपरमात्मनोः ॥
यथा जीवबहुत्वञ्च माययैव नचस्वतः ॥ ९ ॥

அதுபோலவே ஜீவாத்ம பரமாத்மாக்களின் பேதமும் கற்பிதமாம். எப்படி ஜீவ வெகுத்துவம் மாயையினாலேயேயாகின்றதோ, இயல்பாயாகிறதில்லையோ, (கூ)

तथेश्वर बहुत्वंच माययानस्वभावतः ॥
देहेंद्रियादि संघातवासना भेदभेदिता ॥ १० ॥

அதுபோலவே (பிரஹ்மவிஷ்ணுவாதி) ஈசுவரவெகுத்துவமும் மாயையினாலாகின்றது; ஸ்வபாவத்தாலாகிறதில்லை. தேகேந்திரியாதி சங்காதவாசனா பேதத்தினால் பேதிக்கப்பட்ட, (௧0)

अविद्याजीवभेदस्य हेतुर्नान्यः प्रकीर्तितः ॥
गुणानां वासनाभेद भेदिताया धराधर ॥ ११ ॥

அவித்தை ஜீவபேதத்திற்கு ஏதுவாகச் சொல்லப்படுகின்றது; வேறன்று. பர்வதனே! குணங்களின்வாசனா(சாத்துவிகராஜஸ தாமஸ) பேதத்தினால் பேதிக்கப்பட்ட, (௧௧)

मायासापरभेदस्य हेतुर्नान्यः कदाचन ॥
मयिसर्वमिदंप्रोत मोतंच धरणीधर ॥ १२ ॥

அம்மாயை ஈசபேதத்திற்கு ஏதுவாம்; எப்போதும் வேறு ஏதுவாகாது. தரணீதரனே! என்னிடத்தில் இவ்வெல்லாம் ஓதப்புரோதமா (குறுக்கு நெடுக்கா)யிருக்கின்றது. (௧௨)

ईश्वरोऽहंच सूत्रात्मा विराडात्माऽहमस्मिच ॥
ब्रह्माऽहं विष्णुरुद्रौच गौरीब्राह्मीच वैष्णवी १३

ஈசுவரன் யான் சூத்திராத்மாயான், விராடாத்மாயான், பிரஹ்மாயான், விஷ்ணுருத்திரர்களும் யான், கௌரீபிராஹ்மி வைஷ்ணவீ யான். (கங)

सूर्योऽहं तारकाश्चाऽहं तारकेशस्तथाऽस्म्यहम् ॥
पशुपक्षिस्वरूपाऽहं चांडालोऽहंचतस्करः ॥ १४ ॥

சூரியன் யான், நக்ஷத்திரங்கள் யான், அவ்வாறே நக்ஷத்திரபதியான சந்திரன் யான், பசுபக்ஷிசொரூபம் யான், சண்டாளன் யான், திருடன் யான். (கச)

व्याधोऽहं क्रूरकर्माऽहं सत्कर्माऽहं महाजनः ॥
स्त्रीपुन्नपुंसकाकारोऽप्यहमेव नसंशयः ॥ १५ ॥

வியாதன் யான்; குரூரகர்மமுடையவன் யான்; சத்கர்மங்கள் யான்; மகாஜனங்கள் யான்; பெண் ஆண் அலிவடிவனும் யானே; சந்சயமில்லை. (கரு)

यच्चकिंचित्क्वचिद्वस्तु दृश्यते श्रूयतेपिवा ॥
अंतर्बहिश्च तत्सर्वं व्याप्याहं सर्वदास्थिता ॥ १६ ॥

எவ்விடத்திலாவது யாதொன்றுகாணப்படுகின்றதோ, கேட்கப்படுகின்றதோ, அவ்வெல்லாவற்றையும் எப்போதும் உள்ளும் வெளியும் வியாபித்து நிற்கின்றேன். (கசு)

नतदस्ति मयात्यक्तं वस्तुकिंचिच्चराचरम् ॥
यद्यस्तिचेतच्छून्यंस्याद्वन्ध्यापुत्रोपमंहितत् १७

சத்ரூபமான என்னால் விடப்பட்ட (என்னையின்றிய) அச்சராசரமாகிய வஸ்து எதுவும் இல்லை. இருக்குமாயின் அது வந்தியா புத்திரனைப்போலச் சூநியமாம். (கஎ)

रज्जुर्यथासर्पमाला भेदैरेकाविभातिहि ॥
तथैवेशादिरूपेण भाम्यहं नात्रसंशयः ॥ १८ ॥

எப்படி இரஜ்ஜு ஒன்றே சர்ப்பம்மாலை முதலிய பேதங்களாக விளங்குகின்றதோ, அப்படியே யான் ஈசன்முதலியவடிவாக விளங்குகின்றேன்; இதிற் சம்சயமில்லை. (கஅ)

अधिष्ठानातिरेकेण कल्पितं तन्नभासते ॥
तस्मान्मत्सत्तयैवैतत्सत्तावन्नान्यथाभवेत् ॥ १९ ॥

கற்பிதமாகிய அது அதிஷ்டானமின்றி விளங்காது. ஆதலால் எனது சத்தையினாலேயே இது (ஜகத்து) சத்தையுடையதாம், வேறு விதத்திலாகாது. (௧௯)

हिमालय उवाच ॥
यथावदसिदेवेशि समष्ट्यात्मवपुस्त्विदम् ॥
तथैव द्रष्टुमिच्छामि यदिदेवि कृपामयि ॥ २० ॥

ஹிமாலயன் கூறலாயினன் :— தேவேசி! எவ்விதமாக இச்சமஷ்டி வடிவமான தேகத்தினைக் கூறுகின்றாயோ, அவ்விதமாகவே தரிசிக்க விரும்புகின்றேன், தேவி! என்னிடத்தில் கிருபை இருக்குமாயின். (௨0)

व्यास उवाच ॥
इति तस्यवचः श्रुत्वा सर्वेदेवाः सविष्णवः ॥
ननंदुर्मुदितात्मानः पूजयन्तश्च तद्वचः ॥ २१ ॥

வியாஸர் கூறலாயினர் :— இத்தன்மைய அவ்விமாலயனது வசனத்தை விஷ்ணுவோடு எல்லாத்தேவர்களும் கேட்டுக் களித்த மனத்தினராய் அவ்விமாலயன் வார்த்தையைச் சிலாகிப்பவர்களாய்ச் சந்தோஷித்தனர். (௨௧)

अथदेवमतंज्ञात्वा भक्तकामदुघाशिवा ॥
अदर्शयन्निजंरूपं भक्तकामप्रपूरिणी ॥ २२ ॥

பின்னர் தேவர்களது அபிப்பிராயத்தினை யறிந்து பக்த காமதேனும் பக்தர்களது விருப்பத்தை நிரப்புகிறவளுமான சிவை தனது விராட் வடிவத்தினைத் தரிசிப்பித்தாள். (௨௨)

अपश्यंस्ते महादेव्या विराड्रूपं परात्परम् ॥
द्यौर्मस्तकंभवेद्यस्य चन्द्रसूर्यौच चक्षुषी ॥ २३ ॥

அவர்கள் மகாதேவியின் பராத்பரமான விராட்ரூபத்தினைத் தரிசித்தனர். அதற்கு விண்ணுலகம் (சத்யலோகம்) சிரசும், சந்திரசூரியர் கண்களுமாம். (௨௩)

दिशःश्रोत्रे वचोवेदाः प्राणोवायुः प्रकीर्तितः ॥
विश्वंहृदयमित्याहुः पृथिवी जघनंस्मृतम् ॥ २४ ॥

திக்குச் சுரோத்திரங்(காது)களும், வேதங்கள் வாக்கும், வாயுபிராணனாகவும் சொல்லப்படும். விசுவ(சர்வாத்மகமான அவ்யக்த)த்தினை இதயமென்று கூறுவர். பிருதிவி ஜகனமென்று கருதப்படும். (உச)

नभस्तलंनाभिसरो ज्योतिश्चक्रमुरःस्थलम् ॥
महर्लोकस्तुग्रीवास्याज्जनोलोकोमुखंस्मृतम् ॥ २५॥

புவர்லோகம் நாபியும், ஜோதிசக்கிரம் மார்பும், மகர்லோகம் கழுத்துமாம். ஜனோலோகம் முகமென்று கருதப்பட்டுளது. (உரு)

तपोलोको रराटिस्तु सत्यलोकादधःस्थितः ॥
इन्द्रादयोबाहवःस्युः शब्दश्रोत्रं महेशितुः ॥ २६ ॥

சத்தியலோகத்தின் கீழிருப்பதான தபோலோகம் நெற்றியாம். இந்திராதியர் (சுவர்க்கம்) புயங்களாம். சப்தம் மகேசியின் சுரோத்திரேந்திரியமாம். (உசா)

नासत्यदस्रौनासेस्तो गंधोघ्राणंस्मृतोबुधैः ॥
मुखमग्निः समाख्यातो दिवारात्रीचपक्ष्मणी २७

அச்வினி குமாரிருவரும் நாசியாம். கந்தம் கிராணேந்திரிய மென்று அறிஞர்களால் கரு தப்படுகின்றது. அக்கினிவாயாகச் சொல்லப்படு கின்றது. பகலுமிரவும் கண்ணிமைகளாம். ()

ब्रह्मस्थानं भ्रूविजृम्भोऽप्यापस्तालुः प्रकीर्तिताः ॥
रसोजिह्वासमाख्याता यमोदंष्ट्राः प्रकीर्तिताः २८

பிரஹ்மாவின் ஸ்தானம் புருவமாம். அப்பு தாலு(இரஸனேந்திரியாதாரமானநா) வென்று கருதப்படும். இரஸம் நாவெ(இரஸ னேந்திரியமெ)னப்படும். இயமன் பற்க ளென்று சொல்லப்படும். (உஅ)

दंताः स्नेहकलायस्य हासोमाया प्रकीर्तिता ॥
सर्गस्त्वपांग मोक्षः स्याद्व्रीडोध्वौंष्ठो महेशितुः २९

சிநேககலை (ஸ்த்ரீ புத்திராதியரின் சிநேகலே சம்) முன்பற்களாம். மாயை அதனது சிரிப் பெனப்படுகின்றது. சர்க்கம் (சிருஷ்டி) கடைக் கண்ணாம். நாணம் மகேசுவரியின் மேலு தடாம். (உகூ)

लोभः स्यादधरोष्ठोऽस्याधर्ममार्गस्तुपृष्ठभूः ॥
प्रजापतिश्चमेढ्रंस्याद्यः स्रष्टाजगतीतले ॥ ३० ॥

லோபம் கீழுதடாம். அதர்மமார்க்கம் இவ்விராட்டின் பின்பாகமாம் (முதுகாம்). ஜகதலத்தில் சிருஷ்டி செய்பவனான பிரஜாபதி அவ்விராட்டின் குறியாம். (௩௦)

कुक्षिः समुद्रागिरयोऽस्तीनिदेव्यामहेशितुः ॥
नद्योनाड्यः समाख्याता वृक्षाःकेशाः प्रकीर्तिताः

சமுத்திரங்கள் வயிறும், பர்வதங்கள் எலும்புகளாம், மகேசுவரியான விராட்வடிவதேவிக்கு நதிகள் நாடிகளெனப்படும். விருக்ஷங்கள் ரோமங்களென்று சொல்லப்படும். ()

कौमारयौवनजरावयोऽस्यगतिरुत्तमा ॥
बलाहकास्तुकेशाःस्युः सन्ध्येन्तेवाससीविभोः ३२

கௌமாரம் யௌவனம் ஜரையென்னும் வயது(பருவங்)கள் இதனது உத்தமகதியாம். மேகங்கள் கேசங்களாம். காலை மாலை யென்னும் இரண்டு சந்திகளும் விபுவின் (விராட்டின்) இரண்டு வஸ்திரங்களாம். (௩௨)

राजञ्छ्रीजगदंबायाश्चन्द्रमास्तुमनःस्मृतः ॥
विज्ञानशक्तिस्तुहरीरुद्रोंतःकरणंस्मृतम् ॥ ३३ ॥

அரசனே! சந்திரன் ஸ்ரீ ஜகதம்பிகையான விராட்டின் மனமெனக்கருதப்படும். விஷ்ணு விஞ்ஞான சக்தி (புத்தி)யாம். ருத்திரன் அந்தக்கரணமென்று கருதப்படுகின்றது. (நங)

अश्वादिजातयःसर्वाः श्रोणिदेशेस्थिताविभोः ॥
अतलादिमहालोकाः कट्यधोभागतांगताः ॥ ३४ ॥

குதிரை முதலிய ஜாதிகள் யாவும் விபுவின் நிதம்பதேசத்திருப்பனவாம். அதல முதலிய மகாலோகங்கள் கடியின் கீழ்பாகத்தன்மையை அடைந்தனவாம். (நச)

एतादृशं महारूपं ददृशुः सुरपुङ्गवाः ॥
ज्वालामालासहस्राढ्यं लेलिहानञ्चजिह्वया ॥३५॥

இத்தன்மைய மகாரூபத்தினைத் தேவசிரேஷ்டர்கள் தரிசித்தனர். ஜ்வாலைகளின் மாலைகள் ஆயிரமுடையதும் நாவினால் நக்குவது (சர்வ ஜகத்தையும் சுவைப்பதும்). (நரு)

दंष्ट्राकटकटारावं वमन्तंवह्निमक्षिभिः ॥
नानायुधधरंवीरं ब्रह्मक्षत्रौधनञ्चयत् ॥ २६ ॥

பற்களால் கடகடவென்னும் சத்தத்தினைச் செய்வதும், கண்களால் நெருப்பினைக் கக்குவதும், நாநா ஆயுதங்கள் தரித்ததும், வீரமுள்ளதும், பிராஹ்மண க்ஷத்திரியர்களை ஓதனமாக (உணவாக)வுடையதும். (உசு)

सहस्रशीर्षनयनं सहस्रचरणंतथा ॥
कोटिसूर्यप्रतीकाशं विद्युत्कोटिसमप्रभम् ॥ २७ ॥

ஆயிரம் தலை கண்களுடையதும், அவ்வாறே ஆயிரம் பாதங்களுடையதும், கோடிசூரியர்களின் பிரகாசமுள்ளதும், கோடி மின்னலையொத்தகாந்தியுள்ளதும், (உஎ)

भयङ्करं महाघोरं हृदक्ष्णोस्त्रासकारकम् ॥
ददृशुस्तेसुराःसर्वे हाहाकारञ्चचक्रिरे ॥ २८ ॥

பயங்கரமும் மகாகோரமும் மனதுக்கும் கண்களுக்கும் பயத்தை யுண்டுபண்ணுவதுமான ரூபத்தினைக் கண்டனர். அத்தேவர்

களெல்லோரும் (பயந்தவர்களாய்) ஹாஹா காரத்தினைச் செய்தனர். (௩அ)

विकम्पमानहृदया मूर्च्छामापुर्दुरत्ययाम् ॥
स्मरणञ्चगतंतेषां जगदंबेयमित्यपि ॥ ३९ ॥

நடுங்குகின்ற மனத்தினராய் மிகுந்த மூர்ச்சையினை அடைந்தனர். அவர்கட்கு (நம்மை இரக்ஷிக்கும்) ஜகதம்பிகை இவள் என்னும் நினைவுமொழிந்தது. (௩௯)

अथतेयेस्थितावेदाश्चतुर्दिक्षुमहाविभोः ॥
बोधयामासुरत्युग्रं मूर्च्छातो मूर्च्छितान्सुरान् ४०

அப்போது மகாதேவியின் நாற்புறத்தும் நின்றவேதங்களேவையோ அவை மூர்ச்சித்த தேவர்களை மூர்ச்சையினின்றும் மிக உக்கிரகமாக விழிப்பித்தன. (௪0)

अथतेधैर्यमालंब्य लब्ध्वाच श्रुतिमुत्तमाम् ॥
प्रेमाश्रुपूर्णनयना रुद्धकंठास्तु निर्जराः ॥ ४१ ॥

பின்னர் அத்தேவர்கள் உத்தமமான சுருதியினைப்பெற்று, தைரியத்தைக்கொண்டு ஆநந்த

பாஷ்ப நிரம்பிய கண்ணினராய் (பிரேமையால்) அடைப்பட்ட கண்டத்தினராய்,    (சக)

देवा ऊचुः ॥

बाष्पगद्गदयावाचा स्तोतुंसमुपचक्रिरे ॥
अपराधं क्षमस्वांब पाहिदीनांस्त्वदुद्भवान् ॥४२॥

ஆநந்தக்கண்ணீரால் தழுதழுத்தவாக்கினால் ஸ்தோத்திரஞ்செய்யத் தொடங்கினர். அம்மையே! அபராதத்தினைப் பொறுத்தருள்க. உன்னிடத்தினின்றுண்டான தீனர்களான எங்களை இரக்ஷித்தருள்க.    (சஉ)

कोपंसंहरदेवेशि सभयारूपदर्शनात् ॥
कातेस्तुतिः प्रकर्तव्या पामरैर्निर्जरैरिह ॥ ४३ ॥

தேவேசி! பயத்தோடு கூடியவர்களாய் உன் வடிவத்தினைத் தரிசத்தமையால் கோபத்தினை ஒழிப்பாயாக. பாமரர்களான தேவர்களால் இங்கு உனது ஸ்துதி என்ன செய்யத்தக்கதாம்.    (சங)

स्वस्याप्यज्ञेयएवाऽसौ याक्वान्यश्चस्वविक्रमः ॥
तदर्वाग्जायमानानां कथंसाविषयोभवेत् ॥ ४४ ॥

தனது பராக்கிரமம் எதுவோ இது எவ்வள வினதென்று தன்னாலும் அறியத்தக்க தன்றே யாம். அது பின் பிறந்தவர்களான எங்கட்கு எவ்வாறு விஷயமாவதாகும். (சச)

नमस्ते भुवनेशानि नमस्ते प्रणवात्मिके ॥
सर्ववेदांतसंसिद्धे नमोह्रींकारमूर्तये ॥ ४५ ॥

புவனேசானி (புவனங்களை நடத்துகிறவள்) ஆகிய உனக்கு நமஸ்காரம். பிரணவ வடி வினளே உனக்கு நமஸ்காரம். சர்வவேதாந் தங்களால் செவ்வையாய்ச் சித்தித்தவளும் ஹ்ரீங்காரவடிவினளுமாகிய உனக்கு நமஸ் காரம். (சரு)

यस्मादग्निः समुत्पन्नो यस्मात्सूर्यश्चचन्द्रमाः ॥
यस्मादोषधयःसर्वास्तस्मैसर्वात्मनेनमः ॥ ४६ ॥

எதனிடத்திலிருந்து அக்கினி உண்டா யிற்றோ, எதனிடத்திலிருந்து சூரியசந்திரர்

களுண்டானார்களோ, எதனிடத்திலிருந்து ஓஷதிகளெல்லா முண்டாயினவோ, அப்படிப் பட்ட சர்வவடிவினளுக்கு நமஸ்காரம். (சசு)

यस्माच्चदेवाःसंभूताः साध्याःपक्षिणएवच ॥
पशवश्चमनुष्याश्च तस्मैसर्वात्मने नमः ॥ ४७ ॥

எதனிடத்திலிருந்து தேவர்களும் சாத்தியர் களும் பக்ஷிகளும் பசுக்களும் மனுஷ்யர்களு முண்டானார்களோ அந்த எல்லாவடிவினளுக்கு நமஸ்காரம். (சஎ)

प्राणापानौव्रीहियवौ तपःश्रद्धार्ऋतंतथा ॥
ब्रह्मचर्यंविधिश्चैव यस्मात्तस्मैनमोनमः ॥ ४८ ॥

பிராணுபானன்கள், நெல், யவம் (வாற்கோ துமை) தபம், சிரத்தை, சத்தியம், பிரஹ்மசரி யம், விதி என்பன எதனிடத்தினின் றுண்டா யினவோ அதற்கு நமஸ்காரம் நமஸ்காரம். ()

सप्तप्राणार्चिषोयस्मात्सामिधःसप्तएवच ॥
होमाः सप्ततथालोकास्तस्मैसर्वात्मनेनमः ॥ ४९ ॥

எதனிடத்தினின்று ஏழு பிராணன்களும், ஏழு அக்னிகளும், ஏழு சமித்துகளும், ஏழு ஹோமங்களும், ஏழு லோகங்களும் உண்டாயினவோ, அந்த சர்வாத்மாவிற்கு நமஸ்காரம். (சகூ)

यस्मात्समुद्रागिरयः सिंधवः प्रचरंतिच ॥
यस्मादोषधयः सर्वारसास्तस्मैनमोनमः ॥ ५० ॥

எதனிடத்தினின்று சமுத்திரங்களும் மலைகளும் நதிகளும் வெளிப்படுகின்றனவோ, எதனிடத்தினின்று ஒஷதிகளும் சர்வரஸங்களுமுண்டாகின்றனவோ, அதற்கு நமஸ்காரம், நமஸ்காரம். (ருo)

यस्माद्यज्ञःसमुद्भूतो दीक्षायूपश्चदक्षिणाः ॥
ऋचोयजूंषिसामानि तस्मैसर्वात्मनेनमः ॥ ५१ ॥

எதனிடத்தினின்று யஞ்ஞமுண்டாயிற்றோ, தீக்ஷையும், யூப(யாகத்தம்ப)மும், தக்ஷிணைகளும், ருக்குகளும், யஜுஸுகளும், சாமங்களும் முண்டாயினவோ அந்தச் சர்வாத்மாவிற்கு நமஸ்காரம். (ருக)

नमःपुरस्तात्पृष्ठेच नमस्तेपार्श्वयोर्द्वयोः ॥
अधऊर्ध्वंचतुर्दिक्षु मातर्भूयो नमोनमः ॥ ५२ ॥

உனக்கு முன்னும் பின்னும் நமஸ்காரம். இரண்டு பாரிசங்களிலும் நமஸ்காரம். கீழும் மேலும் நான்குதிக்குகளிலும் மாதாவே! அடிக்கடி நமஸ்காரம்; நமஸ்காரம். (ருஉ)

उपसंहरदेवेशि रूपमेतदलौकिकम् ॥
तदेवदर्शयाऽस्माकं रूपंसुन्दरसुन्दरम् ॥ ५३ ॥

தேவேசி! அலௌகிகமான இவ்வடிவத்தினை யொழித்து எங்கட்கு அழகுக்கழகு செய்வதான அந்தரூபத்தினையே காட்டுவாயாக. (ருந)

व्यास उवाच ॥

इतिभीतान्सुरान्दृष्ट्वाजगदम्बाकृपार्णवा ॥
संहृत्यरूपंघोरं तद्दर्शयामाससुन्दरम् ॥ ५४ ॥

வியாஸர் சொல்லலாயினர் :— இவ்வாறு பயமடைந்த தேவர்களைக்கிருபா சமுத்திரமான ஜகதம்பிகை யானவள் பார்த்துக் கோரரூபத்தினை யொழித்து நல்லழகிய அவ்வடிவத்தினைக் காட்டினள். (ருச)

पाशांकुशवराभीतिधरंसर्वांगकोमलम् ॥
करुणापूर्णनयनं मन्दस्मित मुखांबुजम् ॥ ५५ ॥

பாசம் அங்குசம் வரம் அபயம் தரித்ததும், சர்வாங்கமும், மிருதுவானதும், கருணை நிறைந்த நயனமுடையதும், புன்சிரிப்புள்ள முகத்தாமரையினை யுடையதும், (ருரு)

दृष्ट्वातत्सुन्दरंरूपंतदाभीतिविवर्जिताः ॥
शांतचित्ताःप्रणेमुस्तेहर्षगद्गदनिःस्वनाः ॥ ५६ ॥

ஆகிய அச்சுந்திர ரூபத்தினைக்கண்டு அப்போது பயமொழிந்தவர்களாய்ச் சாந்த சித்தர்களாய் சந்தோஷத்தினால் தழுதழுத்த கண்டத்தினராய் அவர்கள் சாஷ்டாங்கமாய் வணங்கினார்கள். (ருசு)

इति श्रीदेवीभागवते महापुराणे सप्तमस्कंधे
देविगीतायां तृतीयोऽध्यायः ॥

ஸ்ரீ தேவிகீதை
மூன்றாமத்தியாயம்
முடிந்தது.

ௐ

# ஸ்ரீ தேவிகீதை.

## ॥ अथ चतुर्थोऽध्यायः ॥

## நான்காம் அத்தியாயம்.

வைராக்கிய நிருபணமும்
ஞானத்தின் மோக்ஷார்த்தத்துவமும்.

श्रीदेव्युवाच ॥
क्वयूयंमन्दभाग्या वैक्वेदंरूपंमहाद्भुतम् ॥
तथापिभक्तवात्सल्या दीदृशंदर्शितंमया ॥ १ ॥

ஸ்ரீ தேவி சொல்லலாயினள் :— மந்தபாக்கியர்களான நீங்கள் எங்கே? மகாற்புதமான என்னுடைய இந்த ரூபமெங்கே? அவ்வாறாயினும் பக்தர்களிடத்திலுள்ள பிரியத்தினால் இத்தன்மையவடிவம் என்னால் காட்டப்பட்டது.

नवेदाध्ययनैर्योगैर्नदानैस्तपसेज्यया ॥
रूपंद्रष्टुमिदंशक्यं केवलंमत्कृपांविना ॥ २ ॥

கேவலம் எனது கிருபையினை விட்டு வேதாத்தியயனங்களாலும் யோகங்களினாலும் தானங்களினாலும் தபசினாலும் யாகத்தினாலும் இந்த ரூபம் காணக்கூடியதன்று. (உ)

प्रकृतंश्रुणुराजेंद्र परमात्माऽत्रजीवताम् ॥
उपाधियोगात्संप्राप्तः कर्तृत्वादिकमप्युत ॥ ३ ॥

இராஜேந்திரனே! பிரகிருத(பிரஹ்ம வித்தியோப தேச)த்தினைக்கேள். பரமாத்மா இங்கு உபாதியின் சம்பந்தத்தினால் ஜீவத்தன்மையினையும் கர்த்திருத்துவாதிகளையும் அடைந்தார். ()

क्रियाः करोतिविविधाधर्माधर्मैकहेतवः ॥
नानायोनिस्ततःप्राप्यसुखदुःखैश्चयुज्यते ॥ ४ ॥

தர்மாதர்மங்களே முக்கியகாரணமாகவுடைய பலவகைக் கிரியைகளைச் செய்கின்றார். அதனால் நானாயோனிகளை யடைந்து சுகதுக்கங்களோடு பொருந்துகின்றார். (ச)

पुनस्तत्संस्कृतिवशा न्नानाकर्मरतः सदा ॥
नानादेहान्समाप्नोति सुखदुःखैश्चयुज्यते ॥ ५ ॥

மறுபடியும் அச்(சுகதுக்க)சமஸ்கார வசத்தால் எப்போதும் நானா கர்மரதராய் நானா தேகங்களைப் பொருந்துகின்றார். சுகதுக்கங்களோடும் கூடுகிறார். (௫)

घटीयन्त्रवदेतस्य नाविरामः कदापिहि ॥
अज्ञानमेवमूलंस्या त्ततः कामःक्रियास्ततः ॥ ६ ॥

* கடயந்திரம்போல் (ஜனனமரணப் பிரதிபந்தரூப சம்சாரமாகிய) இதற்கு ஒரு போதும் ஒழிவில்லை. இதற்கு அஞ்ஞானமே மூலமாம். அதனின்று காமமும், அதனின்று கிரியையுமாம். (௬)

तस्मादज्ञाननाशाय यतेतनियतंनरः ॥
एतद्धिजन्मसाफल्यं यदज्ञानस्य नाशनम् ॥ ७ ॥

ஆதலால் அஞ்ஞான நிவிருத்தியின் பொருட்டு நரன் நியதமாக முயற்சிக்கக் கடவன்.

---

* கலையங்கட்டிய ஏற்றம்.

அஞ்ஞானத்தின் நாசம் எதுவோ அதுவே ஜன்ம ஸாபல்யமாம் (பிறப்பின் பயனுடைமையாம்). (எ)

पुरुषार्थसमाप्तिश्च जीवन्मुक्तदशापिच ॥
अज्ञाननाशनेशक्ता विद्यैवतु पटीयसी ॥ ८ ॥

புருஷார்த்த சமாப்தியும் ஜீவன்முக்த தசையுமாம். அஞ்ஞானத்தைக் கெடுத்தலில் தேர்ச்சியுள்ளதான வித்தையே சாமர்த்திய முள்ளதாம். (அ)

नकर्मतज्जंनोपास्ति विरोधाभावतोगिरे ॥
प्रत्युताशाज्ञाननाशे कर्मणानैवभाव्यताम् ॥ ९ ॥

பர்வதனே! அஞ்ஞானத்தினற் ருேன்றிய கர்மம் அதனைக் கெடுப்ப தாகாது. உபாஸ்தி (உபாசனை)யும் விரோதமின்மையால் கெடுப்ப தாகாது. எனவே (அஞ்ஞானகாரியமான) கர்மத்தினுல் அஞ்ஞானத்தினைக் கெடுப்பதற்கு ஆசை வைக்கலாகாது. (கூ)

अनर्थदानि कर्माणि पुनःपुनरुशंतिः ॥
ततोरागस्ततोद्वेष स्ततोनर्थोमहान्भवेत् ॥ १० ॥

அனர்த்தத்தினைத் தரும் கர்மங்கள் மறுபடியும் மறுபடியும் வெளிப்படுகின்றன. அதனால் இராகமும், அதனால் துவேஷமும், அதனால் பெருமனர்த்தமு முண்டாகின்றன. (௧0)

तस्मात्सर्वप्रयत्नेन ज्ञानंसंपादयेन्नरः ॥
कुर्वन्नेवेहकर्माणि त्यतःकर्माप्यथवश्यकम् ॥ ११ ॥

ஆதலால் முழு முயற்சியினாலும் நரன் ஞானத்தினைச் சம்பாதிக்கவேண்டும் * "இங்குக் கர்மங்களைச் செய்துகொண்டே" என்னும் ஈசாவாசிய சுருதியினால் கர்மமும் ஆவசியகமாம். (௧௧)

ज्ञानादेवहिकैवल्य मतःस्यात्तत्समुच्चयः ॥
सहायतांव्रजेत्कर्म ज्ञानस्याहितकारिच ॥ १२ ॥

"ஞானத்தினாலேயே கைவல்யமாம்" என்பதும் சுருதியாம். ஆதலால் அவ்விரண்டன் சமுச்சயமாம் (கலப்பாம்) அதாவது கர்மம் ஞானத்தின் சகாயத்தன்மையினை அடைந்து ஹிதகாரிய மாகின்றது. (௧௨)

---

* இது சமுச்சயவாதியின் கொள்கை.

इतिकेचिद्वदंत्यत्र तद्विरोधान्नसंभवेत् ॥
ज्ञानाद्धृद्ग्रन्थिभेदःस्या द्धृद्ग्रंथौकर्मसंभवः ॥ १३ ॥

என்று இவ்வாறு இதில் சிலர் கூறுகின்றனர். அது விரோதப்படுதலாற் சம்பவியாது. ஞானத்தினல் இருதய கிரந்தியின் (உள்ள முடிச்சின்) பேதமாகின்றது. * இருதய கிரந்தியில் கர்மசம்பவ மாகின்றது. (கங)

यौगपद्यंनसंभाव्यं विरोधात्तुतततस्तयोः ॥
तमःप्रकाशयोर्यद्व यौगपद्यंनसंभवि ॥ १४ ॥

ஆதலால் ஒளியிரு ளிரண்டற்கும் ஒருங்கிருத்தல் எப்படிச் சம்பவியாதோ, அதுபோல அவை (ஞானம் கர்மம்) இரண்டற்கும் விரோதமிருத்தலால் ஒருங்கிருத்தற் றன்மை சம்பவியாது. (கச)

---

* அந்தக்கரண ஆத்ம தேக தாதாத்மிய ரூபம் இருதய கிரந்தி. அது ஆத்மசாக்ஷாத்காரத்தால் கெடும். கிரந்தியிருக்கின், யான் மனிதன் பிராஹ்மணன் பரலோகேச்சை யுள்ளவன் என்றல் வடிவப் புத்தியுளதாம். அஃதுளபோது அவனை யுத்தேசித்துக் கர்மம் விதிக்கப் படுகின்றது. ஆதலால் அவ்விரண்டும் ஒருங்கிருத்தல் சம்பவியாதென்பது பொருள்.

तस्मात्सर्वाणिकर्माणि वैदिकानिमहामते ॥
चित्तशुध्यंतमेवस्यु स्तानिकुर्यात्प्रयत्नतः ॥ १५ ॥

ஆதலால் மஹாமதியே! சகல வைதிக கர்மங்களும் சித்த சுத்தி பரியந்தத்தினவே யாம். (சித்த சுத்தியின் பொருட்டு) அவற்றை முயன்று செய்யவேண்டும். (சரு)

शमोदमस्तितिक्षाच वैराग्यंसत्त्वसंभवः ॥
तावत्पर्यंतमेवस्युः कर्माणिनततःपरम् ॥ १६ ॥

சமம்(மனநிக்ரகம்) தமம் (இந்திரியநிக்ரகம்) திதிக்ஷை (சகிப்பு) வைராக்கியம் (ராகமின்மை) சத்துவ (சித்த சுத்தியின்) சம்பவம் என்னுமிவை யுண்டாகும் அவ்வளவு பரியந்தமேயாம் கர்மங்கள்; அதற்குமேலில்லை. (கசு)

तदन्तेचैवसंन्यस्य संश्रयेद्गुरुमात्मवान् ॥
श्रोत्रियंब्रह्मनिष्ठञ्च भक्त्यानिर्व्याजया पुनः १७

அதன் முடிவிற் றான் சந்நியசித்து (சர்வகர்மங்களையும் விட்டு) சுவாதீன சித்தமுள்ளவனுப்ச் சுரோத்திரிய(வேதவேதார்த்த முணர்ந்தவ)ரும், பிரஹ்மநிஷ்டருமான குருவினை

நிஷ்கபடமான (ஏகாந்த) பக்தியோடு செவ்வையா யாசிரயிக்கவேண்டும். (கஎ)

वेदान्तश्रवणंकुर्या न्नित्यमेवमतंद्रितः ॥
तत्त्वमस्यादिवाक्यस्य नित्यमर्थंविचारयेत् १८

சோம்பலில்லாதவனாய் நித்தியமும் வேதாந்த சிரவணம் செய்க. நித்தியம் தத்துவமஸியாதிவாக்கியத்தின் அர்த்தத்தினை விசாரிக்க.()

तत्त्वमस्यादिवाक्यन्तु जीवब्रह्मैक्यबोधकम् ॥
ऐक्येज्ञाते निर्भयस्तु मद्रूपोहि प्रजायते ॥ १९ ॥

தத்துவமஸியாதி வாக்கியமோ ஜீவப்பிரஹ்மைக்கியத்தினை அறிவிப்பதாம். ஐக்கியமுணர்ந்தபோது பயமின்றியவனாய் எனது வடிவமே யாகின்றான். (கக)

पदार्थावगतिःपूर्वं वाक्यार्थावगतिस्ततः ॥
तत्पदस्यच वाच्यार्थो गिरेऽहंपरिकीर्तितः २०

முன்னர் பதார்த்தஞானமும், அதன்பின் வாக்கியார்த்த ஞானமுமாம், பார்வதனே! ஈசுவரியான யான் தத்பதத்தின் வாச்சியார்த்தமாகச் சொல்லப் படுகின்றேன். (உ0)

त्वंपदस्यच वाच्यार्थो जीवएवनसंशयः ॥
उभयोरैक्यमासिनापदेन प्रोच्यते बुधैः ॥ २१ ॥

துவம்பதத்தின் வாச்சியார்த்தம் ஜீவனே! சம்சயமில்லை. இரண்டன் ஐக்கியம் அஸிபதத்தினல் அறிஞர்களாற் சொல்லப்படுகின்றது. ()

वाच्यार्थयोर्विरुद्धत्वा दैक्यंनैवघटेतह ॥
लक्षणाऽतः प्रकर्तव्या तत्त्वमोः श्रुतिसंस्थयोः २२

(சர்வஞ்ஞத்வாதி விசிஷ்டமும் கிஞ்சித்வாதி விசிஷ்டமுமான) வாச்சியார்த்த மிரண்டற்கும் விரோத மிருத்தலின் ஐக்கியம் பொருந்தவே மாட்டாது. ஆதலால் சுருதியின்க ணிருப்பனவாகிய தத்துவம்பத மிரண்டற்கும் * இலக்ஷணை செய்யவேண்டியதாம். (உஉ)

चिन्मात्रन्तुतयोर्लक्ष्यं तयोरैक्यस्यसंभवः ॥
तयोरैक्यं तथाज्ञात्वा स्वाभेदेनाद्वयोभवेत् २३

---

* விசாரசந்திரோதயம் உஅரு-வது பக்கத்தில் உ0ங-வது வினு விடையில் இதன் விரிவைக் காண்க.

சின்மாத்திரமோ அவ்விரண்டன் இலக்ஷிய மாம். (ஆகவே சர்வஞ்ஞத்வாதி கிஞ்சிஞ்ஞத் வாதி விரோததர்மங்களை விட்டு சின்மாத்திர லக்ஷியமான) அவ்விரண்டற்கும் ஐக்கியம் சம்ப விக்கின்றது. அவ்வாறே அவ்விரண்டன் ஐக் கியத்தினைத் தனதபேதமாக வுணர்ந்து அத் வய ஞானின்றான். (உ௩)

देवदत्तःसएवाऽयमितिवल्लक्षणास्मृता ॥
स्थूलादिदेहरहितो ब्रह्मसंपद्यतेनरः ॥ २४ ॥

"அவனே இத்தேவதத்தன்" என்பது போல இலக்ஷணை கருதப்படுகின்றது. ஸ்தூல முதலிய தேகமின்றிய நரன் பிரஹ்மத்தினை அடைகின்றான். (உ௪)

पञ्चीकृतमहाभूत संभूतः स्थूलदेहकः ॥
भोगालयो जराव्याधिसंयुतःसर्वकर्मणाम् ॥ २५ ॥

பஞ்சீகிருத மகாபூதங்களினின் றுண்டாகிய ஸ்தூலதேகம் ஜராவியாதிகளோடு கூடியதாய்ச் சர்வகர்மங்களின் போகாலயமாம். (உ௫)

मिथ्याभूतोऽयमाभाति स्फुटंमायामयंत्वतः ॥
सोऽयंस्थूलउपाधिःस्यादात्मनोमेनगेश्वर ॥ २६ ॥

மாயாமயமான இது மித்தியாவடிவினதாய் வெளிப்படையாய்த் தோற்றுகின்றது. பர்வத ராஜனே! அத்தன்மைய இது ஆத்மாவாகிய எனக்கு ஸ்தூல வுபாதியாம். (உகூ)

ज्ञानकर्मेंद्रिययुतं प्राणपञ्चकसंयुतम् ॥
मनोबुद्धियुतंचैतत्सूक्ष्मंतत्कवयोविदुः ॥ २७ ॥

ஞான கர்மேந்திரியங்களோடு கூடியதும், பிராண பஞ்சகங்களோடு கூடியதும், மனோ புத்திகளோடு கூடியதுமான இத்தேகமெது வோ, அதனைக் கவிகள் சூக்ஷ்ம வுபாதி யென் றறிவர். (உஎ)

अपञ्चीकृतभूतोत्थं सूक्ष्मदेहोऽयमात्मनः ॥
द्वितीयोऽयमुपाधिःस्यात्सुखादेरवबोधकः ॥ २८ ॥

அபஞ்சீகிருத பூதத்தினின்றுண்டாகிய இது ஆத்மாவின் சூக்ஷ்மதேகமாம். சுகதுக்கங்களை அறிவிப்பதான இது இரண்டாவது உபாதி யாம். (உஅ)

अनाद्यनिर्वाच्यमिदमज्ञानंतु तृतीयकः ॥
देहोऽयमात्मनोभाति कारणात्मा नगेश्वर ॥ २९ ॥

அநாதி(உற்பத்தியின்றிய)அநிர்வாச்யமான (இத்தன்மையதென் றுறுதியாய்ச் சொல்லக் கூடாததான) இவ் வஞ்ஞானம் மூன்றாவது உபாதியாம், மலையரசனே! இத்தேகம் ஆத்மாவுக்குக் காரண வடிவமாக விளங்குகின்றது. (உ௯)

उपाधिविलयेजाते केवलात्मावशिष्यते ॥
देहत्रये पञ्चकोशा अन्तस्थाः संतिसर्वदा ॥ ३० ॥

உபாதி விலயமானபோது கேவலம் ஆத்மா மிஞ்சுகின்றது. தேகமூன்றிலும் (அந்நமயாதி) பஞ்சகோசங்கள் எப்போதும் அடங்கினவைகளா யிருக்கின்றன. (௩௦)

पञ्चकोशपरित्यागे ब्रह्मपुच्छंहिलभ्यते ॥
नेतिनेतीत्यादिवाक्यैर्ममरूपंयदुच्यते ॥ ३१ ॥

நேதி நேதி (இத்தன்மையதன்று இத்தன்மையதன்று) என்றல் முதலிய வாக்கியங்களால்

பஞ்சகோசங்களை நீக்கியபோது எந்த ஏனது ரூபம் சொல்லப்படுகின்றதோ அந்தப் பிரஹ்ம மாகிய புச்சம் (ஆதாரம்) பெறப்படுகின்றது. ()

नजायतेम्रियतेतत्कदाचि
न्नाऽयंभूत्वा नबभूवकश्चित् ॥
अजोनित्यः शाश्वतोऽयंपुराणो
न हन्यते हन्यमाने शरीरे ॥ ३२ ॥

அது ஒருபோதும் பிறக்கிறதில்லை; இறக்கிற தில்லை. இஃது உண்டாய் இருப்பதன்று (உண் டாகாமலே என்று மிருக்கின்றது.) பிறப்பில் லாததும், நித்தியமும், சாசுவதமும், பழமை யானதுமான இது கொல்லப்படுவதான சரீரத் தில் கொல்லப்படுகிறதில்லை. (கூஉ)

हतंचेन्मन्यतेहंतुं हतश्चेन्मन्यतेहतम् ॥
उभौतौनविजानीतो नाऽयंहंति न हन्यते ॥ ३३ ॥

கொல்லப்பட்டதாயின் கொல்ல மதிக்கின் றான். கொல்லப்பட்டவனாயின் கொல்லப்பட்ட தாக மதிக்கின்றான். அவ்வாறு கருது மிரு

வரும் (ஆத்மாவினை) அறிந்தவராகார். இவ்வாத்மா கொல்லுகிறதுமில்லை; கொல்லப்படுகிறது மில்லை. (௩௩)

अणोरणीयान्महतोमहीयान्
आत्मास्यजंतोर्निहितोगुहायाम् ॥
तमक्रतुः पश्यतिवीतशोको
धातुप्रसादान्महिमानमस्य ॥ ३४ ॥

அணுவினும் அணுவும் மகத்(பெரி)தினும் மகத்துமான ஆத்மா, இந்தப் பிராணியின் இருதய (உள்ள)மான குகையில் வைக்கப்பட்டுளது. (அங்கு அநுபவமுண்டாதலால்) இதன் அம்மகிமையினைச் சித்தப் பிரசாதத்தி(மனத்தெளிவி)னுல் சங்கற்ப மொழிந்தவன் காண்கின்றுன்; அதனுல் சோகமொழிந்தவனுகின்றுன். (௩௪)

आत्मानं रथिनंविद्धि शरीरं रथमेवतु ॥
बुद्धिन्तुसारथिंविद्धि मनःप्रग्रहमेवच ॥ ३५ ॥

* ஆத்மாவை இரதிகனாகவும் தேகத்தினை இரதமாகவும் அறி. புத்தியினைச் சாரதியாகவும், மனத்தினைக் கடிவாளமாகவும் அறி. (நரு)

इन्द्रियाणिहयानाहु र्विषयांस्तेषुगोचरान् ॥
आत्मेंद्रियमनोयुक्तं भोक्तेत्याहुर्मनीषिणः ॥ ३६ ॥

இந்திரியங்கள் குதிரைகளும், விஷயங்களை அவை செல்லும் மார்க்கங்களாகவும், (சிதாபாசன்) இந்திரியம் மனது இவைகளோடுகூடிய ஆத்மாவினை (கூடஸ்தனை); போக்தாவென்றும் அறிஞர் கூறுவர். (நசா)

यस्त्वविद्वान्भवति चाऽमनस्कश्चसदाऽशुचिः ॥
नतत्पदमवाप्नोति संसारंचाधिगच्छति ॥ ३७ ॥

எவன் அவித்வானும் மனமடங்காதவனும் எப்போதும் அசுசியு(சத்கர்ம மில்லாதவனு)மாகின்றனோ, அவன் அப்(பரமாத்ம)பதத்தினை அடையான்; சம்ஸாரத்தினைப் பெறுகின்றான். ()

---

* இது கடவல்லியில் சொல்லப்பட்டுளது.

यस्तुविज्ञानवान्भवति समनस्कः सदाशुचिः ॥
सतुतत्पद माप्नोति यस्माद्भूयोनजायते ॥ ३८ ॥

எவன் விஞ்ஞான (விவேக)முடையவனும் மனமடங்கியவனும் சதாசுசியு மாகின்றானோ, அவன் எதனின்று மறுபடியும் பிறக்கிறதில்லையோ, அந்தப் பதத்தினை யடைகின்றான். (ஙஅ)

विज्ञानसारथिर्यस्तु मनःप्रग्रहवान्नरः ॥
सोऽध्वनः पारमाप्नोति मदीयंयत्परंपदम् ॥ ३९ ॥

எந்தநரன் விஞ்ஞானமுள்ள சாரதி யுடையவனும், மனக் கடிவாள முடையவனு மாகின்றானோ, அவன் சம்சார மார்க்கத்தின் எல்லையாகிய எனது * பரம(மேலான)பதத்தினை யடைகின்றான். (ஙகூ)

इत्थंश्रुत्याच मत्याच निश्चित्यात्मानमात्मना ॥
भावयेन्मामात्मरूपां निदिध्यासनतोऽपिच ॥ ४० ॥

* எது ஞானிகளால் பெறப்படுகின்றதோ அத்தன்மைய எனது மேலான ரூபமான சச்சிதாநந்த கனம் பரமபத மெனப்படும் என்பது பொருள்,

இவ்வாறு சுருதியினாலும் மதிப்பி(மனனத்தி)னாலும் ஆத்மாவினை ஆத்மாவினால் (அந்தக்கரணத்தால்) (பரோக்ஷமாக) நிச்சயித்து, (சாக்ஷாத்காரத்தின் பொருட்டு) ஆத்மரூபமான என்னை நிதித்தியாசனத்தி (ஏகாக்கிரசித்தவிருத்தியி)னாலும் பாவிக்க. (சய)

योगवृत्तेः पुरास्वस्मिन्भावयेदक्षरत्रयम् ॥
देवीप्रणवसंज्ञस्य ध्यानार्थं मन्त्रवाच्ययोः ॥ ४१ ॥

யோக(சமாதி) விருத்திக்கு முன் தன்சரீரத்தில் மாயாபீஜ மந்திரமும் வாச்சியமுமான சமஷ்டி வியஷ்டிகளிரண்டனது தியானத்தின் பொருட்டுத் தேவிப்பிரணவமென்னும் மாயாபீஜமந்திர(ஹ்ரீங்கார)த்தின் அக்ஷரங்கள் மூன்றையும் பாவிக்கவேண்டும். (சக)

हकारःस्थूलदेहःस्याद्रकारस्सूक्ष्मदेहकः ॥
ईकारः कारणात्मासौ ह्रीङ्कारोऽहं तुरीयकम् ४२

ஹகாரம் ஸ்தூலதேகமும், ரகாரம் சூக்ஷ்மதேகமும், ஈகாரம் காரணதேகமுமாம், இந்த ஹ்ரீங்காரம் துரியமாகியயானாம். (சஉ)

एवंसमष्टिदेहेऽपि ज्ञात्वाबीजत्रयंक्रमात् ॥
समष्टिव्यष्ट्योरेकत्वं भावयेन्मतिमान्नरः ॥ ४३ ॥

இவ்வாறு சமஸ்டி தேகத்திலும் பீஜமூன்றனையும் கிறமமாக அறிந்து, புத்திமானாகிய நரன் சமஷ்டி வியஷ்டிகளின் (பிண்ட பிரஹ்மாண்டங்க ளிரண்டன் ஏகத்வ நியாயத்தால்) ஏகத்துவத் தினைப் பாவிக்கக்கடவன். (சந)

समाधिकालात्पूर्वंतु भावयित्वैवमादृतः ॥
ततोध्यायेन्निलीनाक्षो देवींमां जगदीश्वरीम् ४४

சமாதி காலத்திற்குமுன் இவ்வாறு ஆதரவோடு பாவித்து, அதன்பின் கண்களை மூடியவனாய் ஜகதீசுவரியான தேவியாகிய என்னைத் தியானிக்கக் கடவன். (சச)

प्राणापानौसमौकृत्वा नासाभ्यंतरचारिणौ ॥
निवृत्तविषयाकांक्षो वीतदोषोविमत्सरः ॥ ४५ ॥
भक्त्यानिर्व्याजयायुक्तो गुहायांनिःस्वनेस्थले ॥
हकारंविश्वमात्मानं रकारेप्रविलापयेत् ॥ ४६ ॥

நாசியினுள் நடப்பனவாகிய * பிராணாபான னிரண்டினையும் (பிராணாயாமாப்பியாசத்தால்) சமமாக்கி, விஷய விருப்பொழிந்தவனும், தோஷநீங்கியவனும், மற்சர மில்லாதவனும், ஏகாந்த பக்தியோடு கூடியவனுமாய் இரகசிய மான ஏகாந்த ஸ்தலத்தில் ஹகாரமான விசு வாத்மாவை (வைசுவானரனை) ரகார(சூக்ஷ்ம தேக)த்தில் ஒடுக்குக, (ச௬)

रकारंतैजसंदेव मीकारेप्रविलापयेत् ॥
ईकारंप्राज्ञमात्मानं ह्रींकारेप्रविलापयेत् ॥४७॥

ரகாரமாகிய தைஜஸனை தேவனை, ஈகார (காரணதேக)த்தில் ஒடுக்குக. ஈகாரமாகிய பிராஞ்ஞனை ஆத்மாவினை ஹ்ரீங்கார(பிரஹ்ம)த்தில் ஒடுக்குக. (சஎ)

वाच्यवाचकताहीनं द्वैतभावविवर्जितम् ॥
अखण्डं सच्चिदानन्दं भावयेत्ताच्छिकान्तरे ४८

* பிராணனது வெளிமுகவிருத்தி பிராணன் அந்தர்முக விருத்தி அபானன்.

அதன் (சைதன்யதீபத்தின்) சிகையினுள் வாச்சிய வாசகத் தன்மை யின்றியதும் துவைத பாவமின்றியதும், அகண்டமுமான சச்சிதா நந்தத்தினைப் பாவிக்க. (சஅ)

इतिध्यानेनमांराजन्साक्षात्कृत्यनरोत्तमः ॥
मद्रूपएवभवति द्वयोरप्येकतायतः ॥ ४९ ॥

இவ்வாறு தியானத்தினல் அரசனே! நரோத்தமன் என்னைச் சாக்ஷாத்கரித்து என் வடிவமேயாகின்றான். இருவருக்கும் ஒருமை யிருத்தலால். (சகூ)

योगयुक्त्याऽनयाद्दष्ट्वामामात्मानंपरात्परम् ॥
अज्ञानस्यसकार्यस्य तत्क्षणेनाशकोभवेत् ॥ ५०

யோகயுக்தியான இதனல் பராத்பரமும் (மேலானதினும் மேலானதும்) ஆத்மாவுமாகிய என்னைக்கண்டு, அக்கணமே காரியத்தோடு

கூடிய அஞ்ஞானத்தினைக் கெடுப்ப வனாகின்
றான். (ரூ0)

इति श्रीदेवीभागवते महापुराणे सप्तमस्कंधे
देविगीतायां चतुर्थाऽध्यायः ॥

ஸ்ரீ தேவிகீதை
நான்காமத்தியாயம்
முடிந்தது

ॐ

# ஸ்ரீ தேவிகீதை.

## ॥ अथ पञ्चमोऽध्यायः ॥

## ஐந்தாம் அத்தியாயம்.

### யோகம் மந்திர சித்தியென்பவற்றின் சாதன நிரூபணம்.

हिमालय उवाच ॥

योगंवद महेशानि सांगंसंवित्प्रदायकम् ॥

कृतेनयेन योग्योऽहं भवेयंतत्त्वदर्शने ॥ १ ॥

இமாலயன் சொல்லலாயினன் :—மகேசுவரி! எதனைச் செய்வதனால் யான் தத்துவதரிசனத்தில் யோக்கியனாவேனோ அத்தன்மையசம்வித்(பிரஹ்மாகார ஞானத்)தினைத் தருவதான அங்கத்தோடு கூடிய யோகத்தினைச் சொல்லியருள்க. (க)

श्रीदेव्युवाच ॥
नयोगो नभसः पृष्ठे नभूमौ न रसातले ॥
ऐक्यंजीवात्मनोराहुर्योगंयोगविशारदाः ॥ २ ॥

ஸ்ரீ தேவி சொல்லலாயினள் :—ஆகாய முடிவிலும், பூமியிலும், இரசாதலத்திலும் யோகமில்லை. ஜீவன் ஆத்மா என்னும் இரண்டன் ஐக்கியம் (அபேதவிஷயகமான விருத்தி) யோகமாமென்று யோகத்திற் றேர்ந்தவர் கூறுவர். (உ)

तत्प्रत्यूहाः षडाख्याता योगविघ्नकरानघ ॥
कामक्रोधौ लोभमोहौ मदमात्सर्यसंज्ञकौ ॥ ३ ॥

பாபமின்றியவனே. யோகவிக்கினம் செய்வன வாகிய அதன் பிரதிபந்தங்(விரோதி)கள் ஆறெனப்படும். அவை காமக் குரோதமும் லோபமோகமும் மத மாத்ஸரியமுமாம். (௩)

योगांगैरेवभित्त्वातान्योगिनोयोगमाप्नुयुः ॥
यमंनियममासनप्राणायामौततःपरम् ॥ ४ ॥

அவற்றினை யோகிகள் யோகாங்கங்களால் பேதித்து யோகத்தினை (அவ்விருத்தியினை)

யடைவர். இயமமும், நியமமும் அதன்பின் ஆசனப் பிராணாயாமங்களும். (ச)

प्रत्याहारंधारणाख्यं ध्यानंसार्धं समाधिना ॥
अष्टांगान्याहुरेतानि योगिनांयोगसाधने ॥ ५ ॥

பிரத்தியாகாரமும் தாரணையென்பதும், சமாதியோடு கூடிய தியானமுமாகிய இவற்றினை யோகிகளின் யோகசாதனத்தில் * எட்டங்கங்களாமென்று கூறுவர். (ரு)

अहिंसासत्यमस्तेयं ब्रह्मचर्यंदयार्जवम् ॥
क्षमाधृतिर्मिताहारः शौचंचेति यमादश ॥ ६ ॥

அஹிம்ஸை (கொல்லாமை), சத்தியம் (வாய்மை), அஸ்தேயம் (திருடாமை), பிரஹ்மசரியம் (அஷ்டவித மைதுனமின்மை), தயை (இரக்கம்), ஆர்ஜவம் (நேர்மை), க்ஷமை (பொறுமை), திருதி (தைரியம்), மிதாகாரம் (அளவான உணவு), சௌசம் (தூய்மை) என்று இயமம் பத்தாம். (சு)

---

* இவற்றின் விரிவை ஹடயோக தீபிகை அஷ்டாங்க யோகமுதலியவற்றிற் காண்க.

तपःसंतोषआस्तिक्यं दानंदेवस्यपूजनम् ॥
सिद्धांतश्रवणञ्चैव ह्रीर्मतिश्चजपोहुतम् ॥ ७ ॥

தபசு, சந்தோஷம், ஆஸ்திக்யம், (ஈசுவரன் வேதம் குருமுதலியவற்றில் விசுவாசம்), தானம், ஈசுவரனது பூஜனம், சித்தாந்த (வேதாந்த) சிரவணம், (அகாரியத்தினைச் செய்தலில்) வெட்கம், மதி(சத்கர்ம சத்சாஸ்திர விஷயமான ஞானம்), ஜபம், ஹோமம். (எ)

दशैतेनियमाःप्रोक्ता मयापर्वतनायक ॥
पद्मासनंस्वस्तिकञ्च भद्रंवज्रासनंतथा ॥ ८ ॥

என்று மிப்பத்தும் பர்வதநாயகனே! என்னால் நியமங்களெனப்படுகின்றன. பத்மாசனம், ஸ்வஸ்திகம், பத்திரம், அவ்வாறே வஜ்ஜிராசனம். (அ)

वीरासनमितिप्रोक्तं क्रमादासनपञ्चकम् ॥
ऊर्वोरुपरिविन्यस्य सम्यकपादतलेशुभे ॥ ९ ॥
अंगुष्ठौचनिबध्नीयाद्धस्ताभ्यांव्युत्क्रमात्ततः ॥
पद्मासनमितिप्रोक्तं योगिनांहृदयंगमम् ॥ १० ॥

வீராசனம் என்று கிரமமாக ஆசன பஞ்சகம் சொல்லப்பட்டுளது. தொடைக ளிரண்டன் பேரிலும் சுபமான பாததலங்க ளிரண்டையும் செவ்வையாய் வைத்துப் பெருவிரல்க ளிரண்டையும் (பின்புறத்துச் சென்ற) இரண்டு கைகளாலும் மாறிப்பிடிக்குக. இது யோகிகளின் மன முவக்கச் செய்யும் பத்மாசனமெனப்படுகின்றது. (கூ-கώ)

जानूर्वोरंतरेसम्यक्कृत्वापादतलेशुभे ॥
ऋजुकायोविशेद्योगी स्वस्तिकंतत्प्रचक्षते ॥ ११ ॥

முழந்தாள் (கணைக்கால்) தொடைகளினிடையில் சுபமான பாததலங்க ளிரண்டையும் செவ்வையாய் வைத்து நேரான (வளையாத) சரீரமுடையவனா யிருக்கக் கடவன் யோகி. அது ஸ்வஸ்திக மென்று சொல்லப்படுகின்றது. (கக)

सीवन्याःपार्श्वयोन्र्यस्य गुल्फयुग्मंसुनिश्चितम् ॥
वृषणाधःपादपार्ष्णी पाणिभ्यां परिबन्धयेत् १२

அண்டகோசத்தின் கீழ்நரம்பாகிய சீவனியின் இருபுறங்களிலும் செவ்வையாய் நிச்சயிக்

கப்பட்ட குதி யிரண்டனையும் வைத்து பாதங்க ளிருமேற் புறங்களையும் இரண்டு கைகளாலும் பிடிக்குக. (கஉ)

भद्रासनमितिप्रोक्तं योगिभिःपरिपूजितम् ॥
ऊर्वोःपादौक्रमान्न्यस्य जान्वोःप्रत्यङ्मुखांगुली १३
करौविदध्यादाख्यातं वज्रासनमनुत्तमम् ॥
एकंपादमधःकृत्वा विन्यस्योरुंततोत्तरे ॥ १४ ॥

இது யோகிகளாற் பூஜிக்கப்படும் பத்திராசன மென்று சொல்லப்படுகின்றது. இரு தொடை களின் மேலிலும் இரண்டு பாதங்களையும் கிரம மாக வைத்து முழந்தா ளிரண்டிலும் உட் குவிந்த விரல்களை யுடைய கைகளிரண்டினையும் வைக்குக இது இணையற்ற வஜ்ஜிராஸன மென்று சொல்லப்படுகின்றது. ஒரு பாதத் தினைக் கீழே வைத்து, மற்றப் பாதத்தில் தொடையினை வைத்து, (கங-கச)

ऋजुकायोविशेद्योगिवीरासनमितीरितम् ॥
इडयाकर्षयेद्वायुं बाह्यंषोडशमात्रया ॥ १५ ॥

நிமிர்ந்த காயமுள்ளவனாய் யோகி யிருக்கக் கடவன். இது வீராசன மெனப்படும். இடையினால் வெளி வாயுவினை இடை(சந்திரநாடி) யினால் பதினாறு * மாத்திரை யளவு உள்ளிழுக்குக. (கரு)

धारयेत्पूरितंयोगी चतुःषष्ट्यातुमात्रया ॥
सुषुम्नामध्यगंसम्यग्द्वात्रिंशन्मात्रयाशनैः ॥ १६ ॥

பூரித்த(உள்நிரப்பிய)தனை யோகி அறுபத்து நாலு மாத்திரை யளவால் தரிக்குக(கும்பகம் செய்க). சுழுமுனை நடுவிலுள்ள வாயுவினைச் செவ்வையாய் முப்பத்திரண்டு மாத்திரை யளவாக மெல்ல (கசா)

नाड्यापिंगलयाचैव रेचयेद्योगवित्तमः
प्राणायाममिमंप्राहु र्योगशास्त्रविशारदाः ॥ १७ ॥

பிங்கலை(சூரியநாடி)யினால் இரேசிக்குக. யோகவித்தமன் இதனைப் பிராணயாம மென்று யோக சாஸ்திரத்திற் றேர்ந்தவர் கூறுவர். (கஎ)

---

* ஒரு பிரணவத்தினை யுச்சரிக்கும் கால அளவு ஒரு மாத்திரையாம்.

भूयोभूयः क्रमात्तस्य बाह्यमेवं समाचरेत् ॥
मात्रावृद्धिः क्रमेणैव सम्यग्द्वादशषोडश ॥ १८ ॥

மறுபடியும் மறுபடியும் கிரமமாக இவ்வாறு அதன் பாகியத்தினைச் செவ்வையாய் ஆசரிக்க மாத்திராவிருத்திக்(அதிகப் படுத்தும்) கிரமமாகவே செவ்வையாகப் பன்னிரண்டு பதினாறு பிராணுயாமங்களாக அதிகப்படுத்துக. (கஅ)

जपध्यानादिभिःसार्धं सगर्भंतंविदुर्बुधाः ॥
तदपेतंविगर्भंच प्राणायामंपरेविदुः ॥ १९ ॥

(தனது இஷ்டமந்திர) ஜபத்தியாநாதிகளோடுகூடிய அதனை சகர்ப்பப்பிராணுயாமமென்று அறிஞர் அறிவர். அந்த ஜபாதிகளின்றியதனை விகர்ப்ப(அகர்ப)ப்பிராணுயாமமென்று பிறர் அறிவர். (கக)

क्रमादभ्यस्यतःपुंसो देहेस्वेदोद्गमोधमः ॥
मध्यमःकंपसंयुक्तो भूमित्यागःपरोमतः ॥ २० ॥

கிரமமாக அப்பியசிக்கின்ற புருஷனது தேகத்தில் வியர்வை வெளிப்படுதல் அதமப் பிராணுயாமமாம். நடுக்கத்தோடு கூடியது

மத்தியமப்பிராணாயாமமாம். பூமியைவிடுதல் (பத்மாசனத்திருக்குமவன் பூமியினின்று மேலெழும்புதல்) பரம்(உத்தமம்) என்று கருதப்படுகின்றது. (உo)

उत्तमस्यगुणावाप्ति र्यावच्छीलनामिष्यते ॥
इंद्रियाणांविचरतां विषयेषुनिरर्गलम् ॥ २१ ॥

உத்தமப்பிராணாயாமத்தினது குணத்தின் அடைவு உண்டாகும் வரையில் அப்பியாசம் அங்கீகரிக்கப்படுகின்றது. விஷயங்களில் உலாவுகின்ற இந்திரியங்களைத் தடையின்றி (உக)

बलादाहरणंतेभ्यः प्रत्याहारोभिधीयते ॥
अंगुष्ठगुल्फजानूरु मूलाधारलिंगनाभिषु ॥ २२ ॥

அவற்றினின்றும் வலிந்திழுத்தல் பிரத்தியாகாரமென்று சொல்லப்படுகின்றது. * பெருவிரல், குதி, முழந்தாள், தொடை, மூலாதாரம், லிங்கம், நாபி என்பவற்றிலும் (உஉ)

---

* இவற்றை ஷோடசாதாரமென்று சிவயோகீகை முதலியவற்றில் கூறியிருத்தல் காண்க.

हृद्ग्रीवाकंठदेशेषु लंबिकायांततोनसि ॥
भ्रूमध्येमस्तकेमूर्ध्नि द्वादशांतेयथाविधि ॥ २३ ॥

இருதயம், கழுத்து, கண்டமென்பவற்றிலும், நாவிலும், அதன்பின் நாசியிலும், புருவநடுவிலும், தலையிலும், உச்சியிலும், * துவாதசாந்தத்திலும் (உச்சிக்குழியிலும்) விதிப்படி (உங)

धारणंप्राणमरुतो धारणेतिनिगद्यसे ॥
समाहितेनमनसा चैतन्यांतरवर्तिना ॥ २४ ॥

आत्मन्यभीष्टदेवानां ध्यानंध्यानमिहोच्यते ॥
समत्वभावनानित्यं जीवात्मपरमात्मनोः ॥ २५ ॥

பிராணவாயுவினை வை(நிறு)த்தல் தாரணமென்று சொல்லப்படுகின்றது. சைதனியத்திலிருப்பதும் ஏகாக்கிரமுமான மனதினால் ஆத்மாவில் (உள்ளத்தில்) அபீஷ்டமான தேவர்களைத் தியானித்தல் இங்குத் தியானம் என்று சொல்லப்படுகின்றது. நித்தியம் ஜீவாத்ம

---

* மூக்குநுனி அல்லது உண்ணாக்கு முதல் பன்னிரண்டங்குலத்தின் மேலிடம் துவாதசாந்தமாம்.

பரமாத்மாக்களின் * சமத்துவ(ஐக்கிய)பாவனையை, (உரு)

समाधिमाहुर्मुनयः प्रोक्तमष्टांगलक्षणम् ॥
इदानीं कथयेतेऽहं मन्त्रयोगमनुत्तमम् ॥ २६ ॥

சமாதியென்று முனிவர் கூறுவர். அஷ்டாங்க லக்ஷணம் சொல்லப்பட்டது. இப்போது இணையற்ற மந்திரயோகத்தினை உனக்கு யான் சொல்லுகின்றேன். (உசா)

विश्वंशरीरमित्युक्तं पञ्चभूतात्मकंनग ॥
चन्द्रसूर्याग्नितेजोभि र्जीवब्रह्मैक्यरूपकम् ॥ २७ ॥

பர்வதனே! பஞ்சபூத வடிவினதாகிய சரீரம்(பிண்டம்)விசுவ(பிரஹ்மாண்ட)மெனப்படுகின்றது. சந்திர சூரியாக்கினி தேஜசுகளால் ஜீவப் பிரஹ்மைக்கிய ரூபத்தினை யுடையதாம். (உஎ)

---

* இங்கு சமத்துவபாவனை சப்தத்தினால் சம்பிரஞ்ஞாதசமாதி கொள்ளப்படும்; அதுவேயோகாங்கமாதலின் சமாதி சப்தத்தால் அசம்பிரஞ்ஞாதசமாதி கொள்ளப்படும்; நிர்விகற்ப சமாதியாகிய அதுவே அங்கியெனக்கொண்டிருத்தலின்.

तिस्रःकोट्यस्तदर्धेन शरीरेनाड्योमताः ॥
तासुमुख्यादशप्रोक्ता स्ताभ्यास्तिस्रोऽव्यवस्थिताः ॥
प्रधानामेरुदण्डेऽत्र चन्द्रसूर्याग्निरूपिणी ॥
इडावामेस्थितानाडी शुभ्रातुचंद्ररूपिणी ॥ २९ ॥

சரீரத்தில் மூன்றரைக்கோடி நாடிகள் மதிக்கப்படுகின்றன. அவற்றுள் பத்து முக்கியமெனப்படும். அவற்றினின்று மூன்று முக்கியமாய்க் கொள்ளப்பட்ட அவை இங்கு மேருதண்டத்தில் சந்திர சூரியாக்கினி வடிவினவாம். வாமத்தி(இடது நாசியி)லிருக்கும் தூய்மையான சந்திரவடிவினதாகிய நாடி இடையாம். (உஅ-உக)

शक्तिरूपातुसानाडी साक्षादमृतविग्रहा ॥
दक्षिणेयापिंगलाख्या पुंरूपासूर्यविग्रहा ॥ ३० ॥

சக்தி(பிரகிருதி)வடிவினதாகிய அந்த நாடி சாக்ஷாத் அமிருத விக்கிரகமாம். வலது நாசியிலிருப்பதான பிங்கலை யென்னும் நாடி புருஷவடிவினதாம் சூரிய விக்கிரகமுமாம். (௩0)

सर्वतेजोमयीसातु सुषुम्नावह्निरूपिणी ॥
तस्यामध्येविचित्राख्ये इच्छाज्ञानाक्रियात्मकम् ॥
मध्येस्वयम्भूलिंगन्तु कोटिसूर्यसमप्रभम् ॥
तदूर्ध्वंमायाबीजंतु हरात्मबिंदुनादकम् ॥ ३२ ॥

சர்வ தேஜோமயமான அந்தச் சுழுமுனை நாடி அக்கினி வடிவினதாம். அதன் மத்தியில் (சுழுமுனையின் மூலதேசத்தில்) விசித்திரை (சித்திரா) என்னும் நாடியினுள் கோடிசூரியப் பிரபையொத்ததும், இச்சா ஞானக்கிரியா வடிவினதுமான ஸ்வயம்பூ லிங்க மிருக்கின்றது. அதன்மேல் ஹகார ரகார ஈகார பிந்து நாதவடிவினதாகிய மாயாபீஜ மிருக்கின்றது. (௩௧-௩௨)

तदूर्ध्वंतुशिखाकारा कुण्डलीरक्तविग्रहा ॥
देव्यात्मिकातुसाप्रोक्ता मदभिन्नानगाधिप ॥३३॥

அதற்குமேல் தீபச்சிகை வடிவினதும் சிவப்பு வடிவினதுமான குண்டலி யிருக்கின்றது. மலையதிபனே! தேவி வடிவினதாகிய அது என்னின் வேறின்றிய தாகச் சொல்லப்படுகின்றது. (௩௩)

तद्बाह्ये हेमरूपाभं वादिसांतचतुर्दलम् ॥
द्रुतहेमसमप्रख्यं पद्मं तत्र विचिंतयेत् ॥ ३४ ॥

அதன் வெளிப்புறத்தில் பொன் னிறத்ததும், வகாரமுதல் ஸகார மீறான (व-श-ष-स) நான்கு தள முடையதும், உருக்கிய தங்கம் போன்ற காந்தியினதுமான கமலத்தினை அங்கு தியானிக்க. (நூச)

तदूर्ध्वे त्वनलप्रख्यं षड्दलं हीरकप्रभम् ॥
बादिलान्तषड्वर्णेन स्वाधिष्ठानमनुत्तमम् ॥ ३५ ॥

அதற்குமேல் அநலை யொத்த ஆறுதளங்களை யுடையதும், வயிர நிறத்ததும், * ब (ப) கார முதல் ल லகாராந்தமான ஆறக்ஷரங்களோடு கூடியதும், இணை யில்லாததுமான சுவாதிஷ்டான முளது. (நூரு)

मूलमाधारषट्कोणं मूलाधारं ततो विदुः ॥
स्वशब्देन परंलिंगं स्वाधिष्ठानं ततो विदुः ॥ ३६ ॥

---

* ब, भ, म, य, र, ल.

அறு கோணத்திற்கு மூலமான ஆதாரமா யிருத்தலால் மூலாதார மென்று அறிவர். சுவ சப்தத்தினால் பரமான லிங்கம் சொல்லப்படுத லால் அதன் அதிஷ்டானமாகிய இதனைச் சுவா திஷ்டான மென்றறிவர். (௩௬)

तदूर्ध्वेनाभिदेशेतु मणिपूरमहाप्रभम् ॥
मेघाभंविद्युदाभंच बहुतेजोमयंततः ॥ ३७ ॥

அதற்குமேல் நாபிஸ்தானத்தில் மின்னலை யொத்ததும், மேகத்தினை யொத்த காந்தி யினதும், வெகுதேஜோமயமுமான மகாப் பிரபையுள்ள மணிபூர மிருக்கின்றது. (௩௭)

मणिवद्भिन्नंतत्पद्मं मणिपद्मन्तथोच्यते ॥
दशभिश्चदलैर्युक्तं डादिफांताक्षरान्वितम् ॥ ३८ ॥

அப்பதுமம் மணியினைப்போல் பின்னமா யி(விரிந்தி)ருத்தலால் மணிபதும மெனப்படு கின்றது. அது * ड (ட)காரமுதல் फ (ப)கா ராந்தமுமான அக்ஷரங்களோடு கூடிய பத்துத் தளங்(இதழ்)களோடு கூடியதாம், (௩௮)

* ड, ढ, ण, त, थ, द, ध, न, प, फ.

विष्णुनाधिष्ठितंपद्मं विष्ण्वालोकनकारणम् ॥
तदूर्ध्वेनाहतंपद्म मुद्यदादित्यसन्निभम् ॥ ३९ ॥

कादिठांतदलेरर्क पत्रैश्चसमधिष्ठितम् ॥
तन्मध्येबाणलिंगन्तु सूर्यायुतसमप्रभम् ॥ ४० ॥

விஷ்ணுவினால் அதிஷ்டிக்கப் பட்டதுமாம், விஷ்ணுவைக் காணுதலில் காரணமாம். அதற்கு மேல் உதிக்கின்ற(பால)சூரியனை யொத்த பிரபை யுள்ளதும், * क (க)காரமுதல் ठ (ட) காராந்தமான தளங்களாகிய பன்னிரண்டு இதழ்களால் செவ்வையாய் அதிஷ்டிக்கப் பட்டதுமான அநாகதபதும மிருக்கின்றது. அதன் மத்தியில் பதினாயிரம் சூரியனை யொத்த பிரபையினையுடைய பாணலிங்கம் விளங்குகின்றது. (௩௯-௪0)

शब्दब्रह्ममयंशब्दा नाहतंतत्रदृश्यते ॥
अनाहताख्यंतत्पद्मं मुनिभिःपरिकीर्तितम् ॥ ४१ ॥

---

* क, ख, ग, घ, ङ, च, छ, ज, झ, ञ, ट, ठ.

அங்கு சப்தப் பிரஹ்மமயமான * அநாஹத சப்தம் காணப்படுகின்றது. அதனால் அப் பதுமம் அநாஹத மென்று முநிகளால் சொல் லப்படுகின்றது. (சுக)

आनन्दसदनंतत्तु पुरुषाधिष्ठितम्परम् ॥
तदूर्ध्वंतुविशुद्धाख्यं दलषोडशपङ्कजम् ॥ ४२ ॥

அது ஆநந்தத்திற் கிடமும் புருஷா(ருத்திரா) திஷ்டிதமும், பரமுமாம். அதற்கு மேல் (கண் டத்தில்)விசுத்த மெனப்படும் பதினறு தளமுடைய பதுமமுளது. (சு௨)

स्वरैःषोडशभिर्युक्तं धूम्रवर्णमहाप्रभम् ॥
विशुद्धंतनुतेयस्मा ज्जीवस्यहंसलोकनात् ॥ ४३ ॥
विशुद्धंपद्ममाख्यात माकाशाख्यंमहाद्भुतम् ॥
आज्ञाचक्रंतदूर्ध्वंतु आत्मानाधिष्ठितंपरम् ॥ ४४ ॥

பதினறு ஸ்வரங்க(உயிர்க)ளோடு கூடியதும், புகைவர்ணத்தினதும், மகாப்பிரபை யுள்ளது

---

* அடித்தலாதியின்றி யெழும் சப்தம் அநாகதசப்தமாம். அதனை மத்தியமா வாகவென் றறிக.

மாம். ஹம்ஸமாகிய பரமாத்மாவினை யறிதலால் ஜீவனது விசுத்தத்தினை எதனால் விரிக்கின்றதோ அதனால் விசுத்தபதும மெனப்படுகின்றது. அதற்குமேல் (புருவநடுவில்) ஆத்மாவினால் அதிஷ்டிக்கப்படுவதும் பரமும் மகாற்புதமுமான ஆகாச மெனப்படும் ஆஜ்ஞாசக்கிர முளது. (சங-சச)

आज्ञासंक्रमणंतत्र तेनाज्ञेतिप्रकीर्तितम् ॥

द्विदलंहक्षसंयुक्तं पद्मंतत्सुमनोहरम् ॥ ४५ ॥

* அங்கு பரமேசுவரனது ஆஜ்ஞை கலத்தல் உண்டாகின்றது. அதனால் ह, (ஹ) क्ष, (க்ஷ) என்னும் இரண்டு தளங்களோடுகூடிய அப்பதுமம் மிக மனோகரமாம். (சரு)

---

* அந்த ஸ்தலத்தில் வைக்கப்பட்ட சித்தமுடைய புருஷனுக்குச் சர்வபதார்த்த சாக்ஷாத்காரத்தால் இவ்வாறு நிகழ்ந்தது இவ்வாறு நிகழ்கின்றது இவ்வாறு நிகழும் என்னும் ஞானத்தினால் இதற்குமேல் உன்னால் இவ்வாறு செய்யத்தக்கதா மென்னும் பரமேசுவரனது ஆஜ்ஞை கலக்கின்றது. அவ்வேதுவால் அது ஆஞ்ஞாசக்கிரமென்று சொல்லப்படுகின்ற தென்பது பொருள்.

அங்கு ஆறுசக்கிர (லிங்கரூப) தேவதைகளை யும் (ஆநந்தாஸ்வடிவ) அமிருததாரையினால் சந் தர்ப்பித்து (திருப்தி செய்வித்து) அதன்பின் புத்திமான் அவ்வழியாக மூலாதாரத்திற்குக் கொண்டுவருக. (ருக)

एवमभ्यस्यमानस्याऽप्यहन्यहानिनिश्चितम् ॥
पूर्वोक्तदूषितामंत्राः सर्वेसिध्यंतिनान्यथा ॥ ५२ ॥

இவ்வாறு நாள்தோறும் அப்பியசிப்ப வனுக்கு முற்கூறிய (சின்னமஸ்தாதி) தோஷ முடைய மந்திரங்க ளெல்லாம் சித்திக்கின்றன. வேறு விதத்தி லில்லை. (ருஉ)

जरामरणदुःखाद्यै र्मुच्यतेभवबन्धनात् ॥
येगुणाःसन्तिदेव्यामे जगन्मातुर्यथातथा ॥ ५३ ॥

तेगुणाःसाधकवरे भवन्त्येवनचान्यथा ॥
इत्येवंकथितंतात वायुधारणमुत्तमम् ॥ ५४ ॥

ஜராமரண துக்கங்களால் பவபந்தத்தி னின்று விடுபடுகின்றான். ஜகன்மாதாவும் தேவியுமான எனக்கு எப்படி எந்தக்குணங்க

ளிருக்கின்றனவோ அப்படியே அந்தக் குணங்கள் சாதக சிரேஷ்டனிடத்தில் உண்டாகவே செய்கின்றன; வேறுவிதமாக இல்லை. என்று இவ்வாறு ஐய! உத்தமமான வாயுதாரணம சொல்லப்பட்டது. (ருந-ருச)

इदांनींधारणाख्यंतु शृणुष्वावहितोमम ॥
दिक्कालाद्यनवच्छिन्न देव्यांचेतोविधायच ॥ ५५ ॥

* இப்போது கவன முள்ளவனாய் எனது தாரணை யென்பதனைக் கேள். திக்குக்காலமுதலிய வற்றால் பரிச்சின்னப்படாத தேவியினிடத்தில் சித்தத்தினை வைத்து (ருரு)

तन्मयोभवतिक्षिप्रं जीवब्रह्मैक्ययोजनात् ॥
अथवासमलंचेतो यदिक्षिप्रंनासिद्ध्यति ॥ ५६ ॥

ஜீவப்பிரஹ்மைக்கியச் சேர்க்கையால் விரைவில் தன்மயனாகின்றான். அல்லது மலத்தோடு

---

* பிரசங்கத்தால் முற்கூறப்பட்ட தாரணா சொரூபத்தினை விஷயபேதத்தால் விளக்குகின்றார். அதாவது அஷ்டாங்க யோகநிரூபணத்தில் வாயுதாரணை சொல்லப்பட்டது; இங்கு சித்தத்தின் தாரணை சொல்லப்படுகின்றதென்பது பொருள்.

கூடிய சித்தத்திற்கு விரைவில் சித்திக்கவில்லையாயின், (ருசா)

तदावयवयोगेन योगीयोगान्समभ्यसेत् ॥
मदीयहस्तपादादा वंगेतुमधुरेनग ॥ ५७ ॥

அப்போது (எனது) அவயவ சம்பந்தத்தால் யோகி யோகங்களைச் செவ்வையாய் அப்பியசிக்க, பர்வதனே! என்னுடைய கைகால் முதலியனவாகிய அங்கங்களில் (ருஎ)

चित्तंसंस्थापयेन्मंत्री स्थानस्थानजयात्पुनः ॥
विशुद्धचित्तःसर्वस्मिन्रूपेसंस्थापयेन्मनः ॥ ५८ ॥

சித்தத்தினை மந்திரஞ்செய்வோன் செவ்வையாய் நிறுத்தவேண்டும். ஒவ்வொரு ஸ்தானத்திலும் ஜயமுண்டானபின் மறுபடியும் விசுத்த சித்தனாய் எல்லா ரூபத்திலும் மனத்தினைச் செவ்வையாய் நிறுத்துக. (ருஅ)

यावन्मनोलयंयाति देव्यांसंविदिपर्वत ॥
तावदिष्टमनुंमंत्री जपहोमैः समभ्यसेत् ॥ ५९ ॥

பார்வதனே! தேவியான சம்வித்தில் எது வரையில் மனது லயமாகின்றதோ, அது(தாரணை சித்திக்கும்) வரையில் மந்திரி இஷ்டமான மந்திரத்தினை ஜபஹோமங்களால் செவ்வையாய் அப்பியசிக்கக் கடவன். (ருசு)

मन्त्राभ्यासेनयोगेन ज्ञेयज्ञानायकल्पते ॥
नयोगेनविनामन्त्रो नमन्त्रेणविनाहिसः ॥ ६० ॥

மந்திராப்பியாசத்தினால் யோகத்தினால் ஞேயஞானத்தின் (அறியத்தக்க ஆத்மவஸ்துவினை அறிதற்) பொருட்டுச் சமர்த்தனாகின்றான். யோகமின்றி மந்திரமில்லை. மந்திரமின்றி யோகமில்லை. (சுO)

द्वयोरभ्यासयोगोहि ब्रह्मसंसिद्धिकारणम् ॥
तमःपरिवृतेगेहे घटोदीपेनदृश्यते ॥ ६१ ॥

இரண்டன் அப்பியாச யோகமே பிரஹ்ம நற்சித்திக்குக் காரணமாம். இருள் சூழ்ந்த வீட்டில் குடம் தீபத்தினால் காணப்படுகின்றது. (சுக)

एवंमायावृतोह्यात्मा मनुनागोचरीकृतः ॥
इतियोगविधिःकृत्स्नः सांगःप्रोक्तोमयाऽधुना ६२

இவ்வாறு மாயையினல் மூடப்பட்ட ஆத்மா மந்திரத்தினல் கோசரிக்கப்படுகின்றது. இவ்வாறு யோகவிதி முழுவதும் அங்கத்தோடு என்னல் இப்போது சொல்லப்பட்டது. (௬உ)

गुरूपदेशतोज्ञेयो नान्यथाशास्त्रकोटिभिः ॥ ६३ ॥

இது குருபதேசத்தினு லறியத்தக்கதாம். அவ்வாறின்றிச் சாஸ்திரங்கள் கோடிகளாலும் அறியத்தக்க தன்று. (௬௩)

इति श्रीदेवीभागवते महापुराणे सप्तमस्कंधे
देविगीतायां पञ्चमोऽध्यायः ॥

ஸ்ரீ தேவிகீதை
ஐந்தாமத்தியாயம்
முடிந்தது.

ॐ

# ஸ்ரீ தேவிகீதை.

## ॥ अथ षष्ठोऽध्यायः ॥

## ஆறாம் அத்தியாயம்.

### பிரஹ்மதத்துவ நிரூபணம்.

श्रीदेव्युवाच ॥

इत्यादियोगयुक्तात्मा ध्यायेन्मांब्रह्मरूपिणीम् ॥

भक्त्यानिर्व्याजयाराजन्नासनेसमुपस्थितः ॥ १ ॥

இராஜனே! இவைமுதலிய யோகத்தோடு கூடிய ஆத்மா ஆசனத்திலிருப்பவனாய் ஏகாந்த பக்தியினால் பிரஹ்ம வடிவினளாகிய என்னைத் தியானிக்கக் கடவன். (க)

आविःसन्निहितंगुहाचरंनाममहत्पदम् ॥
अत्रैतत्सर्वमर्पितमेजत्प्राणन्निमिषच्चयत् ॥ २ ॥

* பிரகாச முள்ளதும் அதிசமீபத்திருப்ப தும்(தனது ஸ்வரூபமாதலால்), குகை(புத்தி) யிற் சரிப்பதும் பிரசித்தமகத்(பெரும்)பதமு மான இதில் சலிக்கின்ற பக்ஷியாதிகளும், சுவா சிக்கின்ற மனுஷ்யாதிகளும், இமைத்தலாதி கிரியை யுடையனவும் எதுவோ, இது முழுவ தும் அர்ப்பிக்கப்பட்டன வாம். (௨)

एतज्जानथसदसद्वरेण्यंपरंविज्ञानाद्यद्वरिष्ठंप्रजानाम्
यदर्चिमद्यदणुभ्योऽणुचयस्मिँल्लोकानिहितालोकिनश्च

தேவர்களே! இதனை சத்தசத்து(மாயா ஜகங்)கட்குச் சிரேஷ்டமானதும், பிரஜைகளின் விஞ்ஞானத்திற்கு அப்பாற்பட்டது மான இதனை அறியுங்கள். எது எல்லாவற்றையும்(சூரி

---

* இவ்விரண்டாவது முதல் பதினைன்காவது சுலோக முடிவுவரையில் உள்ள முண்டக சுருதிவாக்கியங்களின் விரிவான அர்த்தங்களை டிை உபநிஷத்தின் ஸ்ரீ சங்கர பாஷியத்தில் காண்க.

யாதிகளையும்) விளக்கும் பிரகாசமுடையதோ, எது அணுக்களினும் அணுவோ, எதன்கண் லோகங்களும் லோகவாசிகளும் நிலைத்துள்ளனவோ, (௩)

तदेतदक्षरंब्रह्मसप्राणस्तदुवाङ्मनः ॥
तदेतत्सत्यममृतं तद्वेद्धव्यंसौम्यविद्धि ॥ ४ ॥

அத்தன்மைய இது அக்ஷரமாகிய (நாசமின்றிய) பிரஹ்மமாம். அது பிராணன். அதுவே வாக்கு மனது. அவ்விது சத்தியமாம், அமிருதமாம். ஸௌமியனே! அது (மனதாகிய பாணத்தினால்) வேதிக்கத்தக்க லக்ஷியமாமென்று அறி. (ச)

धनुर्गृहीत्वौपनिषधंमहास्त्रं
शरंह्युपासानिशितंसंधयीत ॥
आयम्यतद्भागवतेनचेतसा
लक्ष्यंतदेवाक्षरंसौम्यविद्धि ॥ ५ ॥

உபநிஷத்து வடிவங்களால் பிரதிபாதிக்கப்படும் மகாஸ்திரமான தனுசைக்கிரகித்து உபாசனையால் தீட்டப்பட்ட கூரியபாணத்தினைப்

தொடுப்பாயாக. சௌமியனே! இந்திரியங்களை அடக்கி அத்தன்மையடைந்த (அத்தியான முள்ள) சித்தத்தினால் அதே அக்ஷரமான இலக்ஷியத்தினை வேதிப்பாயாக. (௫)

प्रणवोधनुः शरोह्यात्मा ब्रह्मतल्लक्ष्यमुच्यते ॥
अप्रमत्तेनवेद्धव्यं शरवत्तन्मयोभवेत् ॥ ६ ॥

பிரணவம் தனுசாம், ஆத்மா (அந்தக்கரணம்) பாணமாம். பிரஹ்மம் (அப்பாணத்தினால் வேதிக்கத்தக்க) இலக்ஷியமெனப்படுகின்றது. அப்பிரமத்தனால் (சோர்வின்றி தியானிப்பவனால்) வேதிக்கத்தக்கதாம். அப்படி வேதிப்பவன் பாணத்தினைப்போல அந்த லக்ஷியமான பிரஹ்மமய மாவன். (௬)

यस्मिन्द्यौश्चपृथिवीचांतरिक्ष
मोतंमनःसहप्राणैश्चसर्वैः ॥
तमेवैकंजानथात्मानमन्या
वाचोविमुञ्चथामृतस्यैषसेतुः ॥ ७ ॥

எதன்கண் விண்ணும் மண்ணும் ஆகாயமும் (அந்தரிக்ஷமும்) எல்லாப் பிராணன்களோடு

மனதாம் கோத்திருக்கின்றனரோ, அந்த ஒரே ஆத்மாவினை யறியுங்கள். மற்றை வித்தை வடிவ வாக்குகளை விடுக. இந்த ஞானம் அமிருதத்திற்கு (சம்ஸார சாகரத்தினைக் கடந்ததாகிய முக்திக்கு) அணையாம். (எ)

अराइवरथनाभौ संहतायत्रनाड्यः ॥
सएषोंतश्चरते बहुधाजायमानः ॥ ८ ॥

இரதசக்கரத்தின் நாபியில்(நடுவில்) ஆரக்கால்கள் கூடியிருப்பதுபோல எதன் கண் நாடிகளெல்லாம் கூடியிருக்கின்றனவோ, அத்தன்மைய அந்தக்கரணவிருத்தி சாக்ஷிவடிவ இவ்வாத்மா விருத்திகளால் வெகுவிதமாவதாய் உள்ளத்தில் சரிக்கின்றது. (அ)

ओमित्येवंध्यायतात्मानम् स्वस्तिवःपारायतमसः परस्तात् ॥ दिव्येब्रह्मपुरेव्योम्निआत्मासंप्रतिष्ठितः ९

ஓமென்றிவ்வாறு ஆத்மாவினைத் தியானியுங்கள். சம்சாரத்தினைக் கடத்தற்கு உங்களுக்கு சுபமுண்டாகுக; அவித்தையாகிய தமசுக்கு அப்பாற்பட்ட பிரஹ்மரூபத்தைச் சார்

தற்குச் சுபமுண்டாக திவ்வியமான பிரஹ்மபுர மாகிய ஆகாயத்தில் ஆத்மா செவ்வையாய் நிலைத்துள்ளது. (கூ)

मनोमयःप्राणशरीरनेता
प्रतिष्ठितोऽन्नेहृदयंसन्निधाय ॥
तद्विज्ञानेनपरिपश्यंतिधीरा
आनन्दरूपममृतंयद्विभाति ॥ १० ॥

மனோமயமும் (அந்தக்காண தாதாத்மிய முடையதும்) பிராண சரீரங்களை நடத்துவதுமாய் நிலைத்துள்ளதாம். அந்தபரிணம பிண்டமான இருதயத்தில் புத்தியினைச் செவ்வையாய் நிறுத்தி எது ஆநந்தரூபமும் அமிருதமுமாய் விளங்குகின்றதோ அதனைத் தீரர்கள் அதன் விஞ்ஞானத்தினாற் காண்கின்றனர். (கO)

भिद्यतेहृदयग्रंथिश्छिद्यंतेसर्वसंशयाः ॥
क्षीयन्तेचाऽस्यकर्माणि तस्मिन्दृष्टेपरावरे ॥ ११ ॥

அந்தப் பராவரத்தினை (பிரஹ்மாத்மாவினை)க் கண்ட (அறிந்த) போது இதயக்கிரந்தி (சித்ரூப ஆத்மாவுக்கும் அகங்காரத்திற்கு முள்ள தா

தாத்மியத் தன்மை) அறுகின்றது. சர்வ சம்சயங்களும் (எல்லாம் மித்தை யென்னும் நிச்சயத்தால்) சேதிக்கப்படுகின்றன. இவனுடைய (பிறப்பிற் கேதுவான) கர்மங்கள் நசிக்கின்றன. (கக)

हिरण्मयेपरेकोशे विरजंब्रह्मनिष्कलम् ॥
तच्छुभ्रंज्योतिषांज्योतिस्तद्यदात्मविदोविदुः १२

எதனை ஆத்மாவினை யுணர்ந்தவர்கள் அறிவரோ அது பொன்மயமான (பிரகாசவடிவ) மேலான (ஆநந்தமய) கோசத்தில் நிலைத்துளது. இரஜஸ (அழுக்கு) இல்லாததும் நிஷ்கலமும் (மாயாதிகலைக ளின்றியதும்) சொச்சமுமான பிரஹ்மமாம். அது ஜோதிகட்கும் ஜோதியாம் (சூரியாதி பிரகாசங்களையும் விளக்குவதாம்). (கஉ)

नतत्रसूर्योभातिनचन्द्रतारकम्
नेमाविद्युतोभान्तिकुतोऽयमग्निः ॥
तमेवभान्तमनुभातिसर्वम्
तस्यभासासर्वमिदंविभाति ॥ १३ ॥

அங்கு (ஆத்மாவில்) சூரியன் பிரகாசிக்கிறதில்லை. சந்திர நக்ஷத்திரங்களும் பிரகாசிக்கிறதில்லை. இம் மின்னல்களும் பிரகாசிக்கிறதில்லை என்றால் இவ்வக்கினி எங்கிருந்து பிரகாசிக்கும்? பிரகாசிக்கின்ற அதனையே அநுசரித்து இவ்வெல்லாம் விளக்குகின்றன. அதன் பிரகாசத்தினால் இவ்வெல்லாம் பிரகாசிக்கின்றது. (கந)

ब्रह्मैवेदममृतंपुरस्ताद्ब्रह्मपश्चाद्ब्रह्मदक्षिणतश्चोत्तरेण॥
अधश्चोर्ध्वंचप्रसृतं ब्रह्मैवेदंविश्वंवरिष्ठम् ॥ १४ ॥

இது அமிருதமாகிய பிரஹ்மமே முன்னும் பிரஹ்மம், பின்னும் பிரஹ்மம், வலமாகவும் பிரஹ்மம், இடமாகவும் பிரஹ்மம், கீழும் பிரஹ்மம், மேலும் பிரஹ்மம், விரிந்துளது. இந்த விசுவம் மேலான பிரஹ்மமே. (கச)

एतादृगनुभवोयस्य सकृतार्थोनरोत्तमः ॥
ब्रह्मभूतःप्रसन्नात्मा नशोचतिनकांक्षति ॥ १५ ॥

இத்தன்மைய அநுபவம் எவனுக்கிருக்கிறதோ அந்த நரோத்தமன், கிருதார்த்தனாகின்

ரூன், பிரஹ்ம வடிவினனைப் பிரசன்ன மனத் தனைப் சோகிக்கிறது மில்லை. எதனையும் விரும்புகிறது மில்லை. (கரு)

द्वितीयाद्वैभयंराजंस्तदभावाद्बिभेतिन ॥
नततद्वियोगोमेप्यस्ति मद्वियोगोऽपितस्यन ॥१६॥

அரசனே! இரண்டாவதனால் பயமுண்டாகின்றது. அது (இரண்டாவது) னின்மையால் (ஞானி) பயப்படுகிறதில்லை. அவ்வத்துவயத்தின் நீக்கமும் எனக்கில்லை. எனது வியோகமும் அதற்கில்லை. (கசு)

अहमेवससोऽहंवै निश्चितंविद्धिपर्वत ॥
मद्दर्शनंतुतत्रस्याद्यत्रज्ञानीस्थितोमम ॥१७॥

பர்வதனே: யானே அந்த ஞானி, அந்த ஞானியே யான் என்று நிச்சயிக்கப்பட்டதாக அறி. எங்கு என்னுடைய ஞானி நிலைத்துளனோ அங்கு என் தரிசனமாம். (கஎ)

नाऽहंतीर्थेनकैलासे वैकुंठेवानकर्हिचित् ॥
वसामिकिंतुमज्ज्ञानी हृदयांभोजमध्यमे ॥१८॥

யான் தீர்த்தத்திலிலன், கைலாசத்திலாவது வைகுண்டத்திலாவது இலன், ஓரிடத்துமிலன், ஆனால் எனது ஞானியின் இதயதாமரை நடுவில் வசிக்கின்றேன். (கஅ)

मत्पूजाकोटिफलदं सकृन्मज्ज्ञानिनोऽर्चनम् ॥
कुलंपवित्रंतस्याऽस्ति जननीकृतकृत्यका ॥ १९ ॥

विश्वंभरापुण्यवती चिल्लयोयस्यचेतसः ॥
ब्रह्मज्ञानन्तुयत्पृष्टं त्वयापर्वतसत्तम ॥ २० ॥

ஒருமுறை எனது ஞானியினை அர்ச்சித்தலானது எனது பூஜை கோடியின் பலத்தைத் தருவதாம். எவனுடைய சித்தம் சித்தில் இலயமாயிற்றோ. அவனுடையதாய் செய்யவேண்டியவற்றைச் செய்தவளாவள், அவன் குலம் பவித்திரமாம். பூமியும் புண்ணியமுடையதாம். பர்வதோத்தமனே! எந்தப் பிரஹ்மஞானம் உன்னாற் கேட்கப்பட்டதோ, (கக-உ0)

कथितंतन्मयासर्वं नाऽतोवक्तव्यमस्तिहि ॥
इदंज्येष्ठायपुत्राय भक्तियुक्तायशीलिने ॥ २१ ॥

அது முழுவதும் என்றுற் சொல்லப்பட்டது. இனிச் சொல்லவேண்டியதே இல்லை. இது பக்தியோடு கூடியவனும் சீலமுடையவனும் மூத்தவனுமான புத்திரனுக்கும், (உக)

शिष्यायचयथोक्ताय वक्तव्यंनाऽन्यथाक्वचित् ॥
यस्यदेवेपराभक्तिर्यथादेवेतथागुरौ ॥ २२ ॥

சாஸ்திரத்திற் சொல்லிய தன்மையுடைய சிஷ்யனுக்கும் சொல்லத்தக்கதாம். வேறு விதமாக ஓரிடத்தும் சொல்லத்தக்கதன்று எவனுக்குத் தேவனிடத்தில் மேலான பக்தி யிருக்கின்றதோ, தேவனிடத்தில் எப்படியோ அப்படியே குருவினிடத்திலு மிருக்கின்றதோ, (உஉ)

तस्यैतेकथिताह्यर्थाः प्रकाशंतेमहात्मनः ॥
येनोपदिष्टाविद्येयं सएवपरमेश्वरः ॥ २३ ॥

அந்த மகாத்மாவுக்குச் சொல்லப்பட்ட இவ் வார்த்தைகள் பிரகாசிக்கின்றன. எவனால் இந்த பிரஹ்மவித்தை யுபதேசிக்கப் பட்டதோ அவனே பரமேசுவரன். (உங)

यस्यायंसुकृतंकर्तुमसमर्थस्ततोऽनृणी ॥
पित्रोरप्यधिकःप्रोक्तो ब्रह्मजन्मप्रदायकः ॥ २४ ॥

பிரஹ்மவித்தை யளித்த எவனுக்கு இவன் பிரதி யுபகாரஞ் செய்யச் சமர்த்தனல்லன் அதனால் ருணமு(கடனு)ள்ளவனுவன். சரீரத்தினைப் பயந்த பெற்றோரைவிட பிரஹ்ம ஜன்மத்தினை யருளிய குரு அதிகமாவர். (உச)

पितृजातंजन्मनष्टं नेत्थंजातंकदाचन ॥
तस्मैनद्रुह्येदित्यादि निगमोऽप्यवदन्नग ॥ २५ ॥

பிதாவினுலுண்டாகிய ஜன்மம் நஷ்டமாம். இவ்வாறு குருவினு லுண்டாகிய பிரஹ்மரூப ஜன்மம் ஒருபோதும் நஷ்டமாகாது. பர்வதனே! அக்குரவனுக்குத் துரோகஞ் செய்யலாகா தென்றல் முதலியனவாக வேதமும் கூறியுளது. (உரு)

तस्माच्छास्त्रस्यसिद्धांतो ब्रह्मदातागुरुःपरः ॥
शिवेरुष्टेगुरुस्त्राता गुरौरुष्टेनशङ्करः ॥ २६ ॥

ஆதலால் பிரஹ்ம தாதாவான குரு மேலானவர் என்பது சாஸ்திரத்தின் சித்தாந்தமாம்.

சிவன் கோபிக்கின் குரு இரக்ஷிப்பார். குரு கோபிக்கின் சங்கரன் இரக்ஷியார். (உசா)

तस्मात्सर्वप्रयत्नेन श्रीगुरुंतोषयेन्नग ॥
कायेनमनसावाचा सर्वदातत्परोभवेत् ॥ २७ ॥

ஆதலால் பர்வதஜனே! முழு முயற்சியால் ஸ்ரீ குருவினைச் சந்தோஷிப்பிக்க வேண்டும். காயத்தினலும் மனதினலும் வாக்கினலும் எப்போதும் தற்பரனுதக. (உஎ)

अन्यथातुकृतघ्नःस्यात्कृतघ्ननास्तिनिष्कृतिः ॥
इंद्रेणाऽथर्वणायोक्ता शिरश्चेद्प्रतिज्ञया ॥ २८ ॥

அவ்வாறில்லையாயின், செய்ந்நன்றி கொன்றவனுவன். செய்ந்நன்றி கொன்றவனிடத்து * முக்தியில்லை. † இந்திரனுல் தத்தியஞ் என்னும் ஆதர்வணரிஷிக்கு, நீர் பிரஹ்மவித்தை

---

* செய்க்நன்றி மறத்தலுக்குப் பிராயச்சித்தமில்லை.

† இக்கதை பிருகதாரணியக முண்டக சுருதியிற் சொல்லப்பட்டுளது.

யைப் பிறநுக்குச் சொன்னால் சிரச்சேதம் செய்வேன் என்னும் பிரதிஞ்ஞையோடு சொல்லப்பட்டது. (உஅ)

अश्विभ्यांकथनेतस्य शिरश्छिन्नंचवज्रिणा ॥
अश्वीयन्तच्छिरोनष्टं दृष्ट्वावैद्यौसुरोत्तमौ ॥ २९ ॥

அதனைக் கேட்டு வித்யா லோபத்தால் முந்திய சிரசைக் கொய்து வேறு குதிரைத் தலையினை வைத்து கேட்கப்புகுந்த அசுவினி குமாரர்கட்கு உபதேசிக்க அந்த ரிஷியின் சிரசு இந்திரனாற் சேதிக்கப்பட்டது. அக்குதிரைத் தலை நஷ்டமானதைக் கண்டு தேவசிரேஷ்டர்களும் தேவ வைத்தியர்களுமான அசுவினி குமாரரிருவரும், (உகூ)

पुनःसंयोजितंस्वीयं ताभ्यांमुनिशिरस्तदा ॥
इतिसंकटसंपाद्या ब्रह्मविद्यानगाधिप ॥
लब्धायेनसधन्यःस्यात्कृतकृत्यश्चभूधर ॥ ३० ॥

மறுபடியும் முனீசுவரரின் சொந்த சிரசினைப் பொருத்திக் கேட்டனர். பர்வதராஜனே! இவ்வாறு சங்கடத்தாற் சம்பாதிக்கத் தக்கதாம்

பிரஹ்மவித்தை. பூதரனே! எதனையில்லின்; அதனையடைந்த அவன் தன்னியனும் கிருதகிருத்தியனு மாகின்றான். (௩௦)

इति श्रीदेवीभागवते महापुराणे सप्तमस्कंधे

देविगीतायां षष्टोऽध्यायः ॥

ஸ்ரீ தேவிகீதை

ஆறுமத்தியாயம்

முடிந்தது.

ௐ

# ஸ்ரீ தேவிகீதை.

॥ अथ सप्तमोऽध्यायः ॥

## ஏழாம் அத்தியாயம்.

### பக்திஸ்வரூபமகிமாவர்ணனம்.

हिमालय उवाच ॥

स्वीयांभक्तिंवदस्वांब येनज्ञानंसुखेनहि ॥

जायेतमनुजस्याऽस्य मध्यमस्याऽविरागिणः ॥ १ ॥

இமாலயன் கேட்கலாயினன்:— அம்மையே! விராகமில்லாத மத்திமனான இம்மனிதனுக்கு எதனாற் சுகமாக ஞானமுண்டாகுமோ, அத்தன்மையை உனது பக்தியினைச் சொல்லியருளுக. (க)

देव्युवाच ॥

मार्गास्त्रयो मे विख्याता मोक्षप्राप्तौ नगाधिप ॥
कर्मयोगो ज्ञानयोगो भक्तियोगश्च सत्तम ॥ २ ॥

தேவி சொல்லலாயினள் :— பர்வதராஜனே! எனது மோக்ஷப் பிராப்தியில் மூன்று மார்க்கங்கள் சொல்லப்பட்டுள்ளன. சத்ஸிரேஷ்டனே! அவை கர்மயோகமும், ஞானயோகமும், பக்தியோகமுமாம். (உ)

त्रयाणामप्ययं योग्यः कर्तुं शक्योऽस्ति सर्वथा ॥
सुलभत्वान्मानसत्वात्कायचित्ताद्यपीडनात् ॥ ३ ॥

மூன்றனுள்ளும் இது (பக்தியோகம்) சுலபமாயிருத்தலாலும், மானதமா (திரவிய காயப் பிரயாஸாதிக ளின்றி கேவல மனோவிருத்தியால் சம்பாதிக்கக் கூடியதா) யிருத்தலாலும், காய சித்தாதி வருத்த மின்றிய தன்மையாலும் தகுதியுள்ளதும் எல்லாவிதத்தாலும் எல்லோராலும் செய்யக்கூடியதுமாம். (ங)

गुणभेदान्मनुष्याणां सा भक्तिस्त्रिविधा मता ॥
परपीडां समुद्दिश्य दम्भं कृत्वा पुरःसरम् ॥ ४ ॥

மனிதர்களின் சத்துவாதி குணபேதத்தினால் அந்தப் பக்தி மூன்றுவிதமாய்க் கருதப்படுகின்றது. எவன் பிறரை இம்ஸித்தலை யுத்தேசித்தும் இடம்பத்தினை முன்னிலையாக்கியும், (ச)

मात्सर्यक्रोधयुक्तोयस्तस्यभक्तिस्तुतामसी ॥
परपीडादिसहितः स्वकल्याणार्थमेवच ॥ ५ ॥

மாத்ஸர்யக் குரோதங்களோடு கூடியவனாய்ச் செய்கின்றானோ, அவனது பக்தி தாமஸமாம். எவன் பரபீடை முதலியன வில்லாதவனாய்த் தனது கல்யாணத்தின் பொருட்டே (ரு)

नित्यंसकामोहृदयेयशोऽर्थीभोगलोलुपः ॥
तत्तत्फलसमावाप्त्यै मामुपास्तेऽतिभक्तितः ॥ ६ ॥

நித்தியம் ஸகாமனும் இருதயத்தில் கீர்த்தியை விரும்பியவனும் போகப் பற்றுள்ளவனுமாய் அவ்வப்பல சமாப்தியின் பொருட்டு மிகுந்த பக்தியோடு என்னையுபாசிக்கின்றானோ, (கூ)

भेदबुद्ध्यातुमांस्वस्मा दन्यांजानातिपामरः ॥
तस्यभक्तिःसमाख्याता नगाधिपतुराजसी ॥ ७ ॥

—பாமரனாய்ப் பேதபுத்தியினால் என்னைத் தன்னின் வேறாக உபாஸிக்கின்றானோ, அவனது பக்தி மலையரசிமகளே! இராஜஸமென்று சொல்லப்பட்டதாம். (அ)

परमेशार्पणंकर्म पापसंक्षालनायच ॥
वेदोक्तत्वादवश्यंतत्कर्तव्यंतुमयाऽनिशम् ॥ ८ ॥
इतिनिश्चितबुद्धिस्तु भेदबुद्धिमुपाश्रितः ॥
करोतिप्रीतयेकर्म भक्तिःसानगसात्विकी ॥ ९ ॥

பரமேசுவரார்ப்பணமான கர்மம் பாபத்தினைக் கழுவுதற் பொருட்டு வேதத்திற் சொல்லப்பட்டிருத்தலால், அது என்னால் அவசியம் எப்போதும் செய்யவேண்டியதாமென்று நிச்சயிக்கப்பட்ட புத்தியுடைய எவன் பேதபுத்தியினை ஆசிரயித்தவனாய் எனது ப்ரீதியின் பொருட்டுக் கர்மத்தினைச் செய்கின்றானோ, அது பர்வதனே! சாத்விகீபக்தியாம். (கூ)

परभक्तेःप्रापिकेयं भेदबुद्ध्यवलंबनात् ॥
पूर्वप्रोक्तेह्युभेभक्ती नपरप्रापिकेमते ॥ १० ॥

இது பேதபுத்தியினை அவலம்பித்திருத்தலால் பரபக்தியினை அடைவிப்பதாம். முன் கூறப்பட்ட இரண்டு (தாமஸராஜஸ) பக்திகளும் பரபக்தியினை யடைவிப்பனவாக மதிக்கப்படா. (கு0)

अधुनापरभाक्तिंतु प्रोच्यमानांनिबोधमे ॥
मद्गुणश्रवणंनित्यं ममनामानुकीर्तनम् ॥ ११ ॥

இப்போது சொல்லப்படும் எனது பரபக்தியினைக் கேள். நித்தியம் எனது குணத்தைக் கேட்டல் எனது நாமத்தினைக் கீர்த்தித்தல். ()

कल्याणगुणरत्नाना माकरायांमयिस्थिरम् ॥
चेतसोवर्तनञ्चैव तैलधारासमंसदा ॥ १२ ॥

கல்யாண குணரத்தினங்கட்குச் சுரங்கமான என்னிடத்தில் எப்போதும் சித்தம் (விஷயங்களிற் செல்லாது) தைலதாரைபோல் ஸ்திரமாயிருத்தல். (கஉ)

हेतुस्तुतत्रकोवापि नकदाचिद्भवेदपि ॥
सामीप्यसार्ष्टिसायुज्य सालोक्यानानचैवणा १३

அதில் எவ்விதமான எதுவும் (பலவிருப்ப மும்) ஒரு போதும் உண்டாகலாகாது. சாமீப்பிய சார்ஷ்டி(சாரூப்பிய)சாயுஜ்ய சாலோகங்களில் இச்சையு முண்டாகலாகாது. (கங)

मत्सेवातोऽधिकंकिंचिन्नैवजानातिकर्हिचित् ॥
सेव्यसेवकताभावात्तत्रमोक्षंनवांछति ॥ १४ ॥

எனது சேவையினை விட அதிகமாக எதனையும் எப்போதுமறியான். சேவிய சேவகத் தன்மையில்லாமற் போதலால் அதில் (பரபக்தியில்) மோக்ஷத்தினையும் விரும்பான். (கச)

परानुरक्त्यामामेव चिंतयेद्योह्यतन्द्रितः ॥
स्वाभेदेनैवमांनित्यं जानातिनविभेदतः ॥ १५ ॥

சோர்வின்றியவனுப் எவன் மேலான அன்போடு என்னையே சிந்திக்கின்றானோ, தன்னின் அபேதமாகவே நித்தியம் என்னை அறிகின்றானோ பேதமாக அறிகிறதில்லையோ, (கரு)

मद्रूपत्वेनजीवानां चिंतनंकुरुतेतुयः ॥
यथास्वस्यात्मनिप्रीतिस्तथैवचपरात्मनि ॥ १६ ॥

எவன் எனது வடிவத்தன்மையாக ஜீவர்களின் சிந்தனத்தினைச் செய்கின்றானோ, தனது ஆத்மாவில் எப்படிப் பிரீதியோ அப்படியே பிற ஆத்மாவிலும் செய்கின்றானோ, (கசு)

चैतन्यस्यसमानत्वान्नभेधंकुरुतेतुयः ॥
सर्वत्रवर्तमानांमां सर्वरूपांचसर्वदा ॥ १७ ॥

சைதன்னியத்தின் சமானத்தன்மையால் எவன் பேதத்தினைச் செய்கிறதில்லையோ, எங்குமிருப்பவளும் எல்லாவடிவினளுமாகிய என்னை எப்போதும் (கஎ)

नमतेयजतेचैवाप्याचांडालांतमीश्वर ॥
नकुत्रापिद्रोहबुद्धिं कुरुतेभेदवर्जनात् ॥ १८ ॥

பர்வதேசுவரனே! சண்டாளன் பரியந்தமாக வணங்குகின்றானோ, பூஜிக்கின்றானோ, * பேதபுத்தி யின்மையால் எந்த இடத்திலும் பேதபுத்தியினைச் செய்கிறதில்லையோ, (கஅ)

* எங்கும் சைதன்யவடிவ ஒரோபசுவதி யிருக்கின்றாள். இரண்டாவதில்லை யென்று பேதபுத்தி நீங்கிய தன்மையால்.

मत्स्थानदर्शनश्रद्धा मद्भक्तदर्शनेतथा ॥
मच्छास्त्रश्रवणेश्रद्धा मन्त्रतन्त्रादिषुप्रभो ॥ १९ ॥

(சொல்லப்படும்) எனது ஸ்தானங்களின் தரிசனத்தில் சிரத்தையும் அப்படியே எனது பக்தர்களின் தரிசனத்திலும் எனது * சாஸ்திர சிரவணத்திலும் மந்திர தந்திராதிகளிலும் சிரத்தையு மிருக்கின்றதோ, (கக)

मयिप्रेमाकुलमती रोमाञ्चिततनुःसदा ॥
प्रेमाश्रुजलपूर्णाक्षः कंठगद्गदनिस्वनः ॥ २० ॥

என்னிடத்திற் பிரேமைமிக்க மதியினனும், மயிர்க்குச்சுண்டாகிய சரீரத்தினனும், பிரேமையினால் ஆநந்தக்கண்ணீர் நிறைந்த நேத்திரமுடையவனும், கண்டத்தில் தழுதழுத்த ஸ்வரமுடையவனும், (உ0)

अनन्येनैवभावेन पूजयेद्योनगाधिप ॥
मामीश्वरींजगद्योनिं सर्वकारणकारणम् ॥ २१ ॥

---

* சத்திதரிசனம் தேவிபாகவதம், வேதாந்த மென்பன.

மலையதிபனே! அநந்நியமான பாவமாக எவன் சர்வகாரண காரணமும், ஜகத்யோனியும் ஈசுவரியுமான என்னைப் பூஜிப்பானோ, ()

व्रतानिममदिव्यानि नित्यनैमित्तिकान्यधि ॥

नित्यंयःकुरुतेभक्त्या वित्तशाठ्यविवर्जितः ॥२२॥

எவன் திரவிய விச்சை யில்லாதவனாய்ப் பக்தியோடு நித்தியமும் (சொல்லப்படும்) எனது திவ்யமான விரதங்களையும் நித்திய நைமித்திகங்களையும் செய்கின்றானோ, (உஉ)

मदुत्सवदिदृक्षाच मदुत्सवकृतिस्तथा ॥

जायतेयस्यानियतं स्वभावादेवभूधर ॥ २३ ॥

பர்வதனே! (சொல்லப்படும்) எனது உற்சவத்தினைக்காணும் விருப்பமும், அவ்வாறே எனது உற்சவத்தினைச் செய்தலும் எவனுக்கு இயல்பாகவே நியதமாக உண்டாகின்றதோ, ()

उच्चैर्गायंश्चनामानि ममैवखलुनृत्यति ॥

अहङ्कारादिरहितो देहतादात्म्यवर्जितः ॥ २४ ॥

எனது நாமங்களையே உயர்ந்த குரலோடு பாடிக்கொண்டு அகங்காராதிக ளில்லாதவனை யத் தேகதாதாத்மிய மின்றியவனய் ஆடுகின்றனே, (உச)

प्रारब्धेनयथायच्च क्रियतेतत्तथाभवेत् ॥
नमेचिंतास्तितत्रापि देहसंरक्षणादिषु ॥ २५ ॥

பிராரப்தத்தினுல் எது எப்படிச் செய்யப் படுகின்றதோ அது அப்படியாகும் எனக்குச் சிந்தை யில்லை. அதிலும் தேகசம்ரக்ஷணுதி களி லில்லை. (உரு)

इतिभाक्तिस्तुयाप्रोक्ता परभक्तिस्तुमास्मृता ॥
यस्यांदेव्यतिरिक्तंतु नकिंचिदपिभाव्यते ॥ २६ ॥

என்றிருப்பானே இத்தன்மைய எப்பக்தி சொல்லப்பட்டதோ அது பரபக்தி யென்று கருதப்படுகின்றது. அப்பக்தியில் தேவியினும் வேருன தெதுவும் பாவிக்கப் படுகிறதில்லை. ()

इत्थंजातापराभक्तिर्यस्यभूधरतत्त्वतः ॥
तदैवतस्यचिन्मात्रे मद्रूपेविलयोभवेत् ॥ २७ ॥

பூதரனே! இவ்வாறு பராபக்தி எவனுக்கு உண்மையாக உண்டாயிருக்கிறதோ, அதுவே அவனுக்குச் சின்மாத்திரயாகிய எனது ரூபத்தில் விலயமாதலாம். (உஎ)

भक्तेस्तुयापराकाष्ठा सैवज्ञानंप्रकीर्तितम् ॥
वैराग्यस्यचसीमा साज्ञानेतदुभयंयतः ॥ २८ ॥

பக்தியின் பராகாஷ்டை (மேலான வரம்பு) எதுவோ அது ஞான மென்று சொல்லப்படும். அது (பக்தி) வைராக்கியத்தின் எல்லையாம். ஞானத்திலோ அவ்விரண்டும் காரணமாம். ()

भक्तौकृतायांयस्यापि प्रारब्दवशतोनग ॥
नजायतेममज्ञानं मणिद्वीपंसगच्छति ॥ २९ ॥

பர்வதனே! பக்தி செய்தும் எவனுக்குப் பிராரப்த வசத்தினால் எனது ஞானம் பிறக்கவில்லையோ அவன்(எனது) * மணித்வீபத்தினை அடைகின்றான். (உகூ)

---

* மணித்வீப மென்பது தேவிபாகவதத்தின் ௩-வது ஸ்கந்தத்தும் கஉ-வது ஸ்கந்தத்தும் கூறப்பட்டுளது.

तत्रगत्वाऽखिलान्भोगा ननिच्छन्नपिचर्च्छति ॥
तदन्तेममचिद्रूप ज्ञानंसम्यग्भवेन्नग ॥ ३० ॥

அங்கு சென்று இச்சியாதிருந்தும் எல்லாப் போகங்களையும் பெறுகின்றான். அதன் முடிவில் பர்வதனே! எனது சித்ரூபத்தின் ஞானம் செவ்வையா யுண்டாகின்றது. (௩௦)

तेनमुक्तःसदैवस्याज्ज्ञानान्मुक्तिर्नचान्यथा ॥
इहैवयस्यज्ञानंस्याद्धृद्गतप्रत्यगात्मनः ॥ ३१ ॥

அதனால்(ஞானத்தால்) என்றுமே முக்தனாகின்றான். ஞானத்தினாலேயே முக்தியாம்; வேறு விதத்தினாலில்லை. இம்மையிலேயே எவனுக்கு இருதயத்தி லிருப்பதான பிரத்தியகாத்மாவின் ஞானமுண்டாகின்றதோ, (௩௧)

ममसंवित्परतनोस्तस्यप्राणाव्रजंतिन ॥
ब्रह्मैवसंस्तदाप्नोति ब्रह्मैवब्रह्मवेदयः ॥ ३२ ॥

எனது சம்வித்தாகிய பரமான சரீரமுடைய அவனது * பிராணன்கள் வெளிப்படா, பிரஹ்மமாகவே யிருந்து அதனை (பிரஹ்மத்தினை) யடைகின்(பிரஹ்மத்தோ டபேதமாகின்)றான்

எவன் பிரஹ்மத்தினை யறிகின்றானோ, அவன் பிரஹ்மமே யாகின்றான். (௩௨)

कंठचामीकरसममज्ञानात्तुतिरोहितम् ॥
ज्ञानादज्ञाननाशेन लब्धमेवहिलभ्यते ॥ ३३ ॥

கழுத்தணியினைப்போல அறியாததினால் மறைபட்ட(இழந்த)தாம். ஞானத்தினால் அஞ்ஞானம் (அறியாமை) நசித்தலால் முன்னமே பெறப்பட்டிருந்த அதுவே பெறப்படுகின்றது. (௩௩)

विदिताविदितादन्यन्नगोत्तमवपुर्मम ॥
यथादर्शेतथाऽऽत्मनियथाजलेतथापिपृलोके ३४

பர்வதோத்தமனே! எனது (சித்ரூப) சரீரம் அறியப்பட்ட (கடாதிகாரியத்)தினும் அறியப்படாத(மாயையாகிய காரணத்)தினும் வேறானதாம். எப்படிக் கண்ணாடியில் பிரதிபிம்பம் தோற்றுகிறதோ அதுபோல ஆத்மாவில் (இச்சரீரத்தில்) எனது வடிவ அநுபவமுண்டாகிறது. எப்படி ஜலத்தில் (முந்தியதினும் வேறாக) நிழலுண்டாகிறதோ அதுபோலப் பிதிர்லோகத்திலும் அநுபவமுண்டாகின்றது. (௩௪)

छायातपौयथास्वच्छौविविक्तौतद्वदेवहि ॥
ममलोकेभवेज्ज्ञानं द्वैतभावविवर्जितम् ॥ ३५ ॥

நிழலும் வெயிலும் எப்படி ஸ்வச்சமும் வேறு பட்டனவுமாகத் தோற்றுகின்றனவோ, அது போலவே (மணித்வீபமான) எனது லோகத்தில் த்வைதபாவமின்றிய ஞான (அத்தியந்தம் வேறுபட்ட அநுபவ) முண்டாம். (௩௫)

यस्तुवैराग्यवानेव ज्ञानहीनोम्रियेतचेत् ॥
ब्रह्मलोकेवसेन्नित्यं यावत्कल्पंततःपरम् ॥ ३६ ॥

எவன் ஞானமில்லாதவனாய் வைராக்கியமுடையவனாகவே யிருந்திறக்கின்றானோ, அவன் கல்பபரியந்தம் நித்தியமும் பிரஹ்மலோகத்தில் வசிப்பன். அதன் பின் (௩௬)

शुचीनांश्रीमतांगेहे भवेत्तस्यजनिःपुनः ॥
करोतिसाधनंपश्चात्ततोज्ञानंहिजायते ॥ ३७ ॥

சுசியுள்ள ஸ்ரீமந்தனது வீட்டில் அவனுக்கு மறுபடியும் ஜன்மமுண்டாகின்றது பிறகு (பூர்வ வாசனையால்) சாதனங்களைச் செய்கின்றான் அதன்பின் ஞானம் பிறக்கின்றது. (௩௭)

अनेकजन्मभीराजञ्ज्ञानंस्यान्नैकजन्मना ॥
ततःसर्वप्रयत्नेन ज्ञानार्थयत्नमाश्रयेत् ॥ ३८ ॥

அரசனே! ஞானம் ஒரு ஜன்மத்திஞலாகாது; அநேக ஜன்மங்களாலாம். அதனுல் எல்லா முயற்சியினுலும் ஞானத்தின் பொருட்டு எத்தனத்தை யாசிரயிக்கவேண்டும். (ந-அ)

नोचेन्महान्विनाशःस्याज्जन्मैतद्दुर्लभंपुनः ॥
तत्राऽपिप्रथमेवर्णे वेदेप्राप्तिश्चदुर्लभा ॥ ३९ ॥

அவ்வாறு எத்தனஞ் செய்யாவிடின் *பெருங் கேடுண்டாம். இப்பிறப்பு மறுபடியும் கிடைத்தலரிதாம். அதிலும் முதலாவதான (பிராஹ்மண) வர்ணத்திலும் வேதத்திலும் பிராப்தி யுண்டாவது துர்லபமாம். (ந-கூ)

शमादिषट्कसंपत्तिर्योगसिद्धिस्तथैवच ॥
तथोत्तमगुरुप्राप्तिः सर्वमेवाऽत्रदुर्लभम् ॥ ४० ॥

சமமுதலிய ஆறன் அடைவும், அவ்வாறே யோகசித்தியும், அவ்வாறே உத்தம குருப்

* இது சுருதி யபிப்பிராயம்.

பிராப்தியுமான எல்லாமுமே இங்கு துர்லப
மாம். (௪0)

तथेंद्रियाणांपटुता संस्कृतत्वंतनोस्तथा ॥
अनेकजन्मपुण्यैस्तु मोक्षेच्छाजायतेततः ॥ ४१ ॥

அவ்வாறே இந்திரியங்களின் தெளிவும், அவ்
வாறே சரீரத்தின் (வேதோக்த சம்ஸ்காரத்
தால்) சம்ஸ்கரிக்கப்பட்ட தன்மையும், அநேக
ஜன்ம புண்ணியங்களால் மோக்ஷேச்சையும்
பிறக்கின்றது. அதனால் (௪க)

साधनेसफलेऽप्येवं जायमानेऽपियोनरः ॥
ज्ञानार्थंनैवयतते तस्यजन्मानिरर्थकम् ॥ ४२ ॥

எந்த நரன் இவ்வாறு ஸபலமுள்ள சாதனங்
கள் உண்டாயிருந்தும் ஞானத்தின் பொருட்டு
முயற்சிக்கிறதில்லையோ, அவனது ஜன்மம் பய
னின்றியதாம். (௪௨)

तस्माद्राजन्यथाशक्त्या ज्ञानार्थंयत्नमाश्रयेत् ॥
पदेपदेऽश्वमेधस्य फलमाप्नोतिनिश्चितम् ॥ ४३ ॥

ஆதலால் ராஜனே! இயன்றமட்டும் ஞானத்தின் பொருட்டு எத்தினத்தை ஆசிரயிக்க வேண்டும். (சிரவணாதியிற் பிரவர்த்தித்தவன்) பதங்கடோறும் (க்ஷணத்துக்கு க்ஷணம்) அசுவமேதத்தின் பயனை அடைகின்றான்; இது நிச்சயிக்கப்பட்டதேயாம். (சங)

घृतमिवपयसिनिगूढं भूतेभूतेचवसतिविज्ञानम् ॥
सततंमंथयितव्यं मनसामन्थानभूतेन ॥ ४४ ॥

* பாலில் நெய்போல் பூதங்கடோறும் (சர்வதேகங்களிலும்) விஞ்ஞானம் (பிரஹ்மம்) மறைபட்டதாய் வசிக்கின்றது. ஆதலால் அதனை எப்போதும் கடைதல் வடிவினதாகிய மனதால் கடைய(விசாரிக்க)வேண்டும். (சச)

ज्ञानंलब्ध्वाकृतार्थःस्या दितिवेदांतडिंडिमः ॥
सर्वमुक्तंसमासेन किंभूयःश्रोतुमिच्छसि ॥ ४५ ॥

ஞானத்தினை யடைந்து கிருதார்த்த னாகின்றான் என்பது வேதாந்த டிண்டிமமாம் (மூ

* இது சுருதியாதிகளில் பிரசித்தமாக்கப்பட்டுள்ளது.

சாம்) யாவும் சுருக்கமாகச் சொல்லப்பட்டன. மறுபடியும் என்ன கேட்க விரும்புகின்றாய். ()

इति श्रीदेवीभागवते महापुराणे सप्तमस्कंधे
देविगीतायां सप्तमोऽध्यायः ॥

ஸ்ரீ தே வி கீ தை
ஏழாமத்தியாயம்
முடிந்தது.

ஓம்

# ஸ்ரீ தேவிகீதை.

## ॥ अथाष्टमोऽध्यायः ॥

## எட்டாம் அத்தியாயம்.

### தேவியின் ஸ்தான விரதோற்சவ வர்ணனம்.

हिमालयउवाच ॥

कतिस्थानानिदेवेशि द्रष्टव्यानिमहीतले ॥
मुख्यानिचपवित्राणि देवीप्रियतमानिच ॥ १ ॥

ஹிமாலயன் கேட்கலாயினன் :— தேவேசி! பிருதிவியில் உனக்கு மிகப்பிரியமுள்ளனவும் பவித்திரமும் முக்கியமும் காணத்தக்கனவுமான ஸ்தானங்கள் எத்தனையுள? (க)

व्रतान्यापितथायानि तुष्टिदान्युत्सवाअपि ॥
तत्सर्वंवदमेमातः कृतकृत्योयतोनरः ॥ २ ॥

அவ்வாறே எந்த விரதங்கள் சந்தோஷத்தைத் தரத்தக்கனவோ, அவைகளும் உற்சவங்களுமாகிய அவ்வெல்லாவற்றையும் அன்னையே எனக் கருள்வாயாக. ஏனெனின், அதனால் நரன் கிருத கிருத்தியனாவன். (உ)

श्रीदेव्युवाच ॥
सर्वदृश्यंममस्थानं सर्वकालाव्रतात्मकाः ॥
उत्सवाःसर्वकालेषु यतोऽहंसर्वरूपिणी ॥ ३ ॥

ஸ்ரீ தேவி சொல்லலாயினாள் :—எதனால் யான் சர்வரூபியா யிருக்கின்றேனோ அதனால் திருஷ்டியும் யாவும் எனது ஸ்தானமாம். எல்லாக் காலங்களும் விரதவடிவினவாம் உற்சவங்கள் எல்லாக்காலங்களிலுமாம். (ங)

तथापिभक्तवात्सल्यात्किंचित्किंचिदथोच्यते ॥
शृणुष्वाऽवहितोभूत्वा नगराजवचोमम ॥ ४ ॥

அவ்வாறாயினும் பக்தவாத்ஸல்யத்தினால். இனிச் சிறிது சிறிது சொல்லப்படுகின்றது. பர்வதராஜனே! சாவதான முடையவனாய் எனது வார்த்தையினைக் கேள். (ச)

कोलापुरंमहाथानं यत्रलक्ष्मीःसदास्थिता ॥
मातुःपुरंद्वितीयञ्च रेणुकाधिष्ठितंपरम् ॥ ५ ॥

(விந்தியத்தில் தக்ஷிணதேசத்தில்) கோலாபுர (கரவீர) மென்னும் மகாஸ்தான முளது. அதில் லக்ஷ்மி யெப்போதும் இருக்கின்றாள். (சஹ்யபர்வதத்தில்) மாதிருபுர மென்னும் மேலான க்ஷேத்திரம் ரேணுகையினால் அதிஷ்டிக்கப்பட்ட இரண்டாவதாம். (ரு)

तुलजापुरंतृतीयंस्यात्सप्तशृंगंतथैवच ॥
हिंगुलायामहास्थानं ज्वालामुख्यास्तथैवच ॥ ६ ॥

துலஜாபுர மென்பது மூன்றாவதாம். அவ்வாறே சப்தசிருங்கம் ஹிங்குலா தேவியின் மகாஸ்தானம் (அம்பாலா) உளது. (சு)

शाकंभर्याःपरंस्थानं भ्रामर्याःस्थानमुत्तमम् ॥
श्रीरक्तदंतिकास्थानं दुर्गास्थानंतथैवच ॥ ७ ॥

சாகம்பரியின் மேலான ஸ்தானமும், பிராமரியின் உத்தமமான ஸ்தானமும், ஸ்ரீ ரக்ததந்திரியின் ஸ்தானமும், அவ்வாறே துர்காஸ்தானமுமுள. (எ)

विंध्याचलनिवासिन्याः स्थानंसर्वोत्तमोत्तमम् ॥
अन्नपूर्णामहास्थानं कांचिपुरमनुत्तमम् ॥ ८ ॥

விந்தியாசல நிவாஸியின் சர்வோத்தமோத்தமமான ஸ்தானமும், அந்நபூர்ணையின் மகாஸ்தானமும் இணையில்லாத காஞ்சீபுரமும், (அ)

भीमादेव्याःपरंस्थानं विमलास्थानमेवच ॥
श्रीचंद्रलामहास्थानं कौशिकीस्थानमेवच ॥ ९ ॥

பீமாதேவியின் மேலான ஸ்தானமும், விமலையின் ஸ்தானமும், (கர்நாடகதேசத்தில்) ஸ்ரீசந்திரலா தேவியின் மகாஸ்தானமும், கௌசிகியின் ஸ்தானமும், (கூ)

नीलांबायाःपरंस्थानं नीलपर्वतमस्तके ॥
जांबूनदेश्वरीस्थानं तथाश्रीनगरंशुभम् ॥ १० ॥

நீலபர்வத சிகரத்தில் நீலாம்பையின் மேலான ஸ்தானமும், ஜாம்பூநதேசுவரீ ஸ்தானமும் அவ்வாறே சுபமான ஸ்ரீ நகரமும், (கo)

गुह्यकाल्यामहास्थानं नेपालेयत्प्रतिष्ठितम् ॥
मीनाक्ष्याःपरमंस्थानं यच्चप्रोक्तंचिदंबरे ॥ ११ ॥

நேபாளத்தில் பிரதிஷ்டிக்கப்பட்டுள்ள குஹ்யகாளியின் மகாஸ்தானமும், சிதம்பர (வெள்ளியம்பலமாகிய ஹாலாஸ்ய)த்திற் சொல்லப்பட்டுள்ள மீனாக்ஷியின் பரமஸ்தானமும், ()

वेदारण्यंमहास्थानं सुंदर्याःसमधिष्ठितम् ॥
एकांबरंमहास्थानं परशक्त्याप्रतिष्ठितम् ॥ १२ ॥

சுந்தரியினால் அதிஷ்டிக்கப்பட்ட வேதாரணிய மகாஸ்தானமும் பராசக்தி(புவனேசுவரி)யினால் பிரதிஷ்டிக்கப்பட்ட * ஏகாம்பர மகாஸ்தானமும், (கஉ)

---

* இது புவனேசுவர மென்னும் பெயரால் புருஷோத்தம க்ஷேத்திரத்தின் சமீபத்திலிருப்பதாம்.

महालसापरंस्थानं योगेश्वर्यास्थतैवच ॥
तथानीलसरस्वत्याः स्थानंचीनेषुविश्रुतम् ॥ १३ ॥

* மஹாலஸாதேவியின் மேலான ஸ்தான மும், அவ்வாறே யோகேசுவரியின் ஸ்தான மும், அவ்வாறே சீனதேசத்தில் கேட்கப்படும் நீல சரஸ்வதியின் ஸ்தானமும், (கங)

वैद्यनाथेतुबगला स्थानंसर्वोत्तमंमतम् ॥
श्रीमच्छ्रीभुवनेश्वर्या मणिद्वीपंममस्मृतम् ॥ १४ ॥

வைத்தியநாதத்தில் பகலாதேவியின் சர் வோத்தமமாகக் கருதப்பட்ட ஸ்தானமும், ஸ்ரீமத் ஸ்ரீ புவனேசுவரியான என்னுடைய தாகக் கருதப்பட்ட மணித்வீபமும் உள. (கச)

श्रीमत्त्रिपुरभैरव्याः कामाख्यायोनिमण्डलम् ॥
भूमण्डलेक्षेत्ररत्नं महामायाधिवासितम् ॥ १५ ॥

---

* மஹாலஸாஸ்தானம் விந்தியத்தின் தக்ஷிண தேசத் தில் மல்லாரிஸ்தானமென்று பிரசித்தமாம். யோ கேசுவரியின் ஸ்தானம் வாரடதேசத்திலுள்ளது.

ஸ்ரீமத் திரிபுரபைரவியின் * காமாக்கிய யோனிமண்டலம், பூமண்டலத்தில் மகாமாயையினுல் திஷ்டிக்கப்பட்ட க்ஷேத்திர ரத்தினமாம். (கரு)

नातःपरतरंस्थानं क्वचिदस्तिधरातले ॥
प्रतिमासंभवेद्देवी यत्रसाक्षाद्रजस्वला ॥ १६ ॥

பூமியில் இதனின் மேலான ஸ்தானம் எங்குமில்லை. அங்கு மாதந்தோறும் சாக்ஷாத் தேவி இராஜஸ்வலையாகின்ருள். (கசு)

तत्रत्यादेवताःसर्वाः पर्वतात्मकतांगताः ॥
पर्वतेषुवसंत्येव महत्योदेवताअपि ॥ १७ ॥

तत्रत्यापृथिवीसर्वा देवीरूपास्मृताबुधैः ॥
नातःपरतरंस्थानं कामाख्यायोनिमंडलात् ॥१८॥

---

* காமருதேசம் சதீதேவியின் யோனிமண்டலம் விழுந்த க்ஷேத்திரமாகையால் காமாக்கிய யோனிமண்டலமாம். இவை யாவும் காலிகா புராணத்தில் ஸ்பஷ்டமாம்.

அங்கிருந்த தேவதைகளெல்லாம் பர்வத வடிவத் தன்மையை யடைந்தன. மகத்தான தேவதைகளும் பர்வதங்களில் வசிக்கவே செய்கின்றன. அங்குள்ள பிருதிவி முழுவதும் தேவி வடிவமாக அறிஞர்களாற் கருதப்படுகின்றன. காமாக்கியயோனிமண்டலமாகிய இதனின் மேலான ஸ்தானமில்லை. (கஅ)

गायत्र्याश्चपरंस्थानं श्रीमत्पुष्करमीरितम् ॥
अमरेशेचंडिकास्यात्प्रभासेपुष्करेक्षिणी ॥ १९ ॥

ஸ்ரீமத் புஷ்கரம் காயத்திரியின் மேலான ஸ்தான மெனப்படுகின்றது. அமரேசத்தில் சண்டிகையும் பிரபாஸத்தில் புஷ்கரேக்ஷிணியுமாம். (கசு)

नैमिषेतुमहास्थाने देवीसालिंगधारिणी ॥
पुरुहूतापुष्कराक्षे अषाढौचरतिस्तथा ॥ २० ॥

நைமிஷ மகாஸ்தானத்தில் லிங்கதாரிணியாகிய் தேவியிருக்கின்றாள். புஷ்கராக்ஷத்தில் புருஹூதையும் அவ்வாறே அஷாடத்தில் இரதியு மிருக்கின்றாள். (உ0)

चंडमुंडीमहास्थाने दण्डिनीपरमेश्वरी ॥
भारभूतौभवेद्भूति र्नाकुलेनकुलेश्वरी ॥ २१ ॥

சண்டமுண்ட மகாஸ்தானத்தில் தண்டினியான பரமேசுவரியும் பாரபூதி ஸ்தானத்தில் பூதியும் நாகுல ஸ்தானத்தில் நகுலேசுவரியுமாவள். (உக)

चन्द्रिकातुहरिश्चंद्रे श्रीगिरौशांकरीस्मृता ॥
जप्येश्वरेत्रिशूलास्यात्सूक्ष्माचाम्रातकेश्वरे ॥ २२ ॥

ஹரிச்சந்திர ஸ்தானத்தில் சந்திரிகையும், ஸ்ரீகிரியில் சாங்கரீயமென்று கருதப்படுகின்றது. ஜப்யேசுவரத்தில் திரிசூலையும் ஆம்ராதகேசுவரத்தில் சூக்ஷ்மையுமாகின்றாள். (உஉ)

शांकरीतुमहाकाले शर्वाणीमध्यमाभिधे ॥
केदाराख्येमहाक्षेत्रे देवीसामार्गदायिनी ॥ २३ ॥

மகாகாலமென்னும் உஜ்ஜயினியில் சாங்கரியும், மத்தியமேசுவரமென்னும் க்ஷேத்திரத்தில் சர்வாணியும், கேதாரமென்னும் மகாக்ஷேத்திரத்தில் மார்க்கதாயினீ தேவியும், (உங)

भैरवाख्येभैरवीसा गयायांमंगलास्मृता ॥
स्थाणुप्रियाकुरुक्षेत्रे स्वायंभुव्यापिनाकुले ॥ २४ ॥

பைரவமென்னும் க்ஷேத்திரத்தில் பைரவியும், கயையில் மங்கலேயும் குருக்ஷேத்திரத்தில் ஸ்தாணுப் பிரியையும், நாகுல க்ஷேத்திரத்தில் சுவாயம்புவியும். (உச)

कनखलेभवेदुग्रा विश्वेशाविमलेश्वरे ॥
अट्टहासेमहानंदा महेंद्रेतुमहांतका ॥ २५ ॥

கன்கல க்ஷேத்திரத்தில் உக்ரையும், விமலேசுவரத்தில் விசுவேசையும், அட்டகாச க்ஷேத்திரத்தில் மகாநந்தையும் மகேந்திரத்தில் மகாந்தகையும், (உரு)

भीमेभीमेश्वरीप्रोक्ता स्थानेवस्त्रापथेपुनः ॥
भवानीशांकरीप्रोक्ता रुद्राणीत्वर्धकोटिके ॥ २६ ॥

பீமத்தில் பீமேசுவரியும், வஸ்திராபத ஸ்தானத்தில் பவானீசாங்கரியும், அர்த்தகோடிகத்தில் ருத்திராணியும் சொல்லப்படுகின்றாள். ()

अविमुक्तेविशालाक्षी महाभागामहालये ॥
गोकर्णेभद्रकर्णीस्याद्भद्रास्याद्भद्रकर्णिके ॥ २७ ॥

அவிமுக்தத்தில் விசாலாக்ஷியும், மகாலயத்தில் மகாபாகையும், கோகர்ணத்தில் பத்திரகர்ணியும், பத்திரகர்ணகத்தில் பத்திரையும் ()

उत्पलाक्षीस्वर्णाक्षेस्थाण्वीशास्थाणुसंज्ञिके ॥
कामलालयेतुकमला प्रचंडाछगलंडके ॥ २८ ॥

சுவர்ணாக்ஷத்தில் உத்பலாக்ஷியும், ஸ்தாணுவெனும் க்ஷேத்திரத்தில் ஸ்தாணுவீசையும், கமலாலயத்தில் கமலையும், சகலண்டக(छगलण्डक)த்தில் பிரசண்டா தேவியும், (உஅ)

कुरंडलेत्रिसंध्यास्यान्माकोटेमुकुटेश्वरी ॥
मण्डलेशेशांडकीस्यात्कालीकालंजरेपुनः ॥ २९ ॥

குரண்டலத்தில் திரிசந்தியையும் மாகோடத்தில் முகுடேசுவரியும், மண்டலேசத்தில் சாண்டகியும், காலஞ்சரத்தில் காளியும், (உகூ)

शंकुकर्णेध्वनिःप्रोक्ता स्थूलास्यात्स्थूलकेश्वरे ॥
ज्ञानोनांहृदयांभोजे हृल्लेखापरमेश्वरी ॥ ३० ॥

சங்குகர்ணத்தில் த்வனியும், ஸ்தூலகேசுவரத்தில் ஸ்தூலையும், ஞானிகளின் இருதய தாமரையில் * ஹிருல்லேகை யென்னும் பரமேசுவரியுமாகச் சொல்லப்படுவள். (௩௦)

प्रोक्तानीमानिस्थानानि देव्याःप्रियतमानिच ॥
तत्तत्क्षेत्रस्यमाहात्म्यं श्रुत्वापूर्वंनगोत्तम ॥ ३१ ॥

சொல்லப்பட்டனவாகிய இந்த ஸ்தானங்கள் தேவிக்கு மிகப் பிரியமானவைகளாம். பர்வதோத்தமனே! முன்னர் அந்தந்த க்ஷேத்திரத்தின் மாகாத்மியத்தினைக் கேட்டுப் பின்னர். (௩௧)

तदुक्तेनविधानेन पश्चाद्देवींप्रपूजयेत् ॥
अथवासर्वक्षेत्राणि काश्यांसंतिनगोत्तम ॥ ३२ ॥

அதிற்கூறிய விதிப்படி தேவியினைப் பூஜிக்க வேண்டும். அல்லது பர்வதோத்தமனே! சர்வ க்ஷேத்திரங்களும் காசியிலிருக்கின்றன. (௩௨)

---

* ஹிருதயத்தில் கீற்றுப்போல இம்மேலான பிராணசக்தி விழிக்கின்றது அதனால் ஹிருல்லேகை யெனப்படுகின்றதென்பது புவனேசுவரி ரகசியத்திலுள்ளதாம்.

तत्रानित्यंवसेन्नित्यं देवीभक्तिपरायणः ॥
तानिस्थानानिसंपश्य ञ्जपन्देवींनिरन्तरम् ॥ ३३ ॥

நித்தியமும் தேவியின் பக்திபாராயணனான புருஷன் நித்தியமும் அங்கு (காசியில்) வசிக்கக் கடவன். அந்த ஸ்தானங்களைச் செவ்வையாய்த் தரிசித்து, தேவியினை நிரந்தரம் ஜபித்து (௩௩)

ध्यायंस्तच्चरणांभोजं मुक्तोभवतिबन्धनात् ॥
इमानिदेवीनामानि प्रातरुत्थाययःपठेत् ॥ ३४ ॥

भस्मीभवन्तिपापानि तत्क्षणान्नगसत्वरम् ॥
श्राद्धकालेपठेदेतान्यमलानिद्विजाग्रतः ॥ ३५ ॥

அவளுடைய சரணாரவிந்தங்களைத் தியானித்துப் பந்தத்தினின்று முக்தனாகின்றான். பர்வதனே! இத்தேவியின் நாமங்களைக் காலையிலெழுந்து எவன் படிக்கின்றானோ, அவனது பாபங்கள் அக்கணமே விரைவில் பஸ்மமாகின்றன. சிராத்தகாலத்தில் இவ்வமலமான நாமங்களைப் பிராஹ்மணன் முன்னாகப் படிக்கக் கடவன். (௩௫)

मुक्तास्तत्पितरःसर्वेप्रयांतिपरमांगतिम् ॥
अधुनाकथयिष्यामि व्रतानितवसुव्रत ॥ ३६ ॥

அவனுடைய பிதிர்க்களெல்லோரும் முக்தர்களாய் மேலான கதியினை யடைகின்றனர். நல்விரதனே! இப்போது உனக்கு விரதங்களைச் சொல்லுகிறேன். (௩௬)

नारीभिश्चनरैश्चैव कर्तव्यानिप्रयत्नतः ॥
व्रतमनन्ततृतीयाख्यं रसकल्याणिनीव्रतम् ॥३७॥

நாரிகளாலும் நரர்களாலும் பிரயத்தனத்தோடு செய்யத்தக்கனவாம் * அநந்த திருதீயை யெனப்படும் விரதம், இரஸ கல்யாணினீ விரதம், (௩௭)

आर्द्रानन्दकरंनाम्ना तृतीयायाव्रतञ्चयत् ॥
शुक्रवारव्रतञ्चैव तथाकृष्णचतुर्दशी ॥ ३८ ॥

ஆர்த்ராநந்தகரம் எனப்படும் திருதீயையின் விரதம், சுக்கிரவார விரதம், அப்படியே கிருஷ்ண சதுர்தசி விரதம், (௩௮)

---

* திருதியா விரதங்களான இவையும் இவற்றின் விதிகளும் மத்ஸிய புராணத்தில் சொல்லப்பட்டுள்ளன.

भौमवारव्रतञ्चैव प्रदोषव्रतमेवच ॥
यत्रदेवोमहादेवो देवींसंस्थाप्यविष्टरे ॥ ३९ ॥

செவ்வாய்க்கிழமை விரதம், பிரதோஷ விரதமும், பிரதோஷத்தில் தேவனாகிய மகாதேவன் தேவியினை ஆசனத்தில் எழுந்தருளச் செய்து ()

नृत्यंकरोतिपुरतः सार्धंदेवैर्निशामुखे ॥
तत्रोपोष्यरजन्यादौ प्रदोषेपूजयेच्छिवाम् ॥ ४० ॥

முன்பாகத் தேவர்களோடு இராமுகத்தில் நிருத்தியம் செய்கின்றாரோ, அந்த இரவின் ஆதியான பிரதோஷகாலத்தில் உபவாச மிருந்து சிவையினைப் பூஜிக்கவேண்டும். (சo)

प्रतिपक्षंविशेषेण तद्देवीप्रीतिकारकम् ॥
सोमवारव्रतञ्चैव ममाऽतिप्रियकृन्नग ॥ ४१ ॥

பக்ஷந்தோறும் விசேஷமாகச் செய்யின், அது தேவிக்குப் பிரீதியினை யுண்டுபண்ணுவதாம். பார்வதனே! சோமவார விரதமும் எனக்கு மிக்க பிரியத்தினைச் செய்வதாம். (சக

तत्रापिदेवींसंपूज्य रात्रौभोजनमाचरेत् ॥
नवरात्रद्वयंचैव व्रतंप्रीतिकरंमम ॥ ४२ ॥

அதிலும் தேவியினைச் செவ்வையாய்ப் பூஜித்து இரவில் போஜனம் செய்க. * இரண்டு நவராத்திரி விரதமும் எனக்குப் பிரியத்தினைச் செய்வதாம். (சஉ)

एवमन्यान्यपिविभो नित्यनैमित्तिकानिच ॥
व्रतानिकुरुतेयोवै मत्प्रीत्यर्थंविमत्सरः ॥ ४३ ॥

பர்வதனே! இவ்வாறே (மற்ற புராணங்களிலும் தந்திரங்களிலும் சொல்லப்பட்ட) மற்றைய நித்தியநைமித்திக விரதங்களையும் எனது பிரீதியின் பொருட்டு எவன் மற்சரமின்றியவனாய்ச் செய்கின்றானோ, (ச௩)

प्राप्नोतिममसायुज्यं समेभक्तःसमेप्रियः ॥
उत्सवानपिकुर्वीत दोलोत्सवमुखान्विभो ॥ ४४ ॥

---

* ஒன்று சரற்காலத்தது. மற்றொன்று வசந்தகாலத்தது. உம்மையால் மாகத்தும் ஆஷாடத்துமுள்ள இரண்டு நவராத்திரியும் கொள்க.

அவன் எனது பக்தன். அவன் எனக்குப் பிரியன் என்று சாயுஜ்யத்தினை யடைகின்றான். பார்வதனே! * தோலோ (ஊஞ்சலு)ற்சவ முதலிய உற்சவங்களையும் செய்யக் கடவன். (சச)

शयनोत्सवंयथाकुर्यात्तथा जागरनोत्सवम् ॥
रथोत्सवञ्चमेकुर्याद्दमनोत्सवमेवच ॥ ४५ ॥

‡ சயனோற்சவத்தினை எப்படிச் செய்வானோ அவ்வாறே ஜாகரனோற்சவமும் செய்யக் கட கடவன். எனது † இரதோற்சவமும் தமனோற்சவமும் செய்யக்கடவன். (சரு)

---

* தோலோற் சவ விதியினை தேவீ புராணத்தில் காண்க.

‡ சயனோற்சவ ஜாகரனோற்சவ காலங்களையும் விதிகளையும் வாமபுராணத்தில் விளக்கமாய்க் காணலாம்.

† "இரதோற்சவத்தினை ஆஷாட சுக்கிலபக்ஷதிருதீயையில் செய்க" என்பனமுதலியன வாக அவ்விதிகளை சிவபுராணம் உமாசங்கிதை கூறுவதுகாண்க.

தமனோற் சவம் சைத்திரபௌர்ணமாஸியிலாம் அதன் விதிதர்ம சாஸ்திரங்களிலும் தந்திரங்களிலும் பிரசித்தமே பவித்திரோற்சவம் சிராவண பௌர்ணமாஸியிலாம். அதன் விதியும் தர்மசாஸ்திரங்களிலும் தந்திரங்களிலும் பிரசித்தமே.

पवित्रोत्सवमेवापि श्रावणेप्रीतिकारकम् ॥
ममभक्तःसदाकुर्या देवमन्यन्महोत्सवान् ॥ ४६ ॥

சிராவணத்தில் பவித்திரோற்சவமும் எனது பிரியத்தினைச் செய்வதாம். இவ்வாறே எனது பக்தன் மற்றைய மஹோத்சவங்களையும் எப்போதும் செய்யக்கடவன். (சகூ)

मद्भक्तान्भोजयेत्प्रीत्या तथाचैवसुवासिनीः ॥
कुमारीर्बटुकांश्चापि मद्बुद्ध्यातद्गतांतरः ॥ ४७ ॥

எனது பக்தர்களையும் அப்படியே சுமங்கலிகளையும் குமாரிகளையும் பிரஹ்மசாரிகளையும் எனது புத்தியாக அவர்களிடத்துச் சென்ற மனத்தனாய்ப் பிரீதியோடு போஜனஞ் செய்விக்கக் கடவன். (சஎ)

वित्तशाठ्येनरहितो यजेदेतान्सुमादिभिः ॥
यएवंकुरुतेभक्त्या प्रतिवर्षमतंद्रितः ॥ ४८ ॥

திரவியேச்சை யில்லாதவனாய் இவர்களைப் புஷ்பமுதலியவற்றால் யஜிக்க. எவன் இவ்வாறு வருடந்தோறும் சோர்வின்றியவனாய்ப் பக்தியோடு செய்கின்றானோ, (சஅ)

सधन्यःकृतकृत्योऽसौ मत्प्रीतेःपात्रमंजसा ॥
सर्वमुक्तंसमासेन ममप्रीतिप्रदायकम् ॥ ४९ ॥

அவன் தன்னியன், கிருதகிருத்தியன், இவன் உண்மையாக எனது பிரீதிக்குப் பாத்திரன் (உரியவன்). எனது பிரீதியினை யுண்டு பண்ணுவதான யாவும் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. (சகூ)

नाऽशिष्यायप्रदातव्यं नाऽभक्तायकदाचन ॥५०॥

இது சிஷ்யனல்லாதவனுக்குக் கொடுக்கத் தக்க தன்று. பக்தியில்லாதவனுக்கு ஒருபோதும் கொடுக்கத்தக்க தன்று. (௫0)

इति श्रीदेवीभागवते महापुराणे सप्तमस्कंधे
देविगीतायामष्टमोऽध्यायः ॥

ஸ்ரீ தேவிகீதை
எட்டாமத்தியாயம்
முடிந்தது.

ௐ

# ஸ்ரீ தேவிகீதை.

## ॥ अथ नवमोऽध्यायः ॥

## ஒன்பதாம் அத்தியாயம்.

### பகவதியின் பூஜனம்.

हिमालय उवाच ॥
देवदेविमहेशानि करुणासागरोंबिके ॥
ब्रूहिपूजाविधिंसम्यग्यथावदधुनानिजम् ॥ १ ॥

ஹிமாலயன் கேட்கலாயினன் :— தேவ தேவி! மகேசானி! கருணாசாகரே! அம்பிகே! இப்போது உனது பூஜாவிதியினை உள்ளவாறு செவ்வையாகச் சொல்லி யருளுக. (௧)

श्रीदेव्युवाच ॥

वक्ष्येपूजाविधिंराजन्नंबिकायायथाप्रियम् ॥
अत्यन्तश्रद्धयासार्धं शृणुपर्वतपुंगव ॥ २ ॥

ஸ்ரீ தேவி சொல்லலாயினாள் :— அரசனே! அம்பிகையான எனது பூஜாவிதியினைப் பிரியப்படி சொல்லுகிறேன் பர்வத சிரேஷ்டனே! அத்தியந்த சிரத்தையோடுகூடக் கேட்பாயாக.

द्विविधाममपूजास्या बाह्याचाऽऽभ्यंतराऽपिच ॥
बाह्याऽपिद्विविधाप्रोक्ता वैदिकीतांत्रिकीतथा ३

பாகியமும் ஆப்பியந்தரமு(உள்ளு)மாக எனது பூஜை இருவகையினதாம். பாகியமும் வைதிகம், தாந்திரிகமென்று இருவகையினதாம் ()

वैदिक्यर्चाऽपिद्विविधा मूर्तिभेदेनभूधर ॥
वैदिकीवैदिकैःकार्या वेददीक्षासमन्वितैः ॥ ४ ॥

பூதரனே! வைதிகவர்ச்சனையும் மூர்த்தி பேதத்தினால் இருவகையினதாம். வைதிகம் வேததீக்ஷையோடு கூடியவர்களான வைதிகர்களாற் செய்யத்தக்கதாம். (ரு

तन्त्रोक्तदीक्षावद्भिस्तु तांत्रिकीसांश्रिताभवेत् ॥
इत्थंपूजारहस्यञ्च नज्ञात्वाविपरीतकम् ॥ ५ ॥

தந்திர(ஆகம)த்திற் சொல்லிய தீக்ஷையுடையவர்களால் தாந்திரிக பூஜை ஆசிரயிக்கத் தக்கதாம். இத்தன்மைய பூஜாரகசியத்தினை அறியாது விபரீதமாக. (ரு)

करोतियोनरोमूढः सपतत्येवसर्वथा ॥
तत्रयावैदिकीप्रोक्ता प्रथमातांवदाम्यहम् ॥ ६ ॥

எம்மூடனை நரன் செய்கின்றானோ, அவன் எல்லாவிதத்தானும் விழுவே செய்கின்றான். அவற்றுள் முதலாவதான வைதிக பூஜை எதுவோ, அதனை யான் கூறுகின்றேன். (சு)

यन्मेसाक्षात्परंरूपं दृष्टवानसिभूधर ॥
अनंतशीर्षनयन मनन्तचरणम्महत् ॥ ७ ॥
सर्वशक्तिसमायुक्तं प्रेरकंयत्परात्परम् ॥
तदेवपूजयेन्नित्यं नमेध्यायेत्स्मरेदपि ॥ ८ ॥

பூதரனே! அநந்தசிரசுகண்களுடையதும், அநந்த கால்களுள்ளதும், பெரிதும், சர்வசக்தி

களோடு கூடியதும், பிராகமும், பாரத்பரமுமான எந்த எனது பரரூபத்தினை சாக்ஷாத்தாகக் கண்டனையோ அதனையே நித்தியம் பூஜிக்குக; நமஸ்கரிக்குக; தியானிக்குக; ஸ்மரிக்குக. (அ)

इत्येतत्प्रथमार्चायाः स्वरूपंकथितंनग ॥
शांतःसमाहितमना दंभाहंकारवर्जितः ॥ ९ ॥

பர்வதனே! இவ்வாறு முதலாவதான வைதிக பூஜையின் சொரூபம் சொல்லப்பட்டது. சாந்தனும் சமாதானமுடைய மனத்தினனும் இடம்பாகங்கார மின்றியவனுமாய் (கூ)

तत्परोभवतद्याजी तदेवशरणंव्रज ॥
तदेवचेतसापश्य जपध्यायस्वसर्वदा ॥ १० ॥

தற்பரனாய் (அவ்விராட் வடிவத்தையே மேலாகக் கொண்டவனாய்) அதனை யஜிப்பவனாய் அதனையே சரணடைக. அதனையே சித்தத்தினால் காண்; ஜபி; எப்போதும் தியானி. ()

अनन्ययाप्रेमयुक्त भक्त्यामद्भावमाश्रितः ॥
यज्ञैर्यजतपोदानैर्मामेवपरितोषय ॥ ११ ॥

அநந்யமான பிரேமையோடுகூடிய பக்தியினால் எனது தன்மையினை ஆசிரயித்தவனுப் யஞ்ஞங்களால் யஜி, தபோதானங்களால் (விராட்வடிவ என்னையே) மிகச் சந்தோஷிக்கச்செய்.

इत्थंममाऽनुग्रहतो मोक्ष्यसेभवबंधनात् ॥
मत्परायेमदासक्त चित्ताभक्तवरामताः ॥ १२ ॥

இப்படிச் செய்வதனால் எனதநுக்கிரகத்தினால் பவபந்தனத்தினின்று முக்தனுகிறாய். எவர்கள் எனது தற்பரரும் என்னிடத்திற் பற்றிய சித்தத்தினருமாவரோ அவர்கள் பக்தசிரேஷ்டரெனப்படுவர். (கஉ)

प्रतिजानेभवादस्मा दुद्धराम्याचिरेणतु ॥
ध्यानेनकर्मयुक्तेन भक्तिज्ञानेनवापुनः ॥ १३ ॥
प्राप्याऽहंसर्वथाराजन्नतुकेवलकर्मभिः ॥
धर्मात्संजायतेभक्ति र्भक्त्यासंजायतेपरम् ॥ १४ ॥

இத்தன்மையரை இப்பவத்தினின்று விரைவில் கரையேற்றுகிறேனென்று பிரதிஞ்ஞை செய்கின்றேன், கர்மத்தினேடுகூடிய தியானத்

திஞலாவது பக்தியோடுகூடிய ஞானத்திஞலாவது எல்லாவிதத்திஞலும் அடையத்தக்கவளாவேன். அரசனே! கேவலகர்மங்களால் அடையத்தக்கவ ளல்லேன். * தர்மத்திஞல் பக்தி பிறக்கின்றது. பக்தியிஞல் பரமாகிய ஞானம் பிறக்கிறது. (கங-கச)

श्रुतिस्मृतिभ्यामुदितं यत्सधर्मःप्रकीर्तितः ॥
अन्यशास्त्रेणयःप्रोक्तो धर्माभासःसउच्यते ॥१५॥

சுருதிஸ்மிருதிகளாற் சொல்லப்பட்டது (கர்மம்) எதுவோ, அதுவே தர்ம மென்று சொல்லப்படுகின்றது. அந்நிய சாஸ்திரத்திஞல் எது சொல்லப்பட்டுளதோ அது தர்மாபாஸ மெனப்படுகின்றது. (கரு)

---

* கேவலம் கர்மம் பயனற்றதாமென்பது பரிகரிக்கப்படுகின்றது. தர்மத்திஞல் பக்தியுண்டாகின்றது என்பதஞல் கர்மம் செய்யப்படாவிடின், அப்போது பாபக்ஷயமின்மையால் பக்தியே துர்லபமாம். பக்தியில்லாதாகவே பரப்பிரஹ்மமும் அத்தியந்தம் துர்லபமாம் ஆதலால் கர்மத்தினை ஆசரித்தல் பயனுடையதேயா மென்பது கருத்து.

सर्वज्ञात्सर्वशक्तेश्च मत्तोवेदःसमुत्थितः ॥
अज्ञानस्यममाऽभावा दप्रमाणानचश्रुतिः ॥ १६ ॥

சர்வஞ்ஞையும் சர்வசக்தியுமாகிய என்னிடத்தினின்று வேதம் செவ்வனே எழுந்தது. எனக்கு அஞ்ஞானமின்மையால் சுருதி அப்பிரமாணமாகாது. (கசு)

स्मतयश्चश्रुतेरर्थं गृहीत्वैवचानिर्गताः ॥
मन्वादीनांस्मृतीनांच ततःप्रामाण्यमिष्यते ॥ १७ ॥

ஸ்மிருதிகளும் சுருதியினர்த்தத்தினைக் கிரகித்தே வெளிப்பட்டனவாம். அதனால் மநுவாதியரின் ஸ்மிருதிகட்குப் பிராமாணியம் அங்கீகரிக்கப் படுகின்றது. (கஎ)

क्वचित्कदाचित्तंत्रार्थ कटाक्षेणपरोदितम् ॥
धर्मवदन्तिसोंशस्तु नैवग्राह्योऽस्तिवैदिकैः ॥ १८ ॥

(ஸ்மிருதி புராணாதிகளில்) சிலவிடத்து ஒருகால் தந்திரார்த்த கடாக்ஷத்தினால் பிறரால் சொல்லப்படும் தர்மத்தினைக் கூறுகின்றன. அந்த அம்சமோ வைதிகர்களால் கிரகிக்கத் தக்கதாகாது. (கஅ)

अन्येषांशास्त्रकर्तृणामज्ञानप्रभवत्वतः ॥
अज्ञानदोषदुष्टत्वात्तदुक्तेर्नप्रमाणता ॥ १९ ॥

மற்றைய சாஸ்திர கர்த்தாக்கட்கு அஞ்ஞானத்தாலாகிய தன்மையிருத்தலால், அவர்கள் வார்த்தைக்கு அஞ்ஞானதோஷத்தாற் றூஷிக்கப்பட்டதன்மை யிருத்தலின் பிரமாணத்துவமில்லை. (கசுூ)

तस्मान्मुमुक्षुर्धर्मार्थे सर्वथावेदमाश्रयेत् ॥
राजाज्ञाचयथालोके हन्यतेनकदाचन ॥ २० ॥

ஆதலால் முமுக்ஷுவானவன் தர்மத்தின் பொருட்டு எல்லாவிதத்தாலும் வேதத்தினை ஆசிரயிக்கக் கடவன். அரசனது ஆணை எப்படி உலகத்தில் ஒருபோதும் கெடுக்கப்படாதோ, (உ0)

सर्वेशान्याममाज्ञासा श्रुतिस्त्याज्याकथंनृभिः ॥
मदाज्ञारक्षणार्थंतु ब्रह्मक्षत्रियजातयः ॥ २१ ॥

அதுபோல சர்வேசுவரியான எனது ஆணை வடிவ சுருதி அரசர்களால் எப்படி விலக்கத்தக்கதாம். எனதாணையினை இரக்ஷித்தற் பொருட்டே பிரஹ்மக்ஷத்திரிய ஜாதிகள். (உக)

मयासृष्टास्ततोज्ञेयं रहस्यंमेश्रुतेर्वचः ॥
यदायदाहिधर्मस्य ग्लानिर्भवतिभूधर ॥ २२ ॥

என்னால் சிருஷ்டிக்கப்பட் டிருக்கின்றன. ஆதலால் எனது சுருதியின் வாக்கியம் இரகசியமானதென்று அறியத்தக்கதாம். பூதரனே! எப்போதெப்போது தர்மத்திற்குக் கேடுண்டாகின்றதோ, (உஉ)

अभ्युत्थानमधर्मस्य तदावेषान्बिभर्म्यहम् ॥
देवदैत्यविभागश्चाऽप्यतएवाऽभवन्नृप ॥ २३ ॥

அதர்ம மேற்படுகின்றதோ, அப்போது (சாகம்பரீ முதலியனவும், ராமகிருஷ்ணாதிகளுமான) வேஷ(அவதார)ங்களை யான் தரிக்கின்றேன். அரசனே! இதனு(வேதமிருத்தலா)ற்றான் * தேவ தைத்தியர்களின் விபாகமுமுண்டாயிற்று. (உ௩)

येनकुर्वंतितद्धर्मं तच्छिक्षार्थंमयासदा ॥
संपादितास्तुनरका स्त्रासोयच्छ्रवणाद्भवेत् ॥२४॥

* வேதத்தினை ரக்ஷிப்பவர் தேவர் அழிப்பவர் தைத்தியர் என்னும் பிரிவுண்டாயிற்று.

எவர்கள் அத்தர்மத்தினைச் செய்கிறதில்லையோ, அவர்களைச் சிக்ஷித்தற் பொருட்டு எதனைக் கேட்பதனலேயே பயமுண்டாகுமோ அப்படிப்பட்ட நரகங்கள் எப்போதும் என்னல் ஆக்கப்பட்டிருக்கின்றன. (உச)

योवेदधर्ममुज्झित्य धर्ममन्यंसमाश्रयेत् ॥
राजाप्रवासयेद्देशान्निजादेतानधर्मिणः ॥ २५ ॥

எவன் வேதத்திற் சொல்லப்பட்ட தர்மத்தினை விட்டு அந்நிய தர்மத்தினை ஆசிரயிப்பானே, அத்தன்மைய அதர்மியினை அரசன் தன் தேசத்தினின்று துரத்தவேண்டும். (உரு)

ब्राह्मणैर्नचसंभाष्याः पंक्तिग्राह्यानचद्विजैः ॥
अन्यानियानिशास्त्राणि लोकेऽस्मिन्विविधानिच

அவ்வதர்மிகள் பிராஹ்மணர்களோடு சம்பாஷிக்கத் தக்கவர்களாகார். பிராஹ்மணர்களோடு போஜன பங்க்தியில் கொள்ளத்தக்கவருமாகார் இவ்வுலகத்தில் பலவகையான அந்நிய சாஸ்திரங்கள் எவை யுளவோ, (உசு)

श्रुतिस्मृतिविरुद्धानि तामसान्येवसर्वशः ॥
वामंकापालकंचैव कौलकंभैरवागमः ॥ २७ ॥

சுருதிஸ்மிருதி விருத்தங்களான அவை எல்லா விதத்திலும் தாமஸங்களே யாம், வாமமும், காபாலமும், கௌளமும், பைரவாகமமும், (உள)

शिवेनमोहनार्थाय प्रणीतोमान्यहेतुकः ॥
दक्षशापाद्भृगोःशापाद्दधीचस्यचशापतः ॥ २८ ॥

சிவனால் (அசுராதியரை) மோகிப்பித்தற் பொருட்டு செய்யப்பட்டதாம். வேறு ஏதுவினவன்று. தக்ஷசாபத்தினாலும், பிருகுவின் சாபத்தினாலும், ததீசியின் சாபத்தினாலும் ()

दग्धायेब्राह्मणवरा वेदमार्गबहिष्कृताः ॥
तेषामुद्धरणार्थाय सोपानक्रमतःसदा ॥ २९ ॥

தகிக்கப்பட்டவர்களாய் எந்த பிராஹ்மண சிரேஷ்டர்கள் வேதமார்க்கத்தினின்று வெளிப்பட்டவராஞரோ, அவர்களை இப்படியொழுங்காக எப்போதும் கரையேற்றுதற் பொருட்டும், (உகூ)

शैवाश्चवैष्णवाश्चैव सौराःशाक्तास्तथैवच ॥
गाणपत्याआगमाश्च प्रणीताःशंकरेणतु ॥ ३० ॥

சைவங்களும், வைஷ்ணவங்களும், அவ்வாறே செளரங்களும், சாக்தங்களும், காணபத்தியங்களுமான ஆகமங்கள் சங்கரராற் செய்யப்பட்டுள்ளன. (௩0)

तत्रवेदाविरुद्धांशोप्युक्तएवक्वचित्क्वचित् ॥
वैदिकैस्तद्ग्रहेदोषो नभवत्येवकर्हिचित् ॥ ३१ ॥

அவற்றில் வேதத்திற்கு விரோதமில்லாத அம்சமும் சிற்சில விடத்து சொல்லப்பட்டேயுளது. வைதிகர்களால் அதனைக் கொள்ளுதலில் ஒருபோதும் தோஷமுண்டாகவே மாட்டாது. (௩க)

सर्वथावेदभिन्नार्थे नाधिकारीद्विजोभवेत् ॥
वेदाधिकारहीनस्तु भवेतत्राधिकारवान् ॥ ३२ ॥

எல்லாவிதத்திலும் வேதத்தின் வேறான (வேதவிருத்தமான) அர்த்தத்தில் பிராஹ்மணன் அதிகாரியாகான். வேதாதிகார மில்லாதவனே அதில் அதிகாரமுடையவனாகின்றான். (௩உ)

तस्मात्सर्वप्रयत्नेन वैदिकोवेदमाश्रयेत् ॥
धर्मेणसहितंज्ञानं परंब्रह्मप्रकाशयेत् ॥ ३३ ॥

ஆதலால் எல்லா முயற்சியினாலும் வைதிகன் வேதத்தினை ஆசிரயிக்கவேண்டும். வைதிக தர்மத்தோடுகூடிய ஞானம் பரப்பிரஹ்மத்தினைப் பிரகாசிக்கும். (௩௩)

सर्वैषणाःपरित्यज्य मामेवशरणंगताः ॥
सर्वभूतदयावंतो मानाहंकारवर्जिताः ॥ ३४ ॥

मच्चित्तामद्गतप्राणा मत्स्थानकथनेरताः ॥
संन्यासिनोवनस्थाश्च गृहस्थाब्रह्मचारिणः ॥ ३५ ॥

சர்வேஷணைகளையும் விட்டு என்னையே சரணடைந்தவர்களும், சர்வபூததயை யுடையவர்களும், மானாகங்கார மில்லாதவர்களும், என்னிடத்திற் செலுத்திய சித்தத்தினரும், என்னிடத்துப் பொருந்திய பிராணனுடையவர்களும், எனது ஸ்தானங்களில் பிரீதி யுள்ளவர்களுமான சந்நியாசிகளும் வானப்பிரஸ்தர்களும், கிரகஸ்தர்களும், பிரஹ்மசாரிகளும், ()

उपासंतेसदाभक्त्या योगमैश्वरसंज्ञितम् ॥
तेषांनित्याभियुक्तानामहमज्ञानजंतमः ॥ ३६ ॥

எப்போதும் பக்தியோடு ஐசுவர(விராட்ஸ்வ ரூபோபாசன)மென்னும் பெயருடைய யோகத்தினை உபாசிக்கின்றார்கள். நித்தியமும் யோகமப்பியசிக்கும் அவர்களுடைய அஞ்ஞான விருளை யான். (௩கூ)

ज्ञानसूर्यप्रकाशेन नाशयामिनसंशयः ॥
इत्थंवैदिकपूजायाः प्रथमायानगाधिप ॥ ३७ ॥

ஞானசூரியப் பிரகாசத்தினால் கெடுக்கின்றேன்; சம்சய மில்லை. மலையதிபனே! இவ்வாறு முதலாவதான வைதிகபூஜையின் (௩எ)

स्वरूपमुक्तंसंक्षेपाद्द्वितीयायाअथोब्रुवे ॥
मूर्तौवास्थंडिलेवापि तथासूर्येंदुमण्डले ॥ ३८ ॥

ஸ்வரூபம் சுருக்கமாகச் சொல்லப்பட்டது. இனி இரண்டாவதான வைதிக பூஜையினைக் கூறுகின்றேன். விக்கிரகத்திலாவது, சுத்தபூமியிலாவது, சூரிய சந்திர மண்டலங்களிலாவது, (௩அ)

जलेऽथवाबाणलिंगे यंत्रेवाऽपिमहापटे ॥
तथाश्रीहृदयांभोजे ध्यात्वादेवींपरात्पराम् ॥ ३९ ॥

ஜலத்திலாவது, பாணலிங்கத்திலாவது, யந்திரத்திலாவது, பெரிய படத்திலாவது, அவ்வாறே அழகிய இருதய கமலத்திலாவது பராத்பரமான தேவியினைத் தியானித்து (௩௯)

सगुणांकरुणापूर्णां तरुणीमरुणारुणाम् ॥
सौंदर्यसारसीमांतां सर्वावयवसुंदराम् ॥ ४० ॥

சகுணையும் கருணை நிறைந்தவளும், தருணமானவளும், அருணனைப் போன்ற செந்நிறமுள்ளவளும், சௌந்தரிய(அழகின்) சாரத்தின் எல்லை யானவளும், அச்சர்வாவயவ சுந்தரையும், (௪௦)

शृंगाररससंपूर्णां सदाभक्तार्तिकातराम् ॥
प्रसादसुमुखीमंबां चन्द्रखंडशिखंडिनीम् ॥ ४१ ॥

சிருங்காரரஸம் மிக நிறைந்தவளும், எப்போதும் பக்தர்களது துயரத்தினைச் சகியாதவளும், பிரசாத நன்முகத்தினளும், அம்மையும், பிறையணிந்த முடியினளும், (௪௧)

पाशांकुशवराभीति धरामानन्दरूपिणीम् ॥
पूजयेदुपचारैश्च यथावित्तानुसारतः ॥ ४२ ॥

பாச மங்குசம் வரம் அபய மென்பவற்றைத் தரித்தவளும், ஆநந்த ரூபியுமான அவளை இயன்ற திரவியாநுசாரமாக உபசாரங்களால் பூஜிக்கவேண்டும். (சஉ)

यांवदांतरपूजाया मधिकारोभवेन्नहि ॥
तावद्बाह्यामिमांपूजां श्रयेज्जातेतुतांत्यजेत् ॥ ४३ ॥

எதுவரையில் ஆந்தர பூஜையில் அதிகார முண்டாக வில்லையோ அதுவரையில் இப்பா கிய பூஜையினைச் செய்யவேண்டும். ஆந்தர பூஜையில் அதிகாரமுண்டானபோது அதனை (வெளிப்பூஜையினை) விடுக. (சங)

आभ्यन्तरातुयापूजा सातुसंविल्लयःस्मृतः ॥
सं.विदेवपरंरूपमुपाधिराहितंमम ॥ ४४ ॥

ஆப்பியந்தரமான(உட்)பூஜை எதுவோ அது சம்வித்தில் சித்தத்தின் இலயமென்று கருதப் படுகின்றது. சம்வித்தே உபாதியின்றிய எனது பரமான ரூபமாம். (சச)

अतःसंविदिमद्रूपे चेतःस्थाप्यंनिराश्रयम् ॥
संविद्रूपातिरिक्तंतु मिथ्यामायामयंजगत् ॥ ४५ ॥

ஆதலால் எனது ரூபமான சம்வித்தில் சித்தத்தினை நிராசிரயமாக ஸ்தாபிக்கவேண்டும். சம்வித்தின் வேருகிய மாயாமயமான ஜகத்து மித்தையாம். (சரு)

अतःसंसारनाशाय साक्षिणीमात्मरूपिणीम् ॥
भावयेन्निर्मनस्केन योगयुक्तेनचेतसा ॥ ४६ ॥

ஆதலால் சம்ஸாரநாசத்தின் பொருட்டுச் சாக்ஷியான ஆத்மரூபியினைச் சங்கற்பமின்றிய (பக்தி) யோகத்தோடுகூடிய சித்தத்தினுல் பாவிக்கவேண்டும். (சசா)

अतःपरंबाह्यपूजा विस्तारःकथ्यतेमया ॥
सावधानेनमनसा शृणुपर्वतसत्तम ॥ ४७ ॥

இதன்மேல் பாஹ்ய பூஜையின் விஸ்தாரம் என்றுச் சொல்லப்படும். பர்வதோத்தமனே! சாவதானமான மனத்தோடு கேள். (௨௭)

इति श्रीदेवीभागवते महापुराणे सप्तमस्कंधे देवीगीतायां नवमोऽध्यायः ॥

ஸ்ரீ தேவிகீதை

ஒன்பதாமத்தியாயம்

முடிந்தது.

ॐ

# ஸ்ரீ தேவிகீதை.

## ॥ अथ दशमोऽध्यायः ॥

## பத்தாம் அத்தியாயம்.

### பாகிய பூஜாவிதானம்.

श्रीदेव्युवाच ॥

प्रातरुत्थायशिरसि संस्मरेत्पद्ममुज्ज्वलम् ॥
कर्पूराभंस्मरेत्तत्र श्रीगुरुंनिजरूपिणम् ॥ १ ॥

ஸ்ரீ தேவி சொல்லலாயினாள் :— சாதகன் காலையிலெழுந்து சிரஸில் (பிரஹ்மரந்திரத்தில்) கர்ப்பூரம்போன்ற வெள்ளிய ஆயிரவிதழ்க் கமலத்தினையும் அதில் தனது குருவின் சமானாகார ஸ்ரீ குருவினையும் ஸ்மரிக்க. (க)

सुप्रसन्नंलसद्भूषा भूषितंशक्तिसंयुतम् ॥
नमस्कृत्यततोदेवीं कुंडलींसंस्मरेद्बुधः ॥ २ ॥

அவரை நல்ல பிரசன்னரும், பிரகாசிக்கின்ற ஆபரணங்களாலலங்கரிக்கப்பட்டவரும், *சக்தியோடுகூடியவருமாகச் சிந்தித்து வணங்கி, அதன்பின் அறிஞன் தேவியான குண்டலியினை ஸ்மரிக்கக் கடவன். (௨)

प्रकाशमानांप्रथमेप्रयाणे
प्रतिप्रयाणेऽप्यमृतायमानाम् ॥
अंतःपदव्यामनुसंचरंती
मानन्दरूपामबलांप्रपद्ये ॥ ३ ॥

முதற் பிரயாணத்தில் (மூலாதாரத்தினின்று பிரஹ்மரந்திரத்திற்குச் செல்லும் சமயத்தில்) சித்ரூபமாய்ப் பிரகாசிக்கின்றவளும், திரும்பும் பிரயாணத்தில் (பிரஹ்மரந்திரத்தினின்று மூலாதாரத்திற்குச் செல்லுங்கால்) அமிருதமயமா

---

* மாதாகுருவாயிருக்கும் பக்ஷத்தில் அவளைப் பதியோடுகூடியவளாகச் சிந்திக்க.

கின்றவளும், உட்பதவி(சுழுமுனை)யில் போக்கு வரத்துள்ளவளும், ஆநந்த வடிவினளும், * அபலையுமான குண்டலிநியினைச் சரணடைகின்றேன். (௩)

ध्यात्वैवंतािच्छकामध्ये सच्चिदानन्दरूपिणीम् ॥
मांध्यायेदतशौचादि क्रियाःसर्वाःसमापयेत् ४

என்று இவ்வாறு தியானித்து † (யோகமில்லாதபோது பாவித்து) அதன் சிகையினிடையில் சச்சிதாநந்த வடிவினளாகிய என்னைத் தியானிக்கவேண்டும். அதன்பின் சௌசாதி (சந்தியாவந்தனாந்தமான)கிரியைகளெல்லாவற்றையும் முடிக்கவேண்டும். (௪)

---

* எவளைவிட வேறுபலம் (ஆற்றல்) இல்லையோ அவள் அபலை.

† மூலாதாரத்துள்ள சித்தாகிய அக்கினியின் சிகையான குண்டலிநிதுவோ (அச்சிகையின் மத்தியில் பரமாத்மா நிலைத்திருக்கின்றார் என்று தைத்திரியத்தில் சொல்லப்பட்டதான) அதன் நடுவில் என்னைத் தியானிக்க வேண்டுமென்பது பொருள்.

अग्निहोत्रंततोहुत्वामत्प्रीत्यर्थंद्विजोत्तमः ॥
होमांतेस्वासनेस्थित्वा पूजासंकल्पमाचरेत् ५

அதன்பின் துவிஜோத்தமன் எனது பிரீதியின் பொருட்டு அக்னிஹோத்திரத்தினை ஹோமித்து, அக்னிஹோத்ர ஹோமத்தின் முடிவில் தனதாசனத்திலிருந்து பூஜையின் சங்கற்பத்தினைச் செய்யக் கடவன். (ரு)

भूतशुद्धिंपुराकृत्वा मातृकान्यासमेवच ॥
ह्रल्लेखामातृकान्यासं नित्यमेवसमाचरेत् ६

முன்னர் பூதசுத்தியினையும் மாத்ருகா நியாஸத்தினையும் செய்து * மாயாபீஜ மாதிருகா நியாஸத்தினை நித்தியமுமே செவ்வையாய் ஆசரிக்கவேண்டும். (சு)

मूलाधारेहकारञ्च ह्रदयेचरकारकम् ॥
भ्रूमध्येतद्वदीकारं ह्रींकारंमस्तकेन्यसेत् ॥ ७ ॥

* மாயாபீஜமான ஹ்ருல்லேகையினை அக்ஷரந்தோறும் முன்புகொடுத்துச் செய்யும் மாதிருகாநியாஸம் எதுவோ அது ஹ்ருல்லேகாமாத்ருகா நியாஸமாம் சாரதாதிலகத்தில் பிரசித்தம்,

மூலாதாரத்தில் ஹகாரத்தினையும், இருதயத்தில் ரகாரத்தினையும், அதுபோலப் புருவ நடுவில் ஈகாரத்தினையும், ஹ்ரீங்காரத்தினைச் சிரசிலும் நியாஸம் செய்க. (எ)

तत्तन्मंत्रोदितानन्यान्न्यासान्सर्वान्समाचरेत् ॥
कल्पयेत्स्वात्मनोदेहे पीठंधर्मादिभिःपुनः ॥ ८ ॥

அந்தந்த மந்திரங்களாற் சொல்லப்படும் பிற நியாசங்களெல்லாவற்றையும் செய்க. மறுபடியும் தனது தேகத்தில் * தர்மாதிகளாற் பீடத்தினைக் கற்பிக்க. (அ)

ततोध्यायेन्महादेवीं प्राणायामैर्विजृंभिते ॥
हृदंभोजेममस्थाने पञ्चप्रेतासनेबुधः ॥ ९ ॥

---

* தர்மாதிகளால் என்றதன் அபிப்பிராயம் இதுவாம் தர்மம் ஞானம் வைராக்கியம் ஐசுவரியம் என்பவற்றை நான்கு கோணதிக்குகளில் பீடத்தின் குளம்பு (பாதங்)களாகப் பாவிக்க அதர்மம் அஞ்ஞானம் அவைராக்கியம் அனைசுவரியம் என்பவைகளை நான்கு திக்குகளிலும் பீடமாத்திரத் தன்மையாய்ப் பாவிக்க. பீடசக்தி பூஜையாதிகளைச் சாரதாதிலகத்திற் காண்க.

அதன்பின் அறிஞன் பிராணாயாமங்களால் விரிந்த இருதய தாமரையாகிய எனது ஸ்தானமான * பஞ்சப் பிரேதாசனத்திலிருக்கும் மகாதேவியினைச் சிந்திக்க. (௯)

ब्रह्माविष्णुश्च रुद्रश्च ईश्वरश्च सदाशिवः ॥
एते पञ्च महाप्रेताः पादमूले मम स्थिताः ॥ १० ॥

பிரஹ்மா, விஷ்ணு, ருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்று மிவர்கள் ஐவரும் மகாப் பிரேதங்களாய் எனது பாதமூலத்தி லிருப்பவராவர். (௧0)

पञ्चभूतात्मका ह्येते पञ्चावस्थात्मका अपि ॥
अहं त्वव्यक्तचिद्रूपा तदतीताऽस्मि सर्वथा ॥ ११ ॥

இவர்கள் பஞ்சபூத வடிவினரும் பஞ்சாவஸ்தை வடிவினருமாவர். யானே அவ்யக்த

* சக்தியின்றியபோது பிரேதசமானராகிய பஞ்சமூர்த்திகளில் பிரஹ்மா விஷ்ணு ருத்திரன் மகேசுரன் நால்வரும் அம்பிகையின் ஆசனத்திற்கு நான்குகால்களாவர் சதாசிவன் ஆசனப்பலகையாவர். அவ்வாசனத்தில் அம்பிகை எழுந்தருளியபோது இவர்கள்பஞ்சகிருத்தியஞ் செய்யச் சமர்த்தராவர்.

துரிய சித்ரூபையும் எல்லாவிதத்தாலும் அவர்கட்கப்பாற்பட்டவளாயுமிருக்கின்றேன். (கக)

ततोविष्टरतांयाताः शक्तितंत्रेषुसर्वदा ॥
ध्यात्वैवंमानसैर्भोगैः पूजयेन्मांजपेदपि ॥ १२ ॥

அதனால் பீடத்தன்மையினை யடைந்தனர். இது சக்திதந்திரங்களில் பிரசித்தம். இவ்வாறு எப்போதும் தியானித்து மானஸ போகங்களால் என்னைப் பூஜிக்க. ஜபிக்கவும் செய்க.()

जपंसमर्प्यश्रीदेव्यै ततोऽर्घ्यस्थापनंचरेत् ॥
पात्रासादनकंकृत्वा पूजाद्रव्याणिशोधयेत् १३
जलेनतेनमनुना चास्त्रमंत्रेणदेशिकः ॥
दिग्बंधंचपुराकृत्वा गुरून्नत्वाततःपरम् ॥ १४ ॥

ஸ்ரீ தேவிக்கு ஜபத்தினைச் சமர்ப்பித்து அதன்பின் * அர்க்கிய ஸ்தாபனம் செய்க. பாத்திராதிகளின் ஸ்தாபனத்தினைச் செய்து பூஜாத்திரவியங்களை அம்(மூல)மந்திரத்தினு

---

* அர்க்கிய ஸ்தாபனக்கிரமத்தினை சாரதாதிலகத்துக் காண்க.

ஹும் பட் என்னும் அஸ்திர மந்திரத்தினுலும் அபிமந்திரிக்கப்பட்ட ஜலத்தினுல் சாதகன் சுத்தி செய்க. முன்னர் * திக்பந்தனத்தினைச் செய்து அதன்பின் குருமாரை நமஸ்கரித்து ()

तदनुज्ञांसमादाय बाह्यपीठेततःपरम् ॥
हृदिस्थांभावितांमूर्तिं ममदिव्यांमनोहराम् ॥ १५ ॥

அவர்கள் அநுஞ்ஞையினைப் பெற்றுக் கொண்டு அதன்பின் (யந்திரமுதலிய) பாஹ்ய பீடத்தில் இருதயத் திருப்பதும் மனோகரமும் பாவிக்கப்பட்டதுமான எனது திவ்விய மூர்த்தியினை (கரு)

आवाहयेत्ततःपीठे प्राणस्थापनविद्यया ॥
आसनावाहनेचार्घ्यं पाद्याद्याचमनंतथा ॥ १६ ॥

அதன்பின் பீடத்தில் பிராண ஸ்தாபன வித்தையி (பிராணப் பிரதிஷ்டா மந்திரத்தி) னுல் ஆவகனஞ் செய்க. ஆசனமும், ஆவாகனமும், அர்க்கியமும், பாத்தியமும், அவ்வாறே ஆசமனமும், (கசு)

* பட் என்னும் மந்திரத்தால் தன்னைச்சுற்றிலும் அக்கினிப் பிராகாரத்தினைப் பாவித்தல் திக்பந்தனமாம்.

स्नानंवासोद्वयंचैव भूषणानिचसर्वशः ॥
गन्धपुष्पंयथायोग्यं दत्वादेव्यैस्वभक्तितः १७

ஸ்நானமும், வஸ்திர மிரண்டும், எல்லாவித மான பூஷணங்களும், கந்தமும், புஷ்பமும், தக்கபடி தேவிக்குத் தனது பக்தியோடு கொடுத்து, (௧௭)

यंत्रस्थानामावृतीनां पूजनंसम्यगाचरेत् ॥
प्रतिवारमशक्तानां शुक्रवारोनियम्यते ॥ १८ ॥

யந்திரத்திலுள்ள ஆவரணங்களின் பூஜனத் தினைச் செவ்வையாய் ஆசரிக்க. நாடோறும் (ஆவரண தேவதாபூஜனம்) செய்ய சக்தியின் றியவர்கட்குச் சுக்கிரவாரம் நியமிக்கப்படுகின் றது. (௧௮)

मूलदेवीप्रभारूपाः स्मर्तव्याअंगदेवताः ॥
तत्प्रभापटलव्याप्तं त्रैलोक्यंचविचिंतयेत् १९

மூல தேவியின் பிரபைவடிவினவாக ஸ்மரிக் கத் தக்கனவாம். அங்க(ஆவரண) தேவதைகள். மூன்று லோகத்தினையும் அதன் பிரபாபடலத் தினால் வியாபிக்கப்பட்டதாம். என்று சிந்திக்க.

पुनरावृत्तिसहितां मूलदेवीं च पूजयेत् ॥
गंधादिभिः सुगंधैस्तु तथा पुष्पैः सुवासितैः ॥ २० ॥

மறுபடியும் ஆவரணங்களோடுகூடிய மூலதேவியினையும் பூஜிக்க. சந்தனாதி சுகந்தங்களாலும், அவ்வாறே நல்வாசனையுள்ள புஷ்பங்களாலும், (உ0)

नैवेद्यैस्तर्पणैश्चैव तांबूलैर्दक्षिणादिभिः ॥
तोषयेन्मां त्वत्कृतेन नाम्नां साहस्रकेन च ॥ २१ ॥

நைவேத்தியங்களாலும், தர்ப்பணங்களாலும், தாம்பூலங்களாலும், தக்ஷிணை முதலியவற்றாலும், (இமாலயனாகிய) உன்னால் செய்யப்பட்ட * நாமசகஸ்ரத்தினாலும், என்னைச் சந்தோஷிப்பிக்க. (உக)

कवचेन च सूक्तेनाऽहं रुद्रेभिरिति प्रभो ॥
देव्यथर्वशिरोमंत्रैर्हृल्लेखोपनिषद्भवैः ॥ २२ ॥

---

* இச்சகஸ்ரநாமம் இப்புராணத்தில் காணப்படவில்லை யாயினும் கூர்மபுராணம் கஉ-வது அத்தியாயத்திலிருத்தலால் அது கொள்ளத்தக்கதாம். அது நித்தியமும் மூலமந்திர ஜபம் செய்தபின் படிக்கத்தக்கதாம்.

அரசனே! தந்திராதிகளிற் சொல்லப்பட்ட கவசத்திலும், 'अहं रुद्रेभिः அஹம் ருத்ரேபி:' என்னும் தேவீ சூக்தத்திலும், புவனேசுவரி யுபநிஷதத்திலுள்ள "सर्वे वै देवा देविमु-पतस्थुः ஸர்வேவை தேவாதேவீ முபதஸ்து:" என்னும் தேவி யதர்வசிரோ மந்திரங்களாலும்,

महाविद्यामहामन्त्रैस्तोषयेन्मांमुहुर्मुहुः ॥
क्षमापयेज्जगद्धात्रीं प्रेमार्द्रहृदयोनरः ॥ २३ ॥

மகாவித்தையின் மகா மந்திரங்களாலும் என்னை யடிக்கடி சந்தோஷிப்பிக்க. உலகம் படைப்பவளை பிரேமையினால் இளகிய மனத்தனாகிய நரன் தனது அபராதத்தினைப் பொறுத் தருளும்படி பிரார்த்திக்க. (௨௩)

पुलकांकितसर्वांगैर्बाष्परुद्धाक्षिनिःस्वनः ॥
नृत्यगीतादिघोषेण तोषयेन्मांमुहुर्मुहुः ॥ २४ ॥

மயிர்க்குச் சுண்டான சர்வாங்கங்களால் பாஷ்பத்தினால் தகைபட்ட கண்களும் குரலுமுடையவனாய் நிருத்திய கீதமுதலிய கோஷத்தினால் என்னை அடிக்கடி சந்தோஷிப்பிக்க. (௨௪)

वेदपारायणैश्चैव पुराणैःसकलैरपि ॥
प्रतिपाद्यायतोऽहंवै तस्मात्तैस्तोषयेत्तुमाम् ॥ २५ ॥

எதனால் யான் வேதபாராயணங்களாலும் புராணங்களெல்லாவற்றாலும் பிரதிபாதிக்கப் படுவளோ அதனால் அவற்றால் என்னைச் சந்தோஷிப்பிக்க. (௨௫)

निजंसर्वस्वमपिमे सदेहंनित्यशोऽर्पयेत् ॥
नित्यहोमंततःकुर्याद्ब्राह्मणांश्चसुवासिनीः ॥ २६ ॥

தனது எல்லாச் சொத்துக்களையும் தேகத்தோடு நித்தியமும் எனக்கு அர்ப்பணஞ் செய்க. அதன்பின் நித்திய ஹோமம் செய்க. பிராஹ்மணர்களையும், சுமங்கிலிகளையும், (௨௬)

बटुकान्पामरानन्यान्देवीबुद्ध्यातुभोजयेत् ॥
नत्वापुनःस्वहृदये व्युत्क्रमेणविसर्जयेत् । २७ ॥

பிரஹ்மசாரிகளையும், மற்றப் பாமரர்களையும், தேவி புத்தியாகப் போஜனம் செய்விக்க. மறுபடியும் நமஸ்கரித்துத் தனது இருதயத்தில் மாறாக (சம்ஹார முத்திரையால்) விசர்ஜனஞ் செய்க. (௨௭)

सर्वंहृल्लेखयाकुर्यात्पूजनंममसुव्रत ॥
हृल्लेखासर्वमंत्राणां नायिकापरमास्मृता ॥ २८ ॥

நல்விரதனே! எனது பூஜை முழுவதனையும் மாயாபீஜ மந்திரத்தினுற் செய்க. மாயாபீஜ மந்திரமானது சர்வமந்திரங்கட்கும் மேலான நாயிகையாக (தலைமையினதாக)க் கருதப்பட்டதாம். (உஅ)

हृल्लेखादर्पणेनित्यमहंतुप्रतिबिंबिता ॥
तस्माद्धृल्लेखयादत्तं सर्वमंत्रैःसमर्पितम् ॥ २९ ॥

யானே மாயாபீஜமான கண்ணுடியில் நித்தியமும் பிரதிபிம்பித்திருக்கின்றேன். ஆதலால் மாயாபீஜ மந்திரத்தினுல் கொடுக்கப்பட்டது சர்வ மந்திரங்களாலும் கொடுக்கப்பட்டதாம். (உகூ)

गुरुंसंपूज्यभूषाद्यैः कृतकृत्यत्वमावहेत् ॥
यएवंपूजयेद्देवीं श्रीमद्भुवनसुंदरीम् ॥ ३० ॥

பூஷணுதிகளால் குருவினைச் செவ்வையாய்ப் பூஜித்துக் கிருத கிருத்தியத் தன்மையை

வகிக்க. எவன் இவ்வாறு ஸ்ரீமத் புவனசுந்தரியான தேவியினைப் பூஜிக்கின்றானோ, (௩O)

नतस्यदुर्लभंकिंचित्कदाचित्क्वाचिदस्तिहि ॥
देहांतेतुमणिद्वीपं ममयात्येवसर्वथा ॥ ३१ ॥

அவனுக்குத் துர்லபமானது எதுவும் எப்போதும் எவ்விடத்து மில்லை. தேகமுடிவில் எனது மணித்வீபத்தினை எல்லாவிதத்தினும் அடையவே செய்கின்றான். (௩க)

ज्ञेयोदेवीस्वरूपोऽसौ देवानित्यंनमंतितम् ॥
इतितेकथितंराजन्महादेव्याःप्रपूजनम् ॥ ३२ ॥

தேவியின் ஸ்வரூபமாகிய இது அறியத்தக்கதாம். தேவர்கள் நித்தியம் அதனை நமஸ்கரிக்கின்றனர். அரசனே! இவ்வாறு உனக்கு மகாதேவியின் பூஜனம் சொல்லப்பட்டது. (

विमृश्यैतदशेषेणाप्यधिकारानुरूपतः ॥
कुरुमेपूजनंतेन कृतार्थस्त्वंभविष्यसि ॥ ३३ ॥

அதனை முழுவதுமாக ஆராய்ந்து அதிகாராநுசாரமாக எனது பூஜனத்தினைச் செய்... ஞல் நீ கிருதார்த்தனுவாய். (௩௩)

इदंतुगीताशास्त्रंमे नाऽशिष्यायवदेत्क्वचित् ॥
नाऽभक्तायप्रदातव्यं धूर्तायचदुर्हृदे ॥ ३४ ॥

இந்த எனது கீதாசாஸ்திரத்தினை எவ்விடத்தும் சிஷ்யனல்லாதவனுக்குச் சொல்லலாகா... பக்தனல்லாதவனுக்குக் கொடுக்கலாகாது... ப்புத்தியான தூர்த்தனுக்குத் தரலாகாது.

एतत्प्रकाशनंमातु रुद्घाटनमुरोजयोः ॥
तस्मादवश्यंयत्नेन गोपनीयमिदंसदा ॥ ३५ ॥

இதனை வெளிப்படுத்தல் மாதாவின் ஸ்தனங்களை வெளிப்படுத்தலாகும். ஆதலால் இது... போதும் அவசியம் எத்தனத்தோடு இர...மாய் வைக்கத்தக்கதாம். (௩௫)

देयंभक्तायशिष्याय ज्येष्ठपुत्रायचैवहि ॥
सुशीलायसुवेषाय देवीभक्तियुतायच ॥ ३६ ॥

இது பக்தனுக்கும், சிஷ்யனுக்கும், ஜேஷ்ட புத்திரனுக்கும், நற்சீலனுக்கும், நல்வேஷமுடையவனுக்கும், தேவிபக்தி யுடைய வனுக்கும் கொடுக்கத் தக்கதாம். (கசு)

श्राद्धकाले पठेदेतद्ब्राह्मणानां समीपतः ॥
तृप्तास्तत्पितरः सर्वे प्रयांति परमं पदम् ॥ ३७ ॥

சிராத்தகாலத்தில் பிராஹ்மணர்களின் சமீபமாக இதனைப்படிக்க, அவனுடைய பிதிரர்கள் எல்லோரும் திருப்தர்களாய்ப் பரமபதத்தினை அடைகின்றனர். (கஎ)

व्यास उवाच ॥
इत्युक्त्वा सा भगवती तत्रैवांतरधीयत ॥
देवाश्च मुदिताः सर्वे देवीदर्शनतोऽभवत् ॥ ३८ ॥

வியாஸர் சொல்லலாயினார் :- இவ்வாறு கூறி அப்பகவதியானவள் அவ்விடத்திற்றானே மறைந்தனள். தேவர்களெல்லோரும் தேவியின் தரிசனத்தால் களித்தவராயினர். (கஅ)

व्यास उवाच ॥

ततोहिमालयेजज्ञे देवीहैमवतीतुसा ॥
यागौरीतिप्रसिद्धाऽसीद्दत्तासाशंकरायच ॥ ३९ ॥

அதன்பின் அந்த ஹைமவதியான தேவி ஹிமாலயன் வீட்டில் * அவதரித்தாள். எவள் கௌரி யென்னும் பெயரால் பிரசித்தமா யிருந்தாளோ அவள் ஸ்ரீ சங்கரருக்குக் கொடுக்கப் பட்டாள். (௩௯)

ततःस्कंधःसमुद्भूतस्तारकस्तेनपातितः ॥
समुद्रमंथनेपूर्वं रत्नान्यासुर्नराधिप ॥ ४० ॥

அதன்பின் ஸ்ரீ ஸ்கந்தர் பிறந்தார். அவரால் தாரகன் கொல்லப்பட்டான். அரசனே! முன் சமுத்திரம் கடைந்தபோது அநேக இரத்தினங்கள் வெளிப்பட்டன. (௪0)

---

* இக்கௌரியின் அவதாரம் ஜேஷ்டசுக்கில சதுர்த்தியி லாயிற்று என்று கிருத்தியாத்னாவலி கூறுகின்றது அது அருணோதயகாலத்தில் என்று மத்ஸ்ய புராணத்தில் தாரகாசுர யுத்தப் பிரஸ்தாவத்தில் சொல்லப்பட்டுளது.

तत्रदेवैःस्तुतादेवी लक्ष्मीप्राप्त्यर्थमादरा[illegible] ॥
तेषामनुग्रहार्थाय निर्गतातुरमाततः ॥ [illegible] ॥

அங்கு லக்ஷ்மியினது பிராப்தியின் [illegible] பெ
ட்டு தேவி தேவர்களால் ஸ்துதிக்கப்[illegible]
அவர்களது அநுக்கிரகத்தின் பொரு[illegible]
னின்று இரமை(லக்ஷ்மி)வெளிப்பட்[illegible]. ([illegible])

वैकुण्ठायसुरैर्दत्ता तेनतस्यशमोऽभवत् [illegible]
इतितेकथितंराजन्देवीमाहात्म्यमुत्तमम् ॥ [illegible]

அவள் தேவர்களால் வைகுண்ட [illegible]
கொடுக்கப்பட்டாள். அதனால் அவ[illegible]
முண்டாயிற்று. அரசனே! இவ்வா[illegible]
மான தேவியின் மாகாத்மியம் உனக்[illegible]
லப்பட்டது.

गौरीलक्ष्म्योःसमुद्भूति विषयंसर्वकामद[illegible] ॥
नवाच्यंत्वेतदन्यस्मै रहस्यंकथितंयतः ॥ ४३ ॥

கௌரி லக்ஷ்மிகளின் அவதார வி[illegible]ம் சர்வ
காமங்களையும் தருவதாம். எதனால் இரகசி
மாய்ச் சொல்லப்பட்டதோ அதனால் இ[illegible]
அந்நியனுக்குச் சொல்லலாகாது. ([illegible])

स्यभूतेयं गोपनीयाप्रयत्नतः ॥
समासेन यत्पृष्टंत्त्वयाऽनघ ॥ ४४ ॥

வடிவ இக்கீதை மிக்க முயற்சியினல்
ாய் வைக்கத்தக்கதாம். பாப மற்ற
உன்னல் கேட்கப்பட்டது எதுவோ
வதும் தொகுத்துக் கூறப்பட்டது. ()

वनंदिव्यं किंभूयःश्रोतुमिच्छसि ॥ ४५ ॥

திரமும் பாவனமும் திவ்வியமுமாம்.
ம் என்ன கேட்க விரும்புகின்றாய். ()

देवीभागवते महापुराणेऽष्टादशसाहस्र्यां
हितायां सप्तमस्कंधे देविगीतायां
दशमोऽध्यायः ॥

ஸ்ரீ தேவிகீதை
பத்தாமத்தியாயம்
முடிந்தது.
ஓம் தத் ஸத்.

சற்பொரு ளிந்நூற் காசான் சு

* யற்பொடு மிட்டை செய்வே

யற்பமுந் துன்ப மில்லா வகண்

தற்பதந் தன்னைச் சார்வர் சுமு

தேவியின் கீதை யன்பாற் றின

தாவலில் செல்வம் பந்து தன

மேவுவர் புரத்து மிக்க மேன்

றேவியின் வடிவ மாய சித்து

---

* அன்பு அற்பென வேறு